# 1. அமுதஊற்று



## பலவுள் தெரிக

1. ‘மெத்த வணிகலன்’ என்னும் தொடரில் தமிழழகனார் குறிப்பிடுவது – *செ-2
   **அ) வணிகக் கப்பல்களும் ஐம்பெரும் காப்பியங்களும்**
   ஆ) பெரும் வணிகமும் பெரும் கலன்களும்
   இ) ஐம்பெரும் காப்பியங்களும் அணிகலன்களும்
   ஈ) வணிகக் கப்பல்களும் அணிகலன்களும்

2. ***‘காய்ந்த இலையும் காய்ந்த தோகையும்’*** நிலத்துக்கு நல்ல உரங்கள். இத்தொடரில் அடிக்கோடிட்ட பகுதி குறிப்பிடுவது– *உ *[APR – 2023, AUG – 2022, SEP – 2021, [MDL - 19]*
   அ) இலையும் சருகும் ஆ) தோகையும் சண்டும் இ) தாளும் ஓலையும் **ஈ) சருகும் சண்டும்**

3. எந்தமிழ்நா என்பதைப் பிரித்தால் இவ்வாறு வரும்– *செ-1 *[SEP – 2021]*
   அ) எந்+தமிழ்+நா ஆ) எந்த+தமிழ்+நா **இ) எம்+தமிழ்+நா** ஈ) எந்தம்+தமிழ்+நா

4. ‘கேட்டவர் மகிழப் பாடிய பாடல் இது’– தொடரில் இடம்பெற்றுள்ள தொழிற்பெயரும் வினையாலணையும் பெயரும் முறையே– *இ *[PTA – 3]*
   அ) பாடிய; கேட்டவர் ஆ) பாடல்; பாடிய இ) கேட்டவர்; பாடிய **ஈ) பாடல்; கேட்டவர்**

5. வேர்க்கடலை, மிளகாய் விதை, மாங்கொட்டை ஆகியவற்றைக் குறிக்கும் பயிர்வகை - *உ *[PTA – 4, MAY–2022]*
   அ) குலை வகை **ஆ) மணி வகை**
   இ) கொழுந்து வகை ஈ) இலை வகை

## கூடுதல் வினாக்கள்

6. ‘சாகும் போதும் தமிழ் படித்துச் சாக வேண்டும் என்றன்
   சாம்பலும் தமிழ் மணந்து வேக வேண்டும்’ – என்று கூறியவர் : *செ-1 *[AUG – 2022]*
   அ) திரு.வி.க **ஆ) க. சச்சிதானந்தன்** இ) நப்பூதனார் ஈ) தனிநாயக அடிகள்

7. ‘மொழிஞாயிறு’ என்றழைக்கப்படுபவர் யார்? *உ *[AUG – 2022]*
   அ) தமிழழகனார் ஆ) கம்பர் **இ) தேவநேயப் பாவாணர்** ஈ) வைரமுத்து

8. மலர்விழி பாடினாள் - இத்தொடர் : *இ *[MAY – 2022]*
   அ) பொதுமொழி ஆ) தனிமொழி **இ) தொடர்மொழி** ஈ) அடுக்குத்தொடர்

9. பொருத்துக. *இ *[SEP – 2020]*

| | | |
|---|---|---|
| 1. | வினைமுற்று | - i) கெடு |
| 2. | தொழிற்பெயர் | - ii) கட்டு |
| 3. | முதனிலைத் தொழிற்பெயர் | - iii) எய்தல் |
| 4. | வினையடி | - iv) வந்தான் |

**தெரிவுகள்**

| | | | | |
|---|---|---|---|---|
| அ) | 1-iv | 2-iii | 3-ii | 4-i |
| ஆ) | 1-iii | 2-i | 3-iv | 4-ii |
| **இ)** | **1-iv** | **2-iiii** | **3-i** | **4-ii** |
| ஈ) | 1-i | 2-iii | 3-ii | 4-iv |

10. எள்ளிலிருந்து எண்ணெய் எடுத்தலின் மிஞ்சுவதைக் குறிக்கும் சரியான சொல் *உ *[PTA – 1, 2]*
    அ) எள்கசடு **ஆ) பிண்ணாக்கு** இ) ஆமணக்கு ஈ) எள்கட்டி

11. இமைகளை மூடியபடி எழுதும் ஆற்றலைக் கற்றுக் கொண்டவர் *உ *[PTA – 2]*
    அ) தமிழழகனார் ஆ) அப்பாத்துரையார் இ) தேவநேயப் பாவாணர் **ஈ) இரா. இளங்குமரனார்**

12. தொழிலைச் செய்யும் கருத்தாவைக் குறிப்பது *இ *[PTA - 1]*
    அ) தொழிற்பெயர் ஆ) முதனிலை திரிந்த தொழிற்பெயர்
    இ) முதனிலைத் தொழிற்பெயர் **ஈ) வினையாலணையும் பெயர்**

13. இலையுதிர்காலம் ...... சருகாயின! *இ [PTA - 4]
மழைக்காலம் ...... தழைத்தன!
சருகுகளோ செழுமையான உரங்களாயின!
- புதுக்கவிதைக்குப் பொருத்தமான எதுகை, மோனைச் சொற்களை இட்டு நிரப்புக.
அ) மரங்களெல்லாம், கிளைபரப்பின ஆ) காடெல்லாம், வளர்ந்தன
**இ) இலைகளெல்லாம், மரங்களெல்லாம்** ஈ) மலையெல்லாம், முளைந்தன

14. வெ∴குவார்க்கில்லை, உரனசைஇ- இச்சொற்களில் உள்ள அளபெடைகள் *இ [PTA -6]
**அ) ஒற்றளபெடை, சொல்லிசை அளபெடை** ஆ) இன்னிசை அளபெடை, சொல்லிசை அளபெடை
இ) சொல்லிசை அளபெடை, ஒற்றளபெடை ஈ) ஒற்றளபெடை, இன்னிசை அளபெடை

## குறுவினா

**1. 'வேங்கை' என்பதைத் தொடர்மொழியாகவும் பொதுமொழியாகவும் வேறுபடுத்திக் காட்டுக.** *இ [PTA - 2]
- ✱ வேங்கை - வேம்+கை என பிரிந்து, தொடர்மொழியாக "வேகின்ற கை" என்ற பொருள் தருகிறது.
- ✱ வேங்கை - பொதுமொழியாக வேங்கை என்னும் மரத்தைக் குறிக்கிறது.

**2. "மன்னும் சிலம்பே! மணிமே கலைவடிவே!** *செ-1 [MDL - 19, MAY – 2022]
**முன்னும் நினைவால் முடிதாழ வாழ்த்துவமே! - இவ்வடிகளில் இடம்பெற்றுள்ள காப்பியங்களைத் தவிர எஞ்சியுள்ள ஐம்பெருங்காப்பியங்களின் பெயர்களை எழுதுக.**
➔ எஞ்சியுள்ள காப்பியங்கள் மூன்று :
✱ சீவக சிந்தாமணி ✱ வளையாபதி ✱ குண்டலகேசி

**3.** ***ஒரு தாற்றில் பல சீப்பு வாழைப்பழங்கள் உள்ளன.***
***ஒரு சீப்பில் பல தாறு வாழைப்பழங்கள் உள்ளன.***
***ஒரு சீப்பில் பல வாழைப்பழங்கள் உள்ளன.***
**மேற்கண்ட தொடர்களில் சரியான தொடர்களைச் சுட்டிக்காட்டி, எஞ்சிய பிழையான தொடரிலுள்ள பிழைக்கான காரணத்தை எழுதுக.** *உ

**சரியான தொடர்கள் :**
1. ஒரு தாற்றில் பல சீப்பு வாழைப்பழங்கள் உள்ளன.
2. ஒரு சீப்பில் பல வாழைப்பழங்கள் உள்ளன.

**பிழையான தொடர் :** ஒரு சீப்பில் பல தாறு வாழைப்பழங்கள் உள்ளன.
**பிழைக்கான காரணம் :** ஒரு தாற்றில்தான் பல சீப்பு வாழைப்பழங்கள் இருக்கும்.

**4. "உடுப்பதூஉம் உண்பதூஉம் காணின் பிறர்மேல்**
**வடுக்காண் வற்றாகும் கீழ்" - இக்குறளில் அமைந்துள்ள அளபெடையின் வகையைச் சுட்டி, அதன் இலக்கணம் தருக.** *இ [PTA – 6, AUG – 2022]
- ✱ **அளபெடை வகை :** உடுப்பதூஉம், உண்பதூஉம் **இன்னிசை அளபெடை** ஆகும்.
- ✱ **இலக்கணம் :** செய்யுளில் ஓசை குறையாத இடத்தும் இனிய ஓசைக்காக குறில் நெடிலாகி அளபெடுப்பது இன்னிசை அளபெடை ஆகும்.

**5. தற்கால உரைநடையில் சிலேடை அமையும் நயத்திற்கு ஓர் எடுத்துக்காட்டுத் தருக.** *செ-2
- ✱ ஒரு சொல்லோ, சொற்றொடரோ இருபொருள்பட வருவது **இரட்டுற மொழிதல் அணி (அ) சிலேடை** எனப்படும்.
- ✱ **தற்கால உரைநடையில் சிலேடை அமையும் நயம் :** "உப்புமாவைத் தின்ன முடியலையோ! உப்புமா ஏன் தொண்டையைக் குத்துகிறதா!" என அம்மா குழந்தையை கோபித்துக் கொண்டார். அருகில் இருந்த கி.வா.ஜகந்நாதன் உப்புமாவை வாயில் போட்டுக்கொண்டு, "ஆமாம். இந்த உப்புமா தொண்டையைக் குத்தத்தான் செய்யும்" என்றார். ஏன் என்று கேட்க, **"ஊசி இருக்கிறது"** என்று கூறிச் சிரித்தார்!

## கூடுதல் வினாக்கள்

**6. தமிழ்நாட்டில் மட்டும் விளையக்கூடிய சிறுகூலங்களின் பெயர்களை எழுதுக.** *உ [APR – 2023]

✱ வரகு ✱ காடைக்கண்ணி ✱ குதிரைவாலி

**7. பூவின் நிலைகளை வரிசைப்படுத்தி எழுதுக.** *உ [AUG – 2022]

அ) அரும்பு - பூவின் தோற்றநிலை

ஆ) போது - பூ விரியத் தொடங்கும் நிலை

இ) மலர் (அலர்) - பூவின் மலர்ந்த நிலை

ஈ) வீ - மரஞ்செடியினின்று பூ கீழே விழுந்த நிலை

உ) செம்மல் - பூ வாடின நிலை

**8. தமிழ்ச்சொல் வளம் குறித்துக் கால்டுவெல் குறிப்பிடும் கருத்தை எழுதுக.** *உ [PTA– 1]

**கால்டுவெல் குறிப்பிடும் கருத்து :**

✱ தமிழில் உள்ள ஒருபொருட் பலசொல் வரிசைகள் பிற திராவிட மொழிகளில் இல்லை.

✱ தமிழில் மட்டும் பயன்படுத்தப்படும் சொற்கள் மட்டுமின்றி பிற திராவிட மொழிகளுக்கு உரியதாகக் கருதப்படும் சொற்களும் தமிழில் உள்ளன.

**9. "கொடுப்பதூஉம் துய்ப்பதூஉம் இல்லார்க்கு அடுக்கிய** *இ [PTA - 5]
**கோடிஉண் டாயினும் இல்" - இக்குறளில் வரும் அளபெடைகளை எடுத்து எழுதுக.**

கொடுப்பதூஉம், துய்ப்பதூஉம் - இன்னிசை அளபெடை

## சிறுவினா

**1. தமிழன்னையை வாழ்த்துவதற்கான காரணங்களாகப் பாவலரேறு சுட்டுவன யாவை?** *செ-1 [PTA–2, MAY-2022]

✱ பழமைக்குப் பழமையாய்த் தோன்றிய நறுங்கனி, தமிழ்.

✱ குமரிக் கண்டத்தில் நிலைத்து அரசாண்ட மண்ணுலகப் பேரரசு, தமிழ்.

✱ பாண்டிய மன்னனின் மகள், தமிழ்.

✱ திருக்குறளின் பெரும் பெருமைக்குரியது, தமிழ்.

✱ பத்துப்பாட்டாகவும், எட்டுத்தொகையாகவும், பதினெண்கீழ்க்கணக்கு நூல்களாகவும், ஐம்பெருங்காப்பியங்களாகவும் சிறப்புறத் திகழுவது, தமிழ்.

✱ எனவே, தமிழன்னையைத் தலைபணிந்து வாழ்த்துவதாகப் பாவலரேறு சுட்டிக்காட்டுகிறார்.

**2. 'புளியங்கன்று ஆழமாக நடப்பட்டுள்ளது' இதுபோல் இளம் பயிர் வகை ஐந்தின் பெயர்களைத் தொடர்களில் அமைக்க.** *உ [PTA – 3, MAY-2022]

✱ **கன்று** - **புளியங்கன்று** ஆழமாக நடப்பட்டுள்ளது.

✱ **நாற்று** - சந்தையிலிருந்து **கத்திரி நாற்றுகள்** வாங்கி வந்து தோட்டத்தில் நட்டுள்ளேன்.

✱ **குருத்து** - தோட்டத்தில் **வாழைக்குருத்துகள்** நன்கு வளர்ந்துள்ளன.

✱ **பிள்ளை** - நேற்று எங்கள் தோப்பில் **தென்னம்பிள்ளை**களை நட்டோம்.

✱ **வடலி** - சாலை ஓரத்தில் நடப்பட்ட **பனை வடலிகள்** நன்கு வளர்ந்துள்ளன.

✱ **பைங்கூழ்** - எங்கள் **நெல்லின் பைங்கூழ்** நன்றாக வளர்ந்துள்ளது.

**3. 'அறிந்தது, அறியாதது, புரிந்தது, புரியாதது, தெரிந்தது, தெரியாதது, பிறந்தது, பிறவாதது'** இவை அனைத்தையும் யாம் அறிவோம். அதுபற்றி உமது அறிவுரை எமக்குத் தேவை இல்லை. எல்லாம் எமக்குத் தெரியும். **இக்கூற்றில் தடித்த எழுத்துகளில் உள்ள வினைமுற்றுகளைத் தொழிற்பெயர்களாக மாற்றி எழுதுக.** *இ

| வினைமுற்று | தொழிற்பெயர் | வினைமுற்று | தொழிற்பெயர் |
|---|---|---|---|
| அறிந்தது | **அறிதல்** | அறியாதது | **அறியாமை** |
| புரிந்தது | **புரிதல்** | புரியாதது | **புரியாமை** |
| தெரிந்தது | **தெரிதல்** | தெரியாதது | **தெரியாமை** |
| பிறந்தது | **பிறத்தல்** | பிறவாதது | **பிறவாமை** |

4. **தமிழழகனார் தமிழையும் கடலையும் இரட்டுறமொழியும் பாங்கினை விளக்குக.** *செ-2 *[APR – 2023, PTA - 6]*

| தமிழ் | கடல் |
|---|---|
| முத்தமிழ் - இயல், இசை, நாடகம் | முத்தினை அமிழ்ந்து எடுத்தல். |
| முச்சங்கம் - முதல், இடை, கடை | மூன்று சங்கு - வெண்சங்கு, சலஞ்சலம், பாஞ்சசன்யம் |
| ஐம்பெருங்காப்பியங்களை அணிகலனாக பெற்றது. | மிகுதியான வணிகக்கப்பல்கள் செல்லும்படி இருத்தல். |
| சங்கப் பலகையிலிருந்து சங்கப்புலவர்கள் பாதுகாத்தல் | நீரலையைத் தடுத்து நிறுத்தி சங்கினைக் காத்தல் |
| இவ்வாறாக, தமிழையும் கடலையும் இரட்டுற மொழிதல் பாடல்வழி தமிழழகனார் ஒப்பிடுகிறார். | |

## கூடுதல் வினா

5. **தொழிற்பெயருக்கும் வினையாலணையும் பெயருக்கும் உள்ள வேறுபாடு யாது?** *இ *[MDL–19]*

| தொழிற்பெயர் | வினையாலணையும் பெயர் |
|---|---|
| ✱ வினை, பெயர்த்தன்மையாகி வினையை உணர்த்தும். | ✱ தொழிலைச் செய்யும் கருத்தாவைக் குறிக்கும். |
| ✱ காலம் காட்டாது. | ✱ காலம் காட்டும். |
| ✱ படர்க்கைக்கே உரியது | ✱ மூவிடத்திற்கும் உரியது. |
| ✱ **எ.கா.** பாடுதல், படித்தல் | ✱ **எ.கா.** பாடியவள், படித்தவர். |

## நெடுவினா

1. **மனோன்மணீயம் சுந்தரனாரின் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலையும், பெருஞ்சித்திரனாரின் தமிழ் வாழ்த்தையும் ஒப்பிட்டு மேடைப்பேச்சு ஒன்றை உருவாக்குக.** *செ-1 *[PTA–5, AUG–2022]*

**அ) முன்னுரை**

அனைவருக்கும் வணக்கம். நாம் நாள்தோறும் வழிபாட்டுக் கூட்டத்தில் பாடும் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடலின் பொருளையும், நம் பாடப்பகுதியில் கொடுக்கப்பட்டுள்ள பெருஞ்சித்திரனாரின் தமிழ் வாழ்த்துப்பாடலையும் ஒப்பிட்டு, அதனைப் பற்றிய விளக்கங்களை விரிவாக பேச வந்துள்ளேன்.

**ஆ) தமிழின் பிறப்பு – குமரிக்கண்டம் :**

- **சுந்தரனாரின் தமிழ்த்தாய் வாழ்த்து** : ஒலி எழுப்பும் நீர் நிறைந்த கடலெனும் ஆடையுடுத்திய நிலமெனும் பெண்ணாக தமிழை வருணிக்கின்றார்.
- **பெருஞ்சித்திரனாரின் தமிழ் வாழ்த்து** : கடல் கொண்ட குமரிக்கண்டத்தில் நிலைத்து மண்ணுலகம் போற்ற அரசாண்ட பேரரசு என வருணிக்கின்றார்.

**இ) தமிழ்த்தாயின் பெருமைகள் :**

- **சுந்தரனாரின் தமிழ்த்தாய் வாழ்த்து** : தமிழ்த்தாயின் முகமாக பாரத கண்டம் திகழ்கிறது. அம்முகத்திற்குப் பிறைநிலவு போன்ற நெற்றியாக தக்காணப்பகுதி அமைந்துள்ளது. நெற்றியில் நறுமணமிக்க பொட்டு வைத்ததுபோல் தமிழகம் உள்ளது என கூறுகிறார்.
- **பெருஞ்சித்திரனாரின் தமிழ் வாழ்த்து** : தமிழன்னை பாண்டியனின் மகள் எனவும், திருக்குறளின் பெருமைக்குரியவள் எனவும், பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதினெண்கீழ்க்கணக்கு, சிலப்பதிகாரம், மணிமேகலை போன்ற உலகம் போற்றும் இலக்கியங்களைத் தந்தவள் என கூறுகிறார்.

**ஈ) உலகெங்கும் நிறைந்த மொழி – தமிழ் :**

- **சுந்தரனாரின் தமிழ்த்தாய் வாழ்த்து** : தமிழ்த்தாயின் திலகத்தின் மணம் எல்லோரையும் இன்புறச் செய்வதுபோல தமிழ்மொழி உலகின் எல்லாத்திசைகளிலும் புகழ்பெற்ற மொழியாக இருக்கிறது.
- **பெருஞ்சித்திரனாரின் தமிழ் வாழ்த்து** : பழம்பெருமையும் தனிச்சிறப்பும் கொண்டது. வேற்றுமொழியார் புகழ்ந்துரைக்கும் அளவிற்கு உலகின் எல்லாத் திசைகளிலும் உயிர்ப்போடு விளங்குகிறது என கூறுகிறார்.

**உ) தமிழ் வாழ்க!**

- **சுந்தரனாரின் தமிழ்த்தாய் வாழ்த்து** : இளமையாக இருக்கின்ற தமிழ்மொழியே, உன் சிறப்பான திறமையை வியந்து உன் வயப்பட்டு எங்கள் செயல்களை மறந்து உன்னை வாழ்த்துகிறோம் என கூறுகிறார்.
- **பெருஞ்சித்திரனாரின் தமிழ் வாழ்த்து** : வண்டானது செந்தாமரைத் தேனைக் குடித்துச் சிறகசைத்துப் பாடுவது போன்று, நாங்கள் தமிழாகிய உன்னைச் சுவைத்து, உன் பெருமையை எங்கும் முழங்குகின்றோம் என்று கூறுகின்றார்.

ஊ) முடிவுரை

மனோன்மணீயம் சுந்தரனார் மற்றும் பெருஞ்சித்திரனார் இருவரும் தமிழ்த்தாய் வாழ்த்து மற்றும் தமிழ் வாழ்த்துப் பாடல் மூலம் தமிழ் மொழியின் பெருமைகளையும், சிறப்புகளையும் அழகாக சிறப்பித்து புகழ்ந்ததை விளக்கினேன். இந்த வாய்ப்பை எனக்கு அளித்தமைக்கு நன்றி கூறி விடை பெறுகிறேன்.

நன்றி ! வணக்கம் !

**2. தமிழின் சொல்வளம் பற்றியும் புதிய சொல்லாக்கத்திற்கான தேவை குறித்தும் தமிழ் மன்றத்தில் பேசுவதற்கான உரைக் குறிப்புகளை எழுதுக.** *உ *[PTA - 3, SEP – 2021, MAY-2022]*

| குறிப்புச்சட்டகம் |
|---|
| ❋ முன்னுரை |
| ❋ சொல்வளம் |
| ❋ சொல்லாக்கத்திற்கான தேவை |
| ❋ முடிவுரை |

**முன்னுரை**

காலவெள்ளத்தில் கரைந்துபோன மொழிகளுக்கிடையில் நீந்தித் தன்னை நிலைநிறுத்திக் கொண்டுள்ளது தமிழ். என்ன வளம் இல்லை? என்று எண்ணி வியக்கத்தக்கவாறு பல்வேறு சிறப்பியல்புகளைக் கொண்டு விளங்குகிறது நம் செந்தமிழ்மொழி. அனைத்து வளமும் உண்டென்று விடைபகர்கிறது, நம் தமிழ்ச்சொல் வளம்.

**சொல்வளம் :**

- ❋ சொல்வளம் இலக்கியச் செம்மொழிகளுக்கெல்லாம் பொதுவாயினும், தமிழ் அதில் தலைசிறந்ததாகும்.
- ❋ சொல்லில்தான் உணர்வும் பொருளும் பொதிந்து கிடக்கின்றன.
- ❋ ஒரு பொருள் குறித்துவரும் பல சொற்களும் பல பொருள் குறித்து வரும் ஒரு சொல்லும் தமிழ்மொழியின் சொல்வளங்களுள் ஒன்று.
- ❋ உதாரணமாக, ஆங்கிலத்தில் இலையைக் குறிக்க Leaf என ஒரேசொல் உள்ளது. ஆனால் தமிழில், தாள், இலை, தோகை, ஓலை என பல வகைகளில் இலையின் தன்மையை வைத்து பாகுபாடு செய்தனர்.
- ❋ தமிழில் மட்டும் பயன்படுத்தப்படும் சொற்கள் மட்டுமின்றி பிற திராவிட மொழிகளுக்கு உரியதாகக் கருதப்படும் சொற்களும் தமிழில் உள்ளன. சங்க இலக்கியத்தில் இதனை அதிகமாகக் காணலாம்.

**சொல்லாக்கத்திற்கான தேவை :**

- ❋ மொழியே பண்பாட்டின் அடையாளம். அதை நிலைநாட்ட புதிய சொல்லாக்கம் தேவை.
- ❋ சொல்லாக்கத்திற்கான தேவையானது அதன் பயன்பாட்டு முறையைக் கொண்டே அமைகிறது. எனவே நம் தமிழ்மொழி இன்றைய அறிவியல் முன்னேற்றத்திற்கேற்ப சொல் வளத்தைப் பெருக்க வேண்டும்.
- ❋ இன்றைய அவசர யுகத்தில் தமிழின் பயன்பாடு குறைந்து வருவதால் இலக்கியங்களும் அதில் கையாளும் சொல்வளமும் குறைந்து வருகின்றன.
- ❋ இலக்கிய மேன்மைக்கும் மக்கள் அறிவுடையவர்களாக உயர்வதற்கும் புதிய சொல்லாக்கம் தேவை.
- ❋ தமிழின் பெருமையும் மொழியின் சிறப்பும் குன்றாமல் இருக்க தமிழில் புதிய சொல்லாக்கம் தேவை.
- ❋ உலகின் ஆய்வுச் சிந்தனைகளைத் தமிழ்ப்படுத்தி எழுதும் போது பிறமொழி அறியாத தமிழரும் அவற்றைக் குறித்து அறிந்துகொள்ள முடியும்.
- ❋ மக்களிடையே பரந்த மனப்பான்மையையும், ஆளுமையையும் நிலைநாட்ட புதிய சொல்லாக்கம் தேவைப்படுகிறது.
- ❋ பிறமொழிச்சொற்கள் கலவாமல் இருக்க காலத்திற்கேற்ப புதிய கலைச்சொல்லாக்கம் ஏற்படுத்த வேண்டும்.

**முடிவுரை**

மென்மையான தமிழை மேன்மையாக்க அறிவியல் தொழில்நுட்பச் சொற்களைத் தமிழ்ப்படுத்தி தமிழின் பெருமையை உலகிற்குக் கொண்டு செல்ல வேண்டும். காலத்திற்கு ஏற்பச் சொல்வளம் பெருகும் வகையில் நாம் இலக்கியங்களை இயற்றிடுவோம்.

*தமிழ்வளம் காப்போம்! சொல்வளம் பெருக்குவோம்!*

**3. ஒரு பக்க அளவில் உரையாடல் எழுதுக.** *து *[PTA – 2]*

**சூழல்** - வெளிநாட்டிலிருந்து உங்கள் இல்லத்திற்கு வந்திருக்கும் உறவினரின் மகளுக்குத் தமிழ் மொழியைப் பேச மட்டுமே தெரியும். ஆங்கில இலக்கியம் படித்த அவரிடம் தமிழ் உரைநடையின் சிறப்புப் பற்றி உரையாடுதல்.

**இத்தாலியிலிருந்து, தமிழ்நாட்டிற்குத் திரும்பிய பழனியின் அண்ணன் மகள் சசிகலாவும், பழனியும் தமிழ் உரைநடையின் சிறப்புகளைப் பற்றி உரையாடுகின்றனர்.**

**பழனி** : அன்பு மகளே! பல ஆண்டுகள் கழித்து உன்னை நேரில் பார்ப்பதில் மிக்க மகிழ்ச்சியடைகிறேன்.

**சசிகலா:** அயல்நாட்டில் வாழ்ந்தாலும், தாய்நாட்டிற்கு வந்தால் தனி புத்துணர்ச்சிதான் சித்தப்பா.

**பழனி** : அலைபேசியில் தமிழ் உரைநடையின் சிறப்புகள் பற்றி கேட்டிருந்தாயல்லவா? இப்போது பேசுவோமா?

**சசிகலா:** நான் ஆவலுடன் உள்ளேன்! உரைநடைக்கும் உரையாடலுக்கும் வித்தியாசம் என்ன?

**பழனி** : நாம் பேசுகிறோமே அதுதான் உரையாடல். பேசினால் உரையாடல், எழுதினால் உரைநடை.

**சசிகலா:** உரைநடைக்கு ஏதேனும் எடுத்துக்காட்டுக் கூற முடியுமா சித்தப்பா!

**பழனி** : ஏன் முடியாது! "களம்புகத் துடித்து நின்ற உனக்கு, வெற்றிச்சாறு கிடைத்துவிட்டது, உண்டு மகிழ்ந்தாய் உன் புன்னகைதான் அதற்குச் சான்று" இது அறிஞர் அண்ணாவின் உரைநடை.

**சசிகலா:** சிறப்பு!. ஆங்கிலத்தில் analogy என்பதற்கு தமிழில் என்ன பயன்படுத்துகிறீர்கள் சித்தப்பா?

**பழனி** : செய்யுளில் எடுத்துக்காட்டு உவமை அணி என்கிறோம். உரைநடையில் இணை ஒப்பு என்கிறோம்.

**சசிகலா:** இலக்கணை என்பதன் பொருள் என்ன சித்தப்பா!

**பழனி** : அஃறிணைப் பொருள்களையும் உயர்திணையாகக் கருதிக் கற்பனை செய்து எழுதுவதே இலக்கணை என்கிறோம். தமிழ்த்தென்றல் திரு.வி.கலியாணசுந்தரனார் எழுதியுள்ளவை

- சோலையில் புகுவேன்; மரங்கள் கூப்பிடும், விருந்து வைக்கும், ஆலமர நிழலில் அமர்வேன்;
- ஆல். 'என் விழுதைப் பார். அந்த அரசுக்கு இஃது உண்டா?'
- அரசு. 'யான் விழுதின்றி வானுற ஓங்கிநிற்கிறேன், என்னை மக்கள் சுற்றிச் செல்கிறார்கள்.'
- வேம்பு, 'என்நிழல் நலஞ்செய்யும். என் பூவின் குணங்களைச் சொல்கிறேன் வா!'

**சசிகலா:** அருமை சித்தப்பா! இதுதவிர வேறு ஏதேனும் சிறப்பு உரைநடையில் உண்டா?

**பழனி** :
- முரண்படுவது போல இருக்கும்; உண்மையில் முரண்படாத சொற்கள் **'முரண்படு மெய்ம்மை'**. எ.கா. 'இந்த உலகத்தில் பயம் என்ற ஒன்றிற்குத் தவிர வேறு எதற்கு நாம் பயப்படவேண்டும்?'
- முரண்பட்ட சொற்களைச் சேர்த்து எழுதுவது **சொல் முரண்**. எ.கா. 'கலப்பில்லாத பொய்...'
- சொல்லும் முறையில் அழுத்தம் கொடுப்பதற்காக எதிரும் புதிருமான முரண்படும் கருத்துகளை அமைத்து எழுதுவதை **எதிரிணை இசைவு** என்கிறோம்.

இது போன்று பல உள்ளன.

**சசிகலா:** மிக்க நன்றி சித்தப்பா! நீங்கள் தமிழ் உரைநடைச் செழுமை பற்றிக் கூறக் கூற மேலும் அவற்றைப் படித்து இன்புற அவாவுறுகிறேன் சித்தப்பா!

# 2. உயிரின் ஓசை





## பலவுள் தெரிக

1. “உனக்குப் பாட்டுகள் பாடுகிறோம் *செ-1 *[SEP-2020]*
உனக்குப் புகழ்ச்சிகள் கூறுகிறோம்” - பாரதியின் இவ்வடிகளில் இடம்பெற்றுள்ள நயங்கள் யாவை?
அ) உருவகம், எதுகை **ஆ) மோனை, எதுகை** இ) முரண், இயைபு ஈ) உவமை, எதுகை

2. **செய்தி: 1** - ஒவ்வோர் ஆண்டும் ஜூன் 15ஐ உலகக் காற்று நாளாகக் கொண்டாடி வருகிறோம்.
**செய்தி: 2** - காற்றாலை மின் உற்பத்தியில் இந்தியாவில் தமிழகம் இரண்டாமிடம் என்பது எனக்குப் பெருமையே.
**செய்தி: 3** -காற்றின் ஆற்றலைப் பயன்படுத்திக் கடல்கடந்து வணிகம்செய்து அதில் வெற்றி கண்டவர்கள் தமிழர்கள்! *உ *[PTA – 5]*
அ) செய்தி 1 மட்டும் சரி ஆ) செய்தி 1, 2 ஆகியன சரி
இ) செய்தி 3 மட்டும் சரி **ஈ) செய்தி 1, 3 ஆகியன சரி**

3. “பாடுஇமிழ் பனிக்கடல் பருகி” என்னும் முல்லைப்பாட்டு அடி உணர்த்தும் அறிவியல் செய்தி யாது?
**அ) கடல் நீர் ஆவியாகி மேகமாதல்** ஆ) கடல் நீர் குளிர்ச்சி அடைதல் *செ-2 *[PTA - 6]*
இ) கடல் நீர் ஒலித்தல் ஈ) கடல் நீர் கொந்தளித்தல்

4. **‘பெரிய மீசை’** சிரித்தார் - வண்ணச் சொல்லுக்கான தொகையின் வகை எது? *இ *[AUG-2022, SEP-20]*
**அ) பண்புத்தொகை** ஆ) உவமைத்தொகை
இ) அன்மொழித்தொகை ஈ) உம்மைத்தொகை

5. பொருந்தும் விடைவரிசையைத் தேர்ந்தெடுக்க. *உ *[PTA - 3]*

| | | |
|---|---|---|
| அ) கொண்டல் | - | 1) மேற்கு |
| ஆ) கோடை | - | 2) தெற்கு |
| இ) வாடை | - | 3) கிழக்கு |
| ஈ) தென்றல் | - | 4) வடக்கு |

| தெரிவுகள் | | | | |
|---|---|---|---|---|
| அ) | 1 | 2 | 3 | 4 |
| **ஆ)** | ***3*** | ***1*** | ***4*** | ***2*** |
| இ) | 4 | 3 | 2 | 1 |
| ஈ) | 3 | 4 | 1 | 2 |

## கூடுதல் வினாக்கள்

6. தேர்ப்பாகன் - இத்தொடரில் அமைந்துள்ள தொகையைத் தெரிவு செய்க. *இ *[APR - 2023]*
அ) வினைத்தொகை **ஆ) உருபும் பயனும் உடன்தொக்க தொகை**
இ) பண்புத்தொகை ஈ) இருபெயரொட்டுப் பண்புத்தொகை

7. நீலச்சட்டை பேசினார் - இத்தொடரில் ‘நீலச்சட்டை’ என்னும் சொல்லுக்கான தொகையின் வகையைத் தேர்க. *இ *[SEP-21]*
அ) பண்புத்தொகை **ஆ) அன்மொழித்தொகை** இ) உவமைத்தொகை ஈ) உம்மைத்தொகை

8. காலம் கரந்த பெயரெச்சமே *இ *[PTA – 1]*
அ) பண்புத்தொகை ஆ) உவமைத்தொகை **இ) வினைத்தொகை** ஈ) அன்மொழித்தொகை

9. <u>சிவப்புச்சட்டை</u> பேசினார் - அடிக்கோடிட்ட சொல்லுக்கான தொகையின் வகை யாது? *இ *[PTA – 2]*
**அ) அன்மொழித்தொகை** ஆ) உவமைத்தொகை
இ) பண்புத்தொகை ஈ) உம்மைத்தொகை

10. புதிருக்கான விடையை வரிசைப்படி தேர்ந்தெடுக்க.
தவழும்போது ஒரு பெயர்
விழும்போது ஒரு பெயர்
உருளும்போது ஒரு பெயர்
திரண்டோடும் போது ஒரு பெயர் - அவை என்ன?

**தெரிவுகள்** *உ *[PTA – 3]*
அ) நீர், மழை, ஆறு, ஓடை
**ஆ) மேகம், மழை, ஆறு, வெள்ளம்**
இ) மாரி, கார், நீர், புனல்
ஈ) மழை, புனல், மேகம், நீர்

11. எழுகதிர், முத்துப்பல் - இச்சொற்களில் மறைந்துள்ள தொகைகள் முறையே — *இ [PTA – 2]
அ) வினைத்தொகை, பண்புத்தொகை ஆ) உவமைத்தொகை, பண்புத்தொகை
இ) உவமைத்தொகை, வினைத்தொகை **ஈ) வினைத்தொகை, உவமைத்தொகை**

12. காற்றை பாரதியார் 'மயலுறுத்து' அழைப்பதைக் குறிக்கும் சொற்றொடர் *செ-1 [PTA – 4]
அ) மணம் வீசும் காற்றாய் நீ வா **ஆ) மனதை மயங்கச் செய்யும் மணத்தோடு நீ வா**
இ) மயிலாடும் காற்றாய் நீ வா ஈ) மகரந்தம் சுமந்து கொண்டு நீ வா

13. 'சென்றிடுவீர் எட்டுத்திக்கும் -கலைச் *செ-1 [PTA – 5]
செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்' - பாரதியாரின் இக்கூற்று உணர்த்தும் கருத்து
அ) பலதுறை நூல்கள் தமிழில் உருவாக்கப்பட்ட வேண்டும்.
**ஆ) பலகலைகள் தமிழில் புதிதாகத் தோன்ற வேண்டும்**
இ) உலகெங்கும் காணப்படும் செல்வங்கள் தமிழகத்தில் வந்து சேர்தல் வேண்டும்.
ஈ) கலைச் செல்வங்களை உலகம் முழுவதும் பயணம் செய்து கண்டுகளிக்க வேண்டும்.

14. தமிழ்த்தொண்டு என்னும் தொடர்- *இ [PTA – 5]
அ) இருபெயரொட்டுப் பண்புத்தொகை ஆ) அன்மொழித்தொகை
**இ) 4ஆம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை** ஈ) வேற்றுமைத்தொகை

15. "காற்றுள்ள போதே தூற்றிக்கொள்" - இப்பழமொழி உணர்த்தும் பொருள். *உ [PTA – 6]
அ) காலம் வருமென்று காத்திருந்தால் செயல் கெட்டுவிடும்.
**ஆ) உரிய காலத்தில் ஒரு செயலை முழுமையாகச் செய்துவிட வேண்டும்.**
இ) உரிய காலத்தில் செயலுக்கான முயற்சியை மேற்கொள்ள வேண்டும்.
ஈ) உரிய காலத்தை உணர்ந்து உரிய செயலைத் தேடவேண்டும்.

## குறுவினா

1. 'நமக்கு உயிர் காற்று *உ [PTA – 1, MDL - 19]
காற்றுக்கு வரம் மரம் - மரங்களை
வெட்டி எறியாமல் நட்டு வளர்ப்போம்" — **இதுபோன்று உலகக் காற்று நாள் விழிப்புணர்வுக்கான இரண்டு முழக்கத்தொடர்களை எழுதுக.**
- ✱ மரங்களை வளர்ப்போம்!
  காற்றைச் சுத்தப்படுத்துவோம்!
- ✱ புகையைப் பகையாக்கு!
  காற்றை நட்பாக்கு!
- ✱ துளிர்க்கும் இலைகளால்
  உயிர்க்கும் ஆக்ஸிஜன்
  செழிக்கும் மானுடம்!

2. **வசன கவிதை - குறிப்பு வரைக.** *செ-1 [MAY-2022, SEP - 2021]
- ✱ உரைநடையும் கவிதையும் இணைந்து யாப்புக் கட்டுகளுக்கு அப்பாற்பட்டு உருவாக்கப்படும் கவிதை வடிவம் வசனகவிதை எனப்படுகிறது.
- ✱ வசன கவிதையைத் தமிழில் பாரதியார் அறிமுகப்படுத்தியுள்ளார்.
- ✱ இவ்வசன கவிதையே புதுக்கவிதை உருவாகக் காரணமாயிற்று.

3. **தண்ணீர் குடி, தயிர்க்குடம் ஆகிய தொகைநிலைத் தொடர்களை விரித்து எழுதுக; தொடரில் அமைக்க.**
✱ **தண்ணீர் குடி** - தண்ணீரைக் குடி - இரண்டாம் வேற்றுமைத் தொகை.
<u>**எ.கா :**</u> நான் **தண்ணீரைக் குடி**த்தேன். *இ [AUG – 2022, PTA - 4, SEP - 2020]
✱ **தயிர்க்குடம்** - தயிரை உடைய குடம் - இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்க தொகை.
<u>**எ.கா :**</u> நான் **தயிரை உடைய குடத்தைச்** சுமந்து வந்தேன்.

4. **பெற்றோர் வேலையிலிருந்து திரும்பத் தாமதமாகும்போது அழும் தம்பிக்கு நீங்கள் கூறும் ஆறுதல் சொற்களை எழுதுக.**
- ✱ அழாதே தம்பி. விரைவிலேயே அப்பாவும் அம்மாவும் வந்துவிடுவார்கள். *செ-2 [PTA - 4]
- ✱ உனக்கு என்ன வேண்டுமோ! என்னிடம் கேள், உனக்கு நான் தருவேன்.
- ✱ பயம் கொள்ளாமல் இரு. அழாதே. நான் உனக்குத் துணையாக இருக்கிறேன்.

5. **மாஅல் - பொருளும் இலக்கணக் குறிப்பும் தருக.** *செ-2
- ✱ **பொருள்** - திருமால்
- ✱ **இலக்கணக்குறிப்பு** - இசைநிறை (அ) செய்யுளிசை அளபெடை

## கூடுதல் வினாக்கள்

6. **'மகரந்தத் தூளைச் சுமந்து கொண்டு, மனத்தை மயலுறுத்துகின்ற இனிய வாசனையுடன் வா;' - என்ற பாடல் அடிகளில்,** *செ-1 [SEP – 2021]

   **அ) அடிமோனைச் சொற்களை எடுத்து எழுதுக.** மகரந்தத்; மயலுறுத்துகின்ற

   **ஆ) பாரதியார் எதனை வாசனையுடன் வரச் சொல்லுகிறார்?** காற்று

   **இ) சுமந்துகொண்டு - என்ற சொல்லைக் கொண்டு தொடர் ஒன்றை அமைக்க.**

   குழந்தைகள் புத்தகப் பைகளைச் **சுமந்துகொண்டு** பள்ளிக்கு சென்றனர்.

7. **காற்றின் வேகத்தைப் பற்றி எவ்விலக்கியங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது?** *உ [PTA -2]

   ❋ புறநானூறு-51: 'வளி மிகின் வலி இல்லை' என்று ஐயூர் முடவனார் காற்றின் ஆற்றலைச் சிறப்பித்துள்ளார்.

   ❋ புறநானூறு-55: 'கடுங்காற்று மணலைக் கொண்டு வந்து சேர்க்கிறது' என்று மதுரை இளநாகனார் காற்றின் வேகத்தை பற்றி குறிப்பிட்டுள்ளார்.

8. **ஹிப்பாலஸ் பருவக்காற்று குறிப்பு வரைக.** *உ [PTA - 5]

   ❋ கி.பி. முதல் நூற்றாண்டில் வாழ்ந்த கிரேக்க மாலுமி 'ஹிப்பாலஸ்', பருவக்காற்றின் உதவியினால் நடுக்கடல் வழியாக முசிறித் துறைமுகத்திற்குப் புதிய வழியைக் கண்டுபிடித்தார்.

   ❋ இப்புதிய வழி உதவியால் அதிக யவனக் கப்பல்கள் முசிறித் துறைமுகத்திற்கு விரைவாக வந்தன.

   ❋ யவனர், இப்பருவக்காற்றிற்கு அதைக் கண்டுபிடித்த ஹிப்பாலஸ் பெயரையே சூட்டினார்கள்.

9. **தொகைச் சொற்களைப் பிரித்து எழுதி, தமிழ் எண்ணுரு தருக.** *இ [PTA - 6]

   **முப்பாலை முழுமையாகத் தந்த தமிழின் சிறப்பினை ஐந்திணைகளில் அழகுற விளக்குபவை சங்க இலக்கியங்கள்.**

   ❋ முப்பால் – மூன்று பால் ; மூன்று – ௩ ❋ ஐந்திணை – ஐந்து திணை ; ஐந்து – ௫



## சிறுவினா

1. **உயிராக நான், பல பெயர்களில் நான், நான்கு திசையிலும் நான், இலக்கியத்தில் நான், முந்நீர் நாவாய் ஓட்டியாக நான்... முதலிய தலைப்புகளில் காற்று தன்னைப் பற்றிப் பேசுகிறது. இவ்வாறு 'நீர்' தன்னைப் பற்றிப் பேசினால்... உங்களுடைய கற்பனையில் தலைப்புகளை எழுதுக.** *உ [PTA - 6, SEP - 2020]

   ***நீர் தன்னைப் பற்றி பேசினால்...***

| | | |
|---|---|---|
| ❋ ஆறாக நான் | ❋ நீர்நிலைகளில் நான் | ❋ உலகின் முக்கால் பகுதி நான் |
| ❋ குளமாக நான் | ❋ தமிழ் இலக்கியத்தில் நான் | ❋ வீணாக கடலில் கலக்கும் நான் |
| ❋ கடலாக நான் | ❋ உயிருக்கு ஆதாரமாக நான் | ❋ புட்டிகளில் அடைக்கப்பட்ட நான் |
| ❋ அருவியாக நான் | ❋ உண்ணும் உணவாக நான் | ❋ வணிகப் பொருளாக நான் |
| ❋ மழையாக நான் | ❋ வேளாண்மையில் நான் | ❋ மனிதனால் சீர்கெட்டுப் போன நான் |

2. **சோலைக்(பூங்கா) காற்றும் மின்விசிறிக் காற்றும் பேசிக்கொள்வதுபோல் ஓர் உரையாடல் அமைக்க.** *செ-1 [APR – 2023, PTA - 2]

| | |
|---|---|
| **மின்விசிறிக் காற்று** | நான் மெதுவாகவும், வேகமாகவும் வீசுவேன்... உன்னால் வீசமுடியுமா? |
| **சோலைக் காற்று** | ஏன், என்னாலும் முடியுமே... என்னைப்போல் இதமான குளிர்ச்சியான காற்றை உன்னால் தர முடியுமா? நான் மனிதர்களுக்குத் தீங்கு செய்வதில்லை. |
| **மின்விசிறிக் காற்று** | வசதி படைத்தவர்களுக்கு நான் பல வண்ணங்களில், வடிவங்களில் கிடைக்கிறேன். என்னை வீட்டில் வைத்து அழகு செய்து கொள்வர். |
| **சோலைக் காற்று** | என்னால் பொருள்செலவு இல்லை. ஆனால் மின்சாரம் இல்லையென்றால் உன்னால் செயல்படவே முடியாது. உன்னால் மக்களுக்குச் செலவு தான்... |
| **மின்விசிறிக் காற்று** | ஆம் உண்மைதான். இருந்தாலும் நீ ஓய்வெடுக்கும் நேரங்களில் நான்தான் அவர்களுக்குக் காற்றினைத் தருகிறேன். |
| **சோலைக் காற்று** | ஆம். நம்மால் மனிதர்களுக்கு மகிழ்ச்சியே. நாம் இணைந்து காற்றை வழங்குவோம். |

**3. தோட்டத்தில் மல்லிகைப்பூ பறித்த பூங்கொடி, வரும்வழியில் ஆடுமாடுகளுக்குத் தண்ணீர்த் தொட்டியில் குடிநீர் நிரப்பினாள். வீட்டினுள் வந்தவள் சுவர்க்கடிகாரத்தில் மணி பார்த்தாள்.** *இ *[MAY – 2022, PTA-1]*
**- இப்பத்தியில் உள்ள தொகைநிலைத் தொடர்களின் வகைகளை எழுதுக.** *[APR-23]*

| தொடர் | விளக்கம் | தொகை வகை |
|---|---|---|
| **மல்லிகைப் பூ** | மல்லிகை-சிறப்புப்பெயர், பூ-பொதுப்பெயர் | இருபெயரொட்டுப் பண்புத்தொகை |
| **ஆடுமாடுகள்** | ஆடுகளும் மாடுகளும் | உம்மைத்தொகை |
| **தண்ணீர்த் தொட்டி** | தண்ணீரை உடைய தொட்டி | இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்கத்தொகை |
| **குடிநீர்** | குடித்த நீர், குடிக்கின்ற நீர், குடிக்கும் நீர் | வினைத்தொகை |
| **மணி பார்த்தாள்** | மணியைப் (ஐ) பார்த்தாள் | இரண்டாம் வேற்றுமைத் தொகை |
| **சுவர்க்கடிகாரம்** | சுவரின் கண் உள்ள கடிகாரம் | ஏழாம் வேற்றுமை உருபும் பயனும் உடன் தொக்கத்தொகை |

**4. மழைநின்றவுடன் புலப்படும் காட்சியை வருணித்து எழுதுக.** *பொது *[PTA – 4]*

**குறிப்பு : இலைகளில் சொட்டும் நீர் - உடலில் ஓடும் மெல்லிய குளிர் - தேங்கிய குட்டையில் 'சளப் தளப்' என்று குதிக்கும் குழந்தைகள் - ஓடும் நீரில் காகிதக் கப்பல்.**

- ✱ சிறு குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை அனைவருக்கும் மழை என்பது பிடித்தமான ஒன்று.
- ✱ மழையில் நனையும்போது உடலில் ஒரு சிலிர்ப்புத் தோன்றும். நேரம் ஆக ஆக வாய் புல்லாங்குழல் இசைக்கும்; விரல்கள் நர்த்தனமாடும். பற்கள் மத்தளம் தட்டும் ஒலியே ஒலி!
- ✱ மழைச்சாரலால் உடலில் ஓடும் மெல்லிய குளிரினை உணர்ந்து ரசிக்காதவர்களே இல்லை! நனையாமல் ஒதுங்கி இருப்பவரைக் கூட வருடிச் சென்று வருணனை புரியும்.
- ✱ மழைநீர் இலைகளில் விழுகின்றபோது இலைகள் அசையும், பளபளவென மின்னும். கண்ணாடி உருண்டைகள் போல் நீர்த்திவலைகள் இலைகளில் பட்டுச்சிதறும் அழகே அழகு!
- ✱ குட்டைகளில் 'சளப் தளப்' என்ற ஓசை எழ குழந்தைகளின் நடனம், காண்பவர் கண்ணைக் கவரும்.
- ✱ மழைநீரில் செலவு ஏதும் இல்லாமல் காகிதக்கப்பல்விட்டு மகிழும் சிறுவர்களின் ஆனந்தக்களிப்பு.
- ✱ இயற்கையின் வரமாகிய மழை, பெய்யும் பொழுதும் அழகு பெய்த பிறகும் அழகு.

## நெடுவினா

**1. முல்லைப் பாட்டில் உள்ள கார்காலச் செய்திகளை விவரித்து எழுதுக.** *செ-2 *[APR – 2023, PTA- 2]*

**முல்லைப்பாட்டின் கார்காலச்செய்திகள்**

முல்லை நிலத்தின் பெரும்பொழுதான கார்காலமும், சிறுபொழுதான மாலையும் எவ்வளவு அழகு நிறைந்தது என்பதை முல்லைப்பாட்டு விளக்குகிறது.

**அ) மழை மேகத்தின் தோற்றம்**

- ✱ அகன்ற உலகம் எங்கும் பெருமழை பொழிகிறது.
- ✱ திருமால் மாவலி மன்னனுக்கு நீர் வார்த்துத் தரும்பொழுது, மண்ணுக்கும் விண்ணுக்குமாகப் பேருருவம் எடுத்தது போல மழை மேகம் உயர்ந்து நின்றது.

**ஆ) பெருமழைப் பொழிவு**

ஒலிக்கும் கடலின் குளிர்நீரைப் பருகிய மேகம் பெருந்தோற்றம் கொண்டு, வலமாய் எழுந்து, மலையைச் சூழ்ந்து, விரைந்த வேகத்துடன் பெருமழையைப் பொழிகிறது.

**இ) விரிச்சி கேட்டல்**

முதிய பெண்கள் மாலை நேரத்தில் மிகுந்த காவலை உடைய ஊரின் புறத்தே சென்று, நெல்லையும் முல்லைப்பூவையும் தூவி தெய்வத்திடம் தலைவிக்காக நற்சொல் கேட்டு நின்றனர்.

**ஈ) ஆயர்குலப்பெண் இளங்கன்றை ஆற்றுப்படுத்துதல்**

- ✱ அப்பகுதியில் சிறுதாம்புக் கயிற்றால் கட்டப்பட்ட இளங்கன்று தன் தாயினைக் காணாது பசியால் வாடிக்கொண்டிருந்தது.
- ✱ ஓர் இடைமகள், அந்த இளங்கன்றிடம், 'உன் தாய்மார் இப்போது வந்துவிடுவர், வருந்தாதே' என்றாள்.

**உ) முதுபெண்டிர் தலைவியை ஆற்றுப்படுத்துதல்**

இந்த நிகழ்வைக் கண்ட முதுபெண்கள், தலைவிடம் 'நற்சொல்லை நாங்கள் கேட்டோம், உன் தலைவன் பகைவரை வென்று திறைப்பொருளோடு வருவது உறுதி. மனத்தடுமாற்றம் கொள்ளாதே!' என்று ஆற்றுப்படுத்தினர்.

2. புயலிலே ஒரு தோணி கதையில் இடம்பெற்றுள்ள வருணனைகளும் அடுக்குத் தொடர்களும் ஒலிக்குறிப்புச் சொற்களும் புயலில், தோணி படும்பாட்டை எவ்வாறு விவரிக்கின்றன? *து [ PTA – 1, SEP – 2020]

**புயலிலே ஒரு தோணி**

**முன்னுரை**

மனித வாழ்க்கையை போல இயற்கையும் இன்பம் துன்பம் நிறைந்தது. திரு.ப. சிங்காரம் அவர்கள் எழுதியுள்ள "புயலிலே ஒரு தோணி" என்ற புதினத்தில், வரும் வருணனை, அடுக்குத்தொடர் மற்றும் ஒலிக்குறிப்புச் சொற்களைப் பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

**கதைச்சுருக்கம் :**

பத்தொன்பதாம் நூற்றாண்டில் புலம்பெயர்ந்த நூலாசிரியர் புயலில் மாட்டிக்கொண்ட பொழுது, அதனை சமாளிக்க முடியாமல் அவர்கள் அடையும் துயரங்கள், இரண்டு நாட்கள் உணவின்றி அலையின் போக்கில் சென்று கரையைக் கண்ட அவர்களது அனுபவங்களைக் கற்பனை கலந்து தமிழ் சொற்களின் பெருமையை வெளிப்படுத்தும் விதமாக இக்கதையை எழுதியுள்ளார்.

**அடுக்குத்தொடர்கள் :**

- *கொட்டுகொட்டென்று* வெள்ளம் கொட்டியது.
- *கரை கரை* என சத்தமிட்டனர்.
- தொங்கான் *நடுநடுங்கித் தாவித்தாவிக் குதிகுதித்து விழுவிழுந்து*
- மீன்கள் இருபுறமும் *கூட்டம் கூட்டமாய்ப்* பறந்து விளையாடின.

**இரட்டைக்கிளவி :**

- *கிடுகிடுக்கும்* இடிமுழக்கத்துடன் மின்னல் கீற்றுகள் வானைப் பிளந்தன.
- எலும்புகள் முறிவது போல் *நொறுநொறு நொறுங்கல்* ஒலி.
- கடல் அலைகள் ஒன்றன் பின் ஒன்றாய் வந்து *மொத்து மொத்தென்று* கப்பலை மோதின.
- சுழன்று *கிறுகிறுத்து* கூத்தாடுகிறது.
- *சிலுசிலு மரமரப்பு*

**ஒலிக்குறிப்புச் சொற்கள் :**

- *நொய்ங் புய்ங், நொய்ங் புய்ங்* என இடி முழக்கம் செய்ய *சீனப் பிசாசுகள்* தாவி வீசுகின்றன. இது புயலின் தீவிரத்தை நமக்கு உணர்த்துகிறது.
- *மேகப்பொதிகள்* பரந்து திரண்டு *கும்மிருட்டாய்* இறுகி நின்றன.
- சூறாவளியும் மாரியும் கூடிக்கலந்து ஆடிக்குதித்துக் *கெக்கலித்தன.*

**புயல் வருணனை :**

- அலைகள் எண்ணெய் பூசியவைப் போல் மொழு மொழுவென நெளிந்தன.
- மலைத்தொடர் போன்ற அலைகள் மோதித் தாக்குகின்றன.
- அவுலியா மீன்கள் கண்மாயில் 'முதுகு தெரிய மூழ்கி நீந்தும் எருமைகளென' போன்ற உவமைகளை பயன்படுத்தி அழகாக வருணித்துள்ளார்.
- வானம் பிளந்து தீக்கக்கியது. சுழன்று சுழன்று கூத்தாடுகிறது கடலலை.
- கடல் வெறிக் கூத்தாட்டத்தால் தொங்கான் மூழ்கி சிப்பங்கள் கடலில் நீந்துகின்றன.
- வானம், கடல், காற்று, மழை ஒன்று சேர்ந்து கூக்குரலிட்டது.

இவ்வாறாக ஆசிரியர் இரட்டைக்கிளவி, அடுக்குத்தொடர், உவமைகளைக் கொண்டு புயலின் கோரத்தாண்டவத்தை வருணித்து நாமும் புயலில் மாட்டிக் கொண்டதைப் போன்ற உயிரோட்டத்தை ஏற்படுத்தியுள்ளார்.

**தோணி படும்பாடு :**

- மலைத்தொடர் போன்ற அலைகள் மோதித் தாக்குகின்றன.
- கடல் வெறிக் கூத்தாட்டத்தால் தொங்கான் மூழ்கி சிப்பங்கள் கடலில் நீந்துகின்றன. பாய்மரம் ஒடிந்து கிடக்கின்றது. மாலுமிகள் ஓட்டையை அடைக்கின்றனர்.
- தொங்கானில் இருந்த பொருட்கள் அங்குமிங்குமாய்ச் சிதறிக்கிடந்தன.
- பினாங்கு எப்போது வரும் என்ற கேள்விக்குப் பதில் இல்லை.
- தோணி பல இடர்பாடுகளைக் கடந்து சென்றது. புரட்டிப்போட்ட புயல் நின்றது.
- மறுநாள் காலை கடல் அலைகள் தொங்கானை மோதின.

**முடிவுரை**

இவ்வாறாக இரட்டைக்கிளவி, அடுக்குத்தொடர், ஒலிக்குறிப்புச்சொற்கள், உவமைகள் கொண்டு புயலின் கோரத்தாண்டவத்தையும் புயலில் தோணி படும்பாட்டையும் மிக அழகாய் வருணித்து நாமும் புயலில் மாட்டிக்கொண்டதைப் போன்ற உயிரோட்டத்தை ஏற்படுத்தி உள்ளார்.

**3.** மலர்ந்தும் மலராத பாதிமலர் போல
வளரும் விழி வண்ணமே - வந்து
விடிந்தும் விடியாத காலைப் பொழுதாக
விளைந்த கலை அன்னமே
நதியில் விளையாடி கொடியில் தலைசீவி
நடந்த இளந் தென்றலே - வளர்
பொதிகை மலைதோன்றி மதுரை நகர் கண்டு
பொலிந்த தமிழ் மன்றமே

*உ

| குறிப்புச்சட்டகம் |
|---|
| அ) மையக்கருத்து |
| ஆ) கவிதை நயம் |
| இ) தொடை நயங்கள் |
| • மோனை நயம் |
| • எதுகை நயம் |
| • இயைபு நயம் |
| • முரண் தொடை |
| ஈ) அணி நயம் |

- **கவிஞர் கண்ணதாசனின் இப்பாடலில் தவழும் காற்றையும் கவிதை நயத்தையும் பாராட்டி உரைசெய்க.**

**அ) மையக்கருத்து :**

இப்பாடலில் கவிஞர் குழந்தையின் இயற்கை அழகை வருணித்து பாடியுள்ளார். அதனை இயற்கையோடும் தமிழ் மொழியோடும் உருவகப்படுத்தி அழகுற பாடியுள்ளார் கவிஞர்.

**ஆ) கவிதை நயம் :**

பாடல் வரி : ***மலர்ந்தும் மலராத பாதிமலர் போல வளரும் விழி வண்ணமே***

**விளக்கம்:** பூவின் மலர்ந்தும் மலராத நிலை 'போது'. அதை 'பாதி மலர்' என்கிறார் கண்ணதாசன். பூவானது முழுமையாக மலர்ந்து விட்டால், எப்போது வாடுமோ? என்ற அச்சம் இருக்கும். மொட்டாக இருந்துவிட்டால், எப்போது மலரும்? என்ற ஏக்கம் இருக்கும். ஆனால் மலர்ந்து கொண்டே இருந்தால் மகிழ்ச்சி அதிகரித்துக்கொண்டே இருக்கும். குழந்தையின் முகத்தில் எப்போதும் மகிழ்ச்சியையே காண விரும்பிய கண்ணதாசனின் கவிநயம் போற்றுதலுக்குரியது.

பாடல் வரி : ***வந்து விடிந்தும் விடியாத காலைப் பொழுதாக விளைந்த கலை அன்னமே***

**விளக்கம்:** விடிந்தும் விடியாத காலைப்பொழுது அனைவருக்குமே புத்துணர்ச்சியையும் மகிழ்ச்சியையும் ஊக்கத்தையும் அளிக்கக்கூடியது. அப்படிப்பட்ட காலைப் பொழுதாக குழந்தையை உருவகப்படுத்தி உள்ளார். வெண்மை நிறம் உள்ளத் தூய்மையைப் புலப்படுத்தும். அப்படிப்பட்ட அழகு மிக்க, வெண்மை நிறம் படைத்த அன்னப் பறவையாக குழந்தையை உருவகப்படுத்திப் பாடியுள்ளார்.

பாடல் வரி : ***நதியில் விளையாடி கொடியில் தலைசீவி நடந்த இளம் தென்றலே***

**விளக்கம்:** நதியிலே கலந்து, கரைந்து, எழுந்து, நீந்திக் குளித்து விளையாடி, அங்குள்ள பல்வகை நறுமணமிக்க மலர்கள் தாங்கிய கொடிகளில் தலையைத் துவட்டி, தலைசீவி, அழகுபடுத்தி, இளந்தென்றலாய் நடந்துவருகிறது குழந்தை என உருவகப்படுத்திப் பாடுகிறார், கண்ணதாசன்.

பாடல் வரி : ***பொதிகை மலைதோன்றி மதுரை நகர் கண்டு பொலிந்த தமிழ் மன்றமே***

**விளக்கம்:** பொதிகை மலையில் தோன்றி, மதுரை மாநகரில் வளர்ந்த தமிழ் போல குழந்தை வளர வேண்டும் என்று அழகு தமிழாக குழந்தையை உருவகப்படுத்தியுள்ளார் கவிஞர்.

**இ) தொடை நயங்கள் :**

➔ **மோனை நயம்** : செய்யுளில் சீர்தோறும் அல்லது அடிதோறும் முதல் எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது மோனை நயமாகும்.

♣ ***எ.கா :*** **ம**லர்ந்தும் – **ம**லராத; **வி**டிந்தும் – **வி**டியாத – **வி**ளையாத; **ந**தியில் – **ந**டந்த;

➔ **எதுகை நயம்** : செய்யுளில் சீர்தோறும் அல்லது அடிதோறும் முதலெழுத்து அளவொத்து நிற்க இரண்டாம் எழுத்து ஒன்றிவரத்தொடுப்பது எதுகை நயமாகும்.

♣ ***எ.கா :*** ம**ல**ர்ந்தும் - ம**ல**ராத; வி**டி**ந்தும் - வி**டி**யாத

➔ **இயைபு நயம்** : ஒரு செய்யுளின் அடிதோறும் இறுதி எழுத்தோ, அசையோ, சீரோ ஒன்றிவரத்தொடுப்பது இயைபுத் தொடையாகும்.

♣ ***எ.கா.*** வண்ண**மே**, அன்ன**மே**, மன்ற**மே**

➔ **முரண் தொடை** : செய்யுளில், சொல் அல்லது பொருள் முரண்பட்டு நயம் பயக்கும் வகையில் அமைவது முரண் தொடை ஆகும்.

♣ ***எ.கா :*** **மலர்ந்தும் × மலராத, விடிந்தும் × விடியாத**

**ஈ) அணி நயம்** : மலர்ந்தும் மலராத பாதி மலர் போல – **'உவமை அணி'.**

## கூடுதல் வினாக்கள்

**4. முல்லைப்பாட்டின் காட்சிகளிலிருந்து சங்ககால மக்களின் வாழ்க்கைச் சூழலையும் நிகழ்கால வாழ்க்கைச் சூழலையும் ஒப்பிட்டு எழுதுக.** *செ-2 *[PTA – 4]*

| சங்ககால மக்களின் வாழ்க்கை | நிகழ்கால மக்களின் வாழ்க்கை |
|---|---|
| **தலைவனின் பிரிவு** | |
| போர் புரிய சென்ற தலைவனின் பிரிவை எண்ணி தலைவி மிகவும் வருத்தமடைகிறாள். | நாட்டை காவல் காக்க சென்ற இராணுவ வீரரான கணவனின் பிரிவை எண்ணி தவிக்கிறாள் மனைவி. |
| **முதியபெண்டிர் ஆற்றுப்படுத்துதல்** | |
| ஊரில் உள்ள முதிய பெண்கள் தலைவியை ஆற்றுப்படுத்தினர். பிறர் துன்பத்தை தன் துன்பமாகக்கருதி பொதுநலத்துடன் வாழ்ந்துள்ளனர். | இக்கால மக்கள் சற்று சுயநலமாக வாழ்ந்தாலும், நெருங்கிய உறவுகளாவது கணவனை பிரிந்த மனைவிக்கு ஆறுதல் கூறுவர். |
| **தெய்வத்தை தொழுதல்** | |
| நெல்லையும் முல்லைப்பூவையும் தூவி தெய்வத்தை வழிபடுவர். | விளக்கேற்றி, தேங்காய் பழம் வைத்து, காணிக்கை செலுத்தி தெய்வத்தை வழிபடுவர். |
| **உயிரினங்களின் மீதான அன்பு** | |
| இடைமகள், கன்றிற்கு ஆறுதல் கூறுவது, விலங்குகளுடன் உள்ள இணைப்பை காட்டுகிறது. | நிகழ்காலத்திலும் வீட்டு விலங்குகளை அன்புடன் கவனித்து வருகின்றனர், அவற்றுடன் பேசுகின்றனர். |

**5. 'புயலிலே ஒரு தோணி' கதைப்பகுதியில் இடம்பெறும் கடற்பயண நிகழ்வுகளை விவரித்து எழுதுக.** *[APR-23]*

**குறிப்புச்சட்டகம்**

* முன்னுரை
* புயலிலே சிக்கிய தோணி
* தோணி படும்பாடு
* கடலின் வெறிக்கூத்து
* கரைகண்ட தொங்கான்
* முடிவுரை

**முன்னுரை**

புலம்பெயர்ந்த தமிழர்கள் பற்றிய முதல் புதினம், "புயலிலே ஒரு தோணி". இப்புதினத்தின் 'கடற்கூத்து' பகுதியில் இடம்பெறும் கடற்பயண நிகழ்வுகளை விரிவாக காண்போம்.

**புயலிலே சிக்கிய தோணி :**

கொளுத்திக் கொண்டிருக்கும் வெயில் இமைநேரத்தில் மறைந்துவிட்டது; புழுங்கிற்று. மேகப் பொதிகள் பரந்து திரண்டு கும்மிருட்டாய் நின்றன. அலைகள் எண்ணெய் பூசியவை போல் மொழுமொழுவென நெளிந்தன. இடிமுழக்கத்துடன் மின்னல் கீற்றுகள் வானை பிளந்தன. சூறாவளியும், காற்றும், மழையும் கூடிக்கலந்தன. அது தொங்கானையும் அதிலுள்ளவற்றையும் உலுக்கியது. காற்றே இல்லாமல் ஒரே இறுக்கமாகக் காணப்பட்டது.

**தோணி படும்பாடு :**

தொங்கான் அப்படியும் இப்படியுமாய்த் தாவிக்குதித்து, திணறித் தத்தளிக்கிறது. மலைத்தொடர் போன்ற அலைகள் தொங்கானை மோதித் தாக்குகின்றன. கிடுகிடுக்கும் நொறுநொறு ஆகிய இரட்டைக் கிளவிகளையும் "கொட்டு கொட்டென்று" என அடுக்குத்தொடரையும் எலும்புகள் முறிவது போல நொறுங்கல் ஒலி, மழைத்தொடர்கள் போன்ற அலைகள் என்ற உவமைகளையும் பயன்படுத்தி உள்ளார்.

**கடலின் வெறிக்கூத்து :**

திடீரென அமைதியாகி வானும் கடலும் பிரிந்து தனித்துத் தென்பட்டன. பலகை அடைப்புக்குள்ளிருந்து கப்பித்தான் மற்றவர்களை ஓடி வாருங்கள் என அழைக்கிறார். மீண்டும் அலைகள் தொங்கானைத் தாக்குகின்றன. வானும் கடலும் வளியும் மழையும் மீண்டும் ஒன்று கூடிக் கொந்தளிக்கின்றன. வானம் பிளந்து தீ கக்கியது. மழை வெள்ளம் கொட்டுகிறது. வளி(காற்று) முட்டிப் புரட்டுகிறது. இவ்வாறாக கடல், வெறிக் கூத்தாடுகிறது.

**கரைகண்ட தொங்கான் :**

புயல் தன் கோரத்தை முடித்த மறுநாள் காலையில் சூரிய வெளிச்சம் பளிச்செனத் தென்படுகிறது. கப்பலில் உள்ள நீரை மாலுமிகள் இறைத்து வெளியே ஊற்றுகின்றனர். ஓட்டையை அடைக்கிறார்கள். ஆப்பு அடித்து, கப்பலை சரிசெய்கிறார்கள்.

“இனிமேல் பயமில்லை. இரண்டு நாளில் கரையைப் பார்க்கலாம்”, என கப்பித்தான்(தலைமை மாலுமி) கூற, தொங்கான் கடலில் மிதந்துச் சென்றது. கடற்கூத்துக்குப் பின் ஐந்தாம் நாள் மாலை கரை தென்பட்டது. அடுத்தநாள் முற்பகலில் பினாங்குத் துறைமுகத்தை அணுகினார்கள்.

**முடிவுரை**

இவ்வாறாக ‘புயலிலே ஒரு தோணி’ கதைப்பகுதியில் இடம்பெறும் கடற்பயண நிகழ்வுகளை ப.சிங்காரம் கற்பனை கலந்து விவரித்துள்ளார்.

# 3. கூட்டாஞ்சோறு



## பலவுள் தெரிக

1. பின்வருவனவற்றுள் முறையான தொடர் - *உ [PTA - 4]
   அ) தமிழர் பண்பாட்டில் தனித்த வாழை இலைக்கு இடமுண்டு.
   ஆ) தமிழர் வாழை இலைக்குப் பண்பாட்டில் தனித்த இடமுண்டு.
   **இ) தமிழர் பண்பாட்டில் வாழை இலைக்குத் தனித்த இடமுண்டு.**
   ஈ) தமிழர் வாழை பண்பாட்டில் தனித்த இலைக்கு இடமுண்டு.

2. "சிலம்பு அடைந்திருந்த பாக்கம் எய்தி" என்னும் அடியில் பாக்கம் என்பது – *செ-2
   அ) புத்தூர் ஆ) மூதூர் இ) பேரூர் **ஈ) சிற்றூர்**

3. அறிஞருக்கு நூல், அறிஞரது நூல் ஆகிய சொற்றொடர்களில் பொருளை வேறுபடுத்தக் காரணமாக அமைவது - *இ [MAY – 2022]
   **அ) வேற்றுமை உருபு** ஆ) எழுவாய் இ) உவம உருபு ஈ) உரிச்சொல்

4. காசிக்காண்டம் என்பது - *செ-1
   அ) காசி நகரத்தின் வரலாற்றைப் பாடும் நூல் ஆ) காசி நகரத்தைக் குறிக்கும் மறுபெயர்
   **இ) காசி நகரத்தின் பெருமையைப் பாடும் நூல்** ஈ) காசி நகரத்திற்கு வழிப்படுத்தும் நூல்

5. 'விருந்தினரைப் பேணுவதற்குப் பொருள் தேவைப்பட்டதால், தன் கருங்கோட்டுச் சீறியாழைப் பணையம் வைத்து விருந்தளித்தான் என்கிறது புறநானூறு'. இச்செய்தி உணர்த்தும் விருந்து போற்றிய நிலை –*உ
   அ) நிலத்திற்கேற்ற விருந்து **ஆ) இன்மையிலும் விருந்து**
   இ) அல்லிலும் விருந்து ஈ) உற்றாரின் விருந்து

## கூடுதல் வினாக்கள்

6. பாடி மகிழ்ந்தனர் - எவ்வகைத் தொடர் என்பதைத் தேர்ந்தெடுக்கவும். *இ [APR – 2023]
   அ) பெயரெச்சத்தொடர் **ஆ) வினையெச்சத்தொடர்**
   இ) வேற்றுமைத்தொடர் ஈ) விளித்தொடர்

7. கட்டுரையைப் படித்து, ஆசிரியர் மாணவர்களுக்கு பரிசு வழங்கினார் - இத்தொடரில் இடம் பெற்றுள்ள வேற்றுமை உருபுகள்: *இ [SEP – 2021]
   அ) ஐ, ஆல் ஆ) ஆல், கு **இ) ஐ, கு** ஈ) இன், கு

8. கலையரங்கத்தில் எனக்காக காத்திருக்கிறவரை அழைத்து வாருங்கள் - இத்தொடர் *இ [MDL – 19]
   அ) வினாத் தொடர் ஆ) தனித் தொடர் இ) செய்தித் தொடர் **ஈ) கலவைத் தொடர்**

9. 'மருந்தே ஆயினும் விருந்தொடு உண்' - இவ்வரி இடம் பெற்றுள்ள நூல் மற்றும் ஆசிரியர்
   அ) குறுந்தொகை, கபிலர் ஆ) அகநானூறு, கம்பர் *உ [MDL – 19, PTA - 1]
   **இ) கொன்றை வேந்தன், ஔவையார்** ஈ) புறநானூறு, தொல்காப்பியர்

10. விடுபட்ட உணவு வகைகளை வரிசைப்படுத்துக. *உ [PTA - 4]
    பச்சரிசியைக் கொண்டு _______ செய்து பாசிப்பருப்பினை வறுத்து _______ பிடித்து கேரட்டைத் துருவி நெய்யிட்டு _______ செய்து முடித்த அம்மா, இறுதியாக உருளைக்கிழங்கைச் சீவி _______ செய்து அனைவரையும் உணவு உண்ண அழைத்தார்.
    அ) பொங்கல், உருண்டை, சீவல், அல்வா ஆ) சீவல், உருண்டை, அல்வா, சீவல்
    **இ) பொங்கல், உருண்டை, அல்வா, சீவல்** ஈ) உருண்டை, சீவல், அல்வா, பொங்கல்

11. உலகமே வறுமையுற்றாலும் கொடுப்பவன் என்றும், பொருள்களின் இருப்பைக்கூட அறியாமல் கொடுப்பவன் என்றும் பாராட்டப்படுவோர்- *உ [APR – 2023, PTA - 6]
    அ) உதியன்; சேரலாதன் ஆ) நெடுஞ்செமியன்; திருமுடிக்காரி
    இ) பேகன்; கிள்ளிவளவன் **ஈ) அதியன், பெருஞ்சாத்தன்**

12. அன்பால் கட்டினார், அறிஞருக்குப் பொன்னாடை ஆகிய சொற்றொடர்களில் பொருளை வேறுபடுத்தக் காரணமாக அமைவது - *இ [PTA – 6]

**அ) வேற்றுமை உருபு** ஆ) எழுவாய் இ) உவம உருபு ஈ) உரிச்சொல்

## குறுவினா

**1. விருந்தினரை மகிழ்வித்துக் கூறும் முகமன் சொற்களை எழுதுக.** *செ-1

- ❋ விருந்தினரை வியந்து உரைத்தல்.
- ❋ இனிமையாகப் பேசுதல்.
- ❋ முகமலர்ச்சியுடன் நோக்குதல்.
- ❋ 'வீட்டிற்குள் வருக' என்று வரவேற்றல்.
- ❋ மனம் மகிழும்படி பேசுதல்.
- ❋ புகழ்ச்சியாக முகமன் கூறி வழியனுப்புதல்.

**2. 'தானியம் ஏதும் இல்லாத நிலையில் விதைக்காக வைத்திருந்த தினையை உரலில் இட்டுக் குற்றியெடுத்து விருந்தினருக்கு விருந்தளித்தாள் தலைவி' என்பது இலக்கியச் செய்தி. விருந்தோம்பலுக்குச் செல்வம் மட்டுமே இன்றியமையாத ஒன்றா? உங்கள் கருத்தைக் குறிப்பிடுக.** *உ

❋ விருந்தோம்பலுக்குச் செல்வத்தைவிட முகம் மலர்ந்து விருந்தினரைப் போற்றுதல், நல்ல உபசரிப்பு, இனிய சொற்கள், இருப்பதைப் பகிர்ந்தளிக்கும் நல்ல மனம் ஆகியன இருத்தல் வேண்டும்.

**3. 'எழுது என்றாள்' என்பது விரைவு காரணமாக 'எழுது எழுது என்றாள்' என அடுக்குத்தொடரானது. 'சிரித்துப் பேசினார்' என்பது எவ்வாறு அடுக்குத்தொடராகும்?** *இ

'சிரித்துப் பேசினார்' என்பது உவப்பின் காரணமாக 'சிரித்து சிரித்துப் பேசினார்' என்று அடுக்குத்தொடரானது.

**4. 'இறடிப் பொம்மல் பெறுகுவிர்'**
**- இத்தொடர் உணர்த்தும் பொருளை எழுதுக.** *செ-2

❋ இறடி – தினை, பொம்மல் - சோறு

❋ "தினைச் சோற்றை உணவாகப் பெறுவீர்கள்" என்பது இத்தொடர் உணர்த்தும் பொருளாகும்.

**5. பாரதியார் கவிஞர், நூலகம் சென்றார், அவர் யார்? ஆகிய தொடர்களில் எழுவாயுடன் தொடரும் பயனிலைகள் யாவை?** *இ [AUG – 2022]

❋ **கவிஞர்** - பெயர்ப் பயனிலை; ❋ **சென்றார்** - வினைப் பயனிலை; ❋ **யார்?** - வினாப் பயனிலை

### கூடுதல் வினாக்கள்

**6. உணவு, விருந்து சார்ந்த பழமொழி ஒன்றினையும், விழிப்புணர்வுத் தொடர் ஒன்றினையும் எழுதுக.** *உ [PTA-3]

❋ **பழமொழி :** விருந்தும் மருந்தும் மூன்று நாளைக்கு.

❋ **விழிப்புணர்வுத் தொடர் :** வாழ்வதற்காக உண்; உண்பதற்காக வாழாதே.

**7. தொடர்களில் உள்ள எழுவாயைச் செழுமை செய்க.** *இ [PTA - 6]

(அ) மரத்தை வளர்ப்பது நன்மை பயக்கும்

**பயன் தரும்** மரத்தை வளர்ப்பது நன்மை பயக்கும்.

(ஆ) வாழ்க்கைப் பயணமே வேறுபட்ட பாடங்களைக் கற்றுத் தருகிறது.

**இன்பமும் துன்பமும் நிறைந்த** வாழ்க்கைப் பயணமே வேறுபட்ட பாடங்களைக் கற்றுத் தருகிறது.

## சிறுவினா

**1. புத்தகத்தில் உள்ள தாலாட்டுப் பாடலில் அமைந்துள்ள தொடர் வகைகளை எழுதுக.** *இ [PTA –2, MDL–19, SEP-2021]

| தாலாட்டுப் பாடல் | தொடர் வகை |
|---|---|
| கண்ணே கண்ணுறங்கு! | **விளித் தொடர்** |
| காலையில் நீயெழும்பு! | **வேற்றுமைத் தொடர்** |
| மாமழை பெய்கையிலே! | **உரிச்சொல் தொடர்** |
| மாம்பூவே கண்ணுறங்கு! | **விளித் தொடர்** |
| பாடினேன் தாலாட்டு! | **வினைமுற்றுத் தொடர்** |
| ஆடி ஆடி ஓய்ந்துறங்கு! | **அடுக்குத் தொடர்** |

**2. "பலர்புகு வாயில் அடைப்பக் கடவுநர் வருவீர் உளீரோ" – வினவுவது ஏன்?**

பலரும் நுழையும் வீட்டின் வாயில் கதவுகளை, இரவில் அடைக்கும் முன்பாக தெருவில் உண்ணாமல் பசியோடு யாரேனும் இருந்தால் அவர்களை விருந்து உண்ண வருமாறு வினவுகின்றனர். இந்த வழக்கம் சங்க காலத்தில் இருந்ததாக குறுந்தொகையின் இவ்வடிகள் புலப்படுத்துகிறது.

**3. ✹ புதியதாக வருவோர் இரவில் தங்குவதற்கு வீட்டின் முன்புறம் திண்ணையையும் அதில் தலை வைக்கத் திண்டும் அமைத்தனர்.**

**✹ திருவிழாக் காலங்களில் ஊருக்கு வரும் புதியவர்களையும் அழைத்து அன்போடு விருந்தளிப்பதைச் சில இடங்களில் காணமுடிகிறது.** *உ *[PTA - 3]*

**இப்படியாக காலமாற்றம், தமிழர் விருந்தோம்பலில் ஏற்படுத்திய மாற்றங்கள் குறித்த கருத்துகளை எழுதுக.**

**காலமாற்றம், தமிழர் விருந்தோம்பலில் ஏற்படுத்திய மாற்றங்கள் :**

- ✱ புதியவர்களாகிய விருந்தினர்களை வீட்டுக்குள் அழைத்து உணவிடுவது குறைந்தது.
- ✱ படிப்படியாக ஓரளவு தெரிந்தவர்களை மட்டுமே விருந்தினர்களாக ஏற்றனர்.
- ✱ விருந்து உபசரிப்பது குறைந்ததால் சத்திரங்கள், உணவுக்கூடங்கள் பெருகின.
- ✱ பண்பாட்டு மாற்றமாக இன்று சில இடங்களில் விருந்தினர்களை வரவேற்பது முதல், பந்தியில் உபசரித்து வழியனுப்பும் வரை 'திருமண ஏற்பாட்டாளர்கள்' கவனித்துக்கொள்கின்றனர்.
- ✱ சிறு மகிழ்ச்சிகளையும் விழாக்களாகக் கொண்டாடி விருந்தினர்களை உபசரிக்கும் நாகரீகம் மலர்ந்துள்ளது.
- ✱ நவினமாக்கப்பட்டாலும் விருந்தினரை முகம் மலர்ந்து போற்றுதல், உபசரித்தல், பகிர்ந்தளித்தல் ஆகியன இன்றும் கடைபிடிக்கின்றனர்.

**4. கூத்தனைக் கூத்தன் ஆற்றுப்படுத்தலைக் கூத்தராற்றுப்படை எவ்வாறு காட்டுகிறது?** *செ2 *[PTA - 1]*

➔ **ஆற்றுப்படுத்துதல் :**

ஆற்றுப்படுத்தும் கூத்தன் வள்ளலை நாடி எதிர்வரும் கூத்தனை அழைத்து, யாம் இவ்விடத்தே சென்று இன்னவெல்லாம் பெற்று வருகின்றோம், நீயும் அந்த வள்ளலிடம் சென்று வளம் பெற்று வாழ்வாயாக! என்று கூறுதல் ஆற்றுப்படை ஆகும்.

➔ **ஆற்றுப்படுத்தும் கூத்தனின் வேண்டுகோள் :**

- ✱ பகலில் இளைப்பாறி செல்லுங்கள். இரவில் சேர்ந்து தங்குங்கள்.
- ✱ ஒளிரும் பூங்கொத்துகளைச் சுற்றத்தோடு அணிந்து பொருத்தமான பாதையில் செல்லுங்கள்.
- ✱ மூங்கில்கள் ஓசை எழுப்பும் கடினப் பாதையில் சென்று, மலைச்சரிவில் உள்ள சிற்றூரை அடையுங்கள்.

➔ **நன்னனின் கூத்தர்கள் :**

- ✱ அங்குள்ளவர்களிடம் நன்னனின் கூத்தர்கள் என கூறி, உரிமையுடன் அவர்கள் வீட்டிற்குள் நுழையுங்கள்.
- ✱ உறவினர்கள் போலவே அவர்கள் உங்களுடன் பழகுவர். இனிய சொற்களைக் கூறுவர்.

➔ **உணவளித்தல் :**

நெய்யில் வெந்த மாமிசத்தின் பொரியலையும் தினைச்சோற்றையும் உணவாகப் பெறுவீர்கள்.

இவ்வாறாக கூத்தனைக் கூத்தன் ஆற்றுப்படுத்துவதாக மலைபடுகடாம் எடுத்துரைக்கிறது.

## கூடுதல் வினா

**5. வாழை இலையில் விருந்து என்பது தமிழர் பண்பாட்டுக் கூறுகளில் ஒன்று என்பதை விளக்குக.** *உ *[PTA -5]*

**தமிழர் விருந்தோம்பலில் வாழை இலைக்கு முக்கிய பங்கு உண்டு.**

- ✱ விருந்தினருக்குத் தலை வாழை இலையில் உணவளிப்பது மரபாக இருந்துள்ளது.
- ✱ வாழை இலையின் மருத்துவப் பயன்களை நம் மக்கள் அன்றே அறிந்திருந்தனர்.
- ✱ வாழையிலையின் விரிந்த பகுதி உண்பவரின் வலப்பக்கம் அமையுமாறு போடுவது வழக்கமாகும்.
- ✱ உப்பு, ஊறுகாய், இனிப்பு முதலான குறைவாக சாப்பிட வேண்டியவை இடது ஓரத்திலும், காய்கறி, கீரை, கூட்டு முதலான அதிகம் உண்ணக்கூடியவற்றை வலது ஓரத்திலும் வைப்பர். நடுவில் சோறு வைத்து எடுத்துண்ண வசதியாகப் பரிமாறுவார்கள்.
- ✱ ஊண்பவர் மனமறிந்து, அவர்கள் விரும்பும் உணவுவகைகளை பரிவுடன் பரிமாறுவர்.

6. காலமாற்றம், தமிழர் விருந்தோம்பலில் ஏற்படுத்திய மாற்றங்கள் குறித்த உங்கள் கருத்துகள் மூன்றினை எழுதுக.

**திண்ணை :** *உ [PTA - 3]

* பழங்காலத்தில் தெரிந்தவர், தெரியாதவர் எவர் வீட்டுக்கு வந்தாலும் முகம் மலர்ந்து உபசரிப்பர். புதிதாக வருவோர் இரவில் தங்குவதற்கு வீட்டின் முன்புறம் திண்ணையும் அங்கு தலை வைத்துப் படுக்க திண்டும் அமைத்தனர்.
* பழங்காலத்தில் முன்பின் தெரியாதவர்களை வரவேற்க காரணம், மனிதர்கள் மேலிருந்த நம்பிக்கை மற்றும் அற ஒழுக்கம். ஆனால், இன்று சொந்த வீட்டிலேயே திருடும் அளவிற்கு மனிதர்களின் அற உணர்வு குறைந்திருக்கிறது.
* எனவே, இக்காலத்தில் தெரிந்த நண்பர்கள், உறவினர்கள் வீட்டுக்கு வந்தால் மட்டுமே முகம் மலர்ந்து உபசரிக்கின்றனர். இன்று வீட்டுக்குத் திண்ணை வைத்து யாரும் கட்டுவதில்லை. அறிமுகம் இல்லாதவர்களை விருந்தினராக ஏற்பதில்லை.

**இல்ல விழாக்கள் :**

* திருமண நிச்சயதார்த்தம், திருமணம், வளைகாப்பு, புதுமனை புகுவிழா முதலியவற்றைத் தங்கள் இல்லத்திலேயே நடத்தி விருந்தினர்களுக்கு விருந்தளித்தனர்.
* இக்காலத்தில் மண்டபங்களுக்கு, இல்ல விழாக்கள் இடம் மாறிவிட்டன.
* அன்று இல்ல விழாக்களில் அப்பகுதி வாழ் மக்களும் வெளியூர் விருந்தினர்களுக்குத் தேவையான உதவிகளைச் செய்கின்றனர்.
* இன்று திருமணக் கூடங்களில் நடைபெறும் இல்ல விழாக்களில் விருந்தினரை வரவேற்பது முதல் பந்தியில் உபசரித்து வழியனுப்பும்வரை திருமண ஏற்பாட்டாளர்களே செய்யும் விருந்தோம்பல் நடைபெறுகிறது.

## நெடுவினா

1. **ஆற்றுப்படுத்தல் என்பது அன்றைக்குப் புலவர்களையும், கலைஞர்களையும், வள்ளல்களை நோக்கி நெறிப்படுத்துவதாக இருந்தது. அது இன்றைய நிலையில் ஒரு வழிகாட்டுதலாக மாறியிருப்பதை விளக்குக.**

**ஆற்றுப்படுத்துதல் - இன்றைய நிலையில் வழிகாட்டுதல்**

**முன்னுரை** *செ-2 [PTA – 3, MDL - 19]

தமிழர்களின் அன்றைய பலவகை பழக்கங்கள் இன்றும் தொடர்கின்றன. ஆனால் அவை காலத்திற்கேற்ற மாற்றங்களையும் அடைந்திருக்கின்றன. அவற்றில் ஒன்றான ஆற்றுப்படுத்துதல் குறித்து விரிவாகக் காணலாம்.

**அன்றைய ஆற்றுப்படுத்துதல் :**

அன்றைய நிலையில் ஆற்றுப்படுத்துதல் என்பது பாணர்கள், கூத்தர்கள் மன்னனிடமோ, வள்ளலிடமோ சென்று, தான் பெற்ற செல்வத்தைப் பிறரும் பெறவேண்டும் என்ற நல்ல எண்ணத்தில், மற்ற பாணர்கள், புலவர்களை ஆற்றுப்படுத்தினர்.

**இன்றைய வழிகாட்டல்கள் :**

உண்மையில் ஆற்றுப்படுத்துதல் என்பது அடுத்து என்ன செய்ய வேண்டும்? எங்கு செல்ல வேண்டும் என்பதை குறிக்கிறது. இன்றைய நவீன உலகில், மனிதர்கள் பல்வேறு சிக்கல்களுக்கு ஆட்படும் நிலை உள்ளது. சிக்கல்களிலிருந்து மீண்டுவர ஆற்றுப்படுத்துதல் என்னும் வழிகாட்டல் அவசியம் தேவைப்படுகிறது.

* **ஆலோசனை :**
  ஆலோசனை என்பது முன்னேற தெரியாமல் திக்கற்று நிற்பவர்களுக்கு வழிகாட்டுவதே ஆகும். இன்றைய உலகில் வாழ்க்கையில் முன்னேற வெற்றிப்பெற்றோரின் அனுபவங்கள், யோசனைகள், அறிவுரைகள் மிகவும் முக்கியமான ஒன்றாக பலருக்கும் தேவைப்படுகிறது. பலர் முன்னேற உதவும் இந்த ஆற்றுப்படுத்துதல் முறையே ஆலோசனை ஆகும்.
* **வழிகாட்டலில் உள்ள பரிமாணங்கள் :**
  - **கல்வியில் வழிகாட்டுதல் :** கல்வியில் பின்தங்கிய மாணவர்களுக்கான வழிகாட்டுதல்கள், அரசின் கல்வி சார்ந்த திட்டங்கள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த இது தேவைப்படுகின்றன.
  - **தொழிலில் வழிகாட்டுதல் :** புதிய தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி தொழில் உற்பத்தியைப் பெருக்கிட தற்காலங்களில் வழிகாட்டுதல் என்பது இன்றியமையாததாகும்.
  - **உளவியல் வழிகாட்டல் :** மனஅழுத்தம் காரணமாக ஏற்படும் இன்னல்கள், குற்றங்கள் நடைபெறாதிருக்க யோகா, சொற்பொழிவுக்கேட்டல் போன்ற வழிகாட்டுதல்கள் தேவைப்படுகின்றன.

✱ **வழிகாட்டலின் பயன்கள் :**

- மனிதர்களிடையே ஒற்றுமையுணர்வு அதிகரிக்கிறது.
- மனிதநேயம் மேம்படுகிறது.
- மனித உறவுகளிடையே உள்ள பிணைப்பு உறுதியாவதால் குடும்பம் மகிழ்ச்சியடைகிறது.

**முடிவுரை**

அன்றைய ஆற்றுப்படுத்துதல் சிலருக்கு மட்டுமே தேவைப்படுவதாக இருந்தது. அது ஓர் உயரிய ஒழுக்கமாகப் போற்றப்பட்டது. ஆனால் இன்றைய ஆற்றுப்படுத்துதல் வழிகாட்டுதலாகவே மாறிவிட்டது. வழிகாட்டுதலின்றி மனிதன் வாழ்வது சாத்தியமில்லாத ஒன்றாகவிட்டது.

**2. அன்னமய்யா என்னும் பெயருக்கும் அவரின் செயலுக்கும் உள்ள பொருத்தப்பாட்டினைக் கோபல்லபுரத்து மக்கள் கதைப்பகுதி கொண்டு விவரிக்க. (அல்லது) பசித்தவருக்கு உணவிடுதல் என்ற அறச்செயல், 'அன்னமய்யா' புதிதாக வந்தவருக்கு உணவிட்ட செயலோடு ஒத்திருத்தலை 'கோபல்லபுரத்து மக்கள்' கதைவழி விளக்கி எழுதுக.** *து *[PTA–4, 5, SEP– 2021, MAY-2022]*

**முன்னுரை**

தம்மிடம் இருப்பதையே பகிர்ந்து கொடுக்கிற நேயம் கிராமத்து விருந்தோம்பல். அவ்வாறு பசித்தவருக்கு உணவிட்ட அன்னமய்யாவின் அறச்செயலுக்கும், அவரின் பெயருக்கும் உள்ள பொருத்தப்பாட்டினை 'கோபல்லபுரத்து மக்கள்' கதை வாயிலாக இக்கட்டுரையில் காண்போம்.

**அன்னமய்யாவும் வழிப்போக்கனும் :**

கோபல்லபுரத்து கிராமத்தில் வெள்ளந்தி மனம் படைத்தவர் அன்னமய்யா. ஏழைகளின் பசிப்பிணியைப் போக்கும் பண்பு அவரிடம் இருக்க வேண்டும் என்பதற்காகவே அவருக்கு அன்னமய்யா என பெயர் வைத்த பெற்றோர்கள் தீர்க்கதரிசிகள் ஆவர். அக்கிராமத்தில் சுப்பையாவின் நிலத்தில் அருகு எடுத்துக் கொண்டிருந்தார்கள். அப்போது, பல நாள் பட்டினியால் தாடியும் அழுக்கு ஆடையும் உடுத்திய பார்வைக்கு வயோதிகனாகவும் சாமியாரைப் போலவும் இருந்த ஒரு வாலிபனை அன்னமய்யா பார்த்து அவன் அருகில் சென்றார்.

**வாலிபனின் வேண்டுகோளும், அன்னமய்யாவின் விருந்தோம்பலும் :**

அன்னமய்யாவைப் பார்த்து, "குடிக்கத் தண்ணி கிடைக்குமா?" என்று வாலிபன் கேட்டான். அருகில் அருகெடுத்துக்கிட்டு இருக்கிறவங்ககிட்ட இருக்கும் நீச்சுத் தண்ணீரை வாங்கிகொடுக்க அழைத்துச் சென்றார் அன்னமய்யா. ஒரு வேப்பமரத்தின் அடியில் பல கறுப்பு மண் கலயங்கள் இருந்தன. அன்னமய்யா கலயத்தின் மூடியாக இருந்த சிரட்டையை எடுத்துச் சுத்தப்படுத்தி அதில் நீத்துபாகத்தை வடித்து வாலிபனிடம் நீட்டினான். சப்பிக் குடிப்பதா அண்ணாந்து குடிப்பதா என்று அவன் தயங்கியபோது, 'சும்மா கடித்து குடிங்க' என்றார் அன்னமய்யா. வாலிபன் நீத்துபாகத்தை உறிஞ்சும்போது கண்கள் சொருகின. அன்னமய்யா 'உட்கார்ந்து குடிங்க' என்று உபசரித்தார்.

**அன்னமய்யாவின் மனநிறைவு :**

வாலிபன் கலயத்திலிருந்து நீத்துபாகத்தை இரண்டாவது முறை சிரட்டையில் வாங்கி மனநிறைவுடன் குடித்தான். பிறகு வேப்பமரத்து நிழலே படுத்து அயர்ந்தான். வாலிபனுக்கு எப்படி ஒரு நிறைவு ஏற்பட்டதோ அதைவிட மேலான நிறைவு அன்னமய்யாவுக்கு ஏற்பட்டது. மார்பில் பால் குடித்துக் கொண்டிருக்கும் போதே வயிறு நிறைந்ததும் அப்படியே தூங்கிவிடும் குழந்தையைப் பார்ப்பதுபோல அவனை ஒரு பிரியத்தோடு பார்த்தார் அன்னமய்யா. நீச்சுத் தண்ணி கொடுத்ததோடு விடாமல், அனைவரும் உணவு உண்ணும் போது மணியை(அந்த வாலிபன்) வரவேற்று உபசரித்து அவனுக்கு கம்மஞ்சோற்றைக் கொடுத்து அவனது பசியைப் போக்கினார்.

**அன்னமய்யா பெயர்ப்பொருத்தம் :**

வாலிபன் அன்னமய்யாவிடம் உங்கள் பெயரென்ன? என்று கேட்க அன்னமய்யா என்று பதில் அளித்தார் அவர். ஆகா... எவ்வளவு பொருத்தமான பெயர்... 'எனக்கு இன்று நீ இடும் அன்னம்தான் என் உயிரைக் காப்பாற்றியது' என்று மனதிற்குள் நினைத்துக் கொண்டான் அந்த வாலிபன்.

**முடிவுரை**

அன்னமய்யா என்ற பெயருக்கேற்றாற்போல விருந்தோம்பலில் உயர்ந்தவராக வாலிபன் கண்களில் தெரிகிறார். புதிதாக வந்தவருக்கு உணவிட்ட அன்னமய்யாவின் செயல் வழி 'பசித்தவருக்கு உணவிடுதல்' என்பதே சிறந்த அறச்செயல் என்று நாம் உணர்கிறோம்.

**3. உங்கள் இல்லத்துக்கு வந்த உறவினருக்கு நீங்கள் செய்த விருந்தோம்பலை அழகுற விவரித்து எழுதுக.** *உ
*[APR - 2023]*

**முன்னுரை**

உறவினர்களோ, நண்பர்களோ வீட்டிற்கு வந்தால் குடும்பத்தில் அனைவரது முகத்திலும் மகிழ்ச்சி பொங்கும். நான், என் தம்பி, அம்மா, அப்பா என அனைவரும் இணைந்து எங்கள் வீட்டிற்கு வந்த விருந்தினருக்குச் செய்த விருந்தோம்பலை விரிவாகக் கூறுகிறேன்.

**முகம் மலர்ந்த வரவேற்பு :**

நாங்கள் மாமா குடும்பத்தின் வருகைக்காக மகிழ்ச்சியோடு காத்திருந்தோம். அவர்கள் வருவதாகக் கூறிய நேரத்திற்கு முன்பே அப்பா பேருந்து நிலையம் சென்று அவர்களுக்காக காத்திருந்து அழைத்து வந்தார். வாசலில் அவர்கள் வரும் சத்தம் கேட்டது. மாமா, அத்தை, அகிலா (அத்தை மகள்) ஆகியோரை அனைவரும் அன்புடனும் முக மலர்ச்சியோடும் வணங்கிக் கைகளைப் பிடித்து வரவேற்றோம். நானும், என் தம்பியும் அவர்களுடைய உடைமைகளை எடுத்துச் சென்றோம். தண்ணீர் மற்றும் தேநீர் கொடுத்து உபசரித்தோம். பின் நலம் விசாரித்து சிறிது நேரம் மகிழ்வுற உரையாடிக் கொண்டிருந்தோம்.

**உணவு உபசரிப்பு :**

- ❋ விருந்தினர் விரும்பும் அறுசுவை உணவைத் தயார்செய்து தலைவாழை இலையில் பரிமாறினோம்.
- ❋ உண்பவரின் இடப்பக்கம் இலையின் குறுகலான பகுதியும், வலப்பக்கம் விரிந்த பகுதியும் வருமாறு வாழையிலையை விரித்தோம்.
- ❋ உப்பு, ஊறுகாய், இனிப்பு முதலான குறைவாகச் சாப்பிட வேண்டியவை இடது ஓரத்திலும், காய்கறி, கீரை, கூட்டு முதலான அதிகம் உண்ணக்கூடியவற்றை வலது ஓரத்திலும் வைத்து, நடுவில் சோறு வைத்து எடுத்துண்ண வசதியாகப் பரிமாறினோம்.
- ❋ ஊண்பவர் மனமறிந்து, அவர்கள் விரும்பும் உணவு வகைகளைப் பரிவுடன் பரிமாறினோம்.

**மகிழ்வுடன் உரையாடல் :**

- ❋ உணவு உண்டபின் ஒரு தட்டில் வெற்றிலை, பாக்கு, சுண்ணாம்பு வைத்துக் கொடுத்தோம்.
- ❋ பின்பு உணவுண்டவர்களிடம் திருப்தியாக உண்டீர்களா? என அன்புடன் விசாரித்தோம்.
- ❋ விருந்து அறுசுவையாக இருந்தது என்று என் அத்தை பாராட்டினார். மேலும் அவர்கள் எங்களையும் விடுமுறையில் விருந்துக்கு வருமாறு அன்புடன் அழைப்பு விடுத்தார்கள்.

**விடைபெறுதல் :**

- ❋ விருந்தினர் விடைபெறும்போது, வீட்டில் உள்ள உணவுப் பொருட்கள் சிலவற்றையும் கொடுத்து வீட்டில் உள்ளவர்களுக்குக் கொடுக்குமாறு கூறி வாசல்வரை வந்து வழியனுப்பி வைத்தோம்.
- ❋ ***"காலின் ஏழடிப் பின் சென்று"*** - பொருநராற்றுப்படை, 166.
  - என்பதற்கேற்ப ஏழடி வரை அவருடன் சென்று வழியனுப்பினோம்.

**முடிவுரை**

இவ்வாறு அன்றைய நாள் உறவினரின் வருகை எங்களுக்கு மகிழ்ச்சியைத் தந்தது. விருந்தினர் பேணுதல் தமிழர் மரபு என்பதற்கேற்ப காலந்தோறும் தமிழர்களின் அடையாளமாக விளங்கும் உயர் பண்பான விருந்தோம்பலைப் போற்றிப் பெருமிதம் கொள்வோம்.

## கூடுதல் வினாக்கள்

**4. காசிக்காண்டம் குறிப்பிடும் இல்லற ஒழுக்கங்களை எழுதி, உங்கள் வீட்டிற்கு வந்த விருந்தினரை எதிர்கொண்டு, நீங்கள் விருந்தளித்த நிகழ்வோடு ஒப்பிட்டு எழுதுக.** *செ-1 *[SEP - 20]*

***அ) காசிக்காண்டம் குறிப்பிடும் இல்லற ஒழுக்கங்கள் :***

விருந்தினராக ஒருவர் வந்தால்,

1. அவரை வியந்து உரைத்தல்.
2. நல்ல சொற்களை இனிமையாகப் பேசுதல்.
3. முகமலர்ச்சியுடன் அவரை நோக்குதல்.
4. வீட்டிற்குள் வருக என்று வரவேற்றல்.
5. அவர் எதிரில் நிற்றல்.
6. அவர்முன் மனம் மகிழும்படி பேசுதல்.
7. அவர் அருகிலேயே அமர்ந்துகொள்ளுதல்.
8. அவர் விடைபெற்றுச் செல்லும்போது வாயில்வரை பின் தொடர்ந்து செல்லல்.
9. அவரிடம் புகழ்ச்சியாக முகமன் கூறி வழியனுப்புதல்.

**ஆ) எங்கள் வீட்டில் விருந்தோம்பல் :**

ஒருநாள் எங்கள் வீட்டிற்கு பெரியப்பா எதிர்பாரா விருந்தினராக வந்தார். அவரை நானும் என் குடும்பமும் காசிக்காண்டம் குறிப்பிடும் இல்லற ஒழுக்கங்களை பின்பற்றி முகமலர்ச்சியுடன் வரவேற்றோம்.

- **வரவேற்றல் :** விருந்தினரை வீட்டிற்குள் வருக! வருக! என முகமலர்ச்சியுடன் வரவேற்றோம். எதிர்பாரா விருந்தினராயினும் எங்கள் வேலைகளை நிறுத்திவிட்டு புன்னகை முகத்துடன் அவர் முன் சென்று வீட்டிற்குள் வரவேற்று அமரவைத்து உரையாடினோம். அவர் என்னை பாசத்தில் அரவணைத்து மடியில் அமரச்செய்தார்.
- **இனிது உரைத்தல் :** நீண்ட நாட்களுக்கு பிறகு பெரியப்பாவை பார்த்தபோது அவரின் வாழ்க்கை முன்னேற்றங்கள் எங்கள் குடும்பத்திற்கு மிகுந்த வியப்பை ஏற்படுத்தியது. வாழ்த்தினோம். பெரியப்பா சிறு வயதில் செய்த நல்ல செயல்களைப் பற்றி என் அப்பா பெருமிதத்துடன் புகழ்ந்து சொன்னார்.
- **விருந்தும், வழியனுப்புதலும் :** அம்மா பெரியப்பாவிற்காக உணவு சமைத்து, தமிழ் பண்பாடு மாறாமல் தலை வாழை இலையில் விருந்தளித்தார்கள். அவர் விடைபெற்ற போது வாயில் வரை சென்று, மீண்டும் வரவேண்டும் என்று முகமன் கூறி வழியனுப்பினோம்.

இவ்வாறு எங்கள் வீட்டிற்கு விருந்தினராக வந்த பெரியப்பாவுக்கு நாங்கள் அளித்த விருந்து, காசிக்காண்டம் குறிப்பிடும் இல்லற ஒழுக்கங்களுடன் பொருந்துகிறது.

**5. விருந்தினர் பேணுதல், பசித்தவருக்கு உணவிடல் போன்ற தமிழர் பண்பாடு. இன்றைய சூழலில் உங்கள் இல்லத்துக்கு வந்த உறவினருக்கு நீங்கள் செய்த விருந்தோம்பலையும், பசித்து வந்த ஒருவருக்கு நீங்கள் உணவிட்ட செயலையும் அழகுற விவரிக்கவும்.** *[SEP – 2020]* *உ

**'பசித்தவருக்கு உணவிடுதலும், விருந்தினருக்கு உணவிடுதலும்'**

**முன்னுரை :**

"இட்டு கெட்டவர் யாரும் இல்லை" என்று கூறுவார்கள். அந்தளவிற்குத் தானமும் தர்மமும் தலைகாக்கும் என்பது மரபு. இக்கட்டுரையில் 'பசித்தவருக்கு உணவிடுதல்' என்ற அறச்செயலையும் 'விருந்தினருக்கு உணவிடுதல்' என்ற பண்பாட்டுச் செயலையும் பற்றிக் காண்போம்.

**தமிழர்களின் விருந்தோம்பல் :**

விருந்தினர் என்றால் உறவினர் என்று இக்காலத்தினர் நினைக்கின்றனர். உறவினர் வேறு, விருந்தினர் வேறு. முன்பின் அறியாத புதியவர்களுக்கே விருந்தினர் என்று பெயர். தமிழர்கள் இப்புதியவர்களை விருந்தினராக உபசரிக்கும் பண்புடையவர்கள். இது நமது தலைசிறந்த பண்பாடுகளுள் ஒன்று. உலகத்தில் வேறு எந்த இடத்திலும் பார்க்க முடியாத அளவில் தமிழரின் விருந்தோம்பல் இருக்கும்.

**விருந்தோம்பல் என்னும் பண்பாட்டுச் செயல் :**

விருந்தாளிகளை வாசல் வரை சென்று இன்முகத்துடன் வரவேற்பர். வீட்டிற்கு நுழையும் முன் கைகால்களை கழுவ வைத்து, விருந்தினரை இன்சொல் பேசி நலம் விசாரித்து முதலில் தண்ணீரையும் பின் இனிப்புகளையும் வழங்குவர். பிறகு அவர்களுக்கு உணவு சமைத்து வாழையிலையில் முறையாக உணவுகளை வைத்து விருந்தளிப்பர். அவர்கள் உண்ட இலையினை உபசரிப்பவர்களே எடுப்பதும், கை கழுவ நீரை ஊற்றுவதும் தனிச் சிறப்பாகும். பின்பு அவர்களுடன் அன்பாக உரையாடி வாசல் வரை சென்று வழியனுப்பி வைப்பார்கள்.

**நான் செய்த விருந்தோம்பல் :**

விடுமுறையில் என் தாத்தா-பாட்டி வீட்டிற்கு நானும் என் குடும்பமும் சென்றோம். அப்போது கோவில் யாத்திரை சென்றவர்களுக்கு என் தாத்தா-பாட்டி இன்முகத்துடன் வரவேற்று அவர்களுக்கு இரவு தங்குவதற்கு இடம் அளித்து, உணவும் கொடுத்து சிறப்பாக உபசரித்தனர். அப்போது 'விருந்தினர்கள் வரும் காலம் அறிந்து அவர்களுக்கு உணவும், உறைவிடமும் தந்து உபசரிப்பதுதான் தமிழரின் பண்பாடு' என்று என் தந்தை கூறினார்.

**பசித்தவருக்கு உணவிடுதல் :**

'உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே' என்ற ஆன்றோர் வாக்குக்கு இணங்க பசித்தவருக்கு உணவளிப்பது என்பது சிறந்த ஓர் அறச்செயல் ஆகும். பசியோடும் களைப்போடும் வருபவர்களுக்கு எவ்வித எதிர்ப்பார்ப்புமின்றி தம்மிடம் இருப்பதை பகிர்ந்து கொடுக்கிற நேயம் விருந்தோம்பலில் தலைசிறந்ததாகும்.

**பசித்தவருக்கு நான் உணவிடுதல் :**

நான் வீட்டிற்குச் சென்று கொண்டிருந்தபோது ஒரு வயதானவர் மிகுந்த பசியின் களைப்பால் அவ்வழியில் சென்ற என்னிடம் 'பசிக்கிறது' என்று சொன்னார். அப்போது நான் அவரை என் வீட்டிற்கு அழைத்துச் சென்று, உணவிட்டு மகிழ்ச்சி அடைந்தேன். உணவுண்ட பின் அவர் முகத்தில் தோன்றிய நன்றி கலந்த புன்னகை கண்டு மனநிறைவு அடைந்தேன்.

**முடிவுரை :**

வந்த விருந்தினர்களை அன்பாக கவனித்து அனுப்பிவிட்டு வருகின்ற விருந்தினர்களுக்காக வாசலில் சலிக்காது காத்திருந்தவர்கள் நம் முன்னோர்கள். அவர்களைப் போல நாமும் நம்மிடம் வருபவர்களுக்கு இல்லை என்று கூறாது, தம்மால் இயன்றதைச் செய்ய வேண்டும்.

**6. பசித்தவருக்கு உணவிடுதல் என்ற அறச்செயல், 'அன்னமய்யா' புதிதாக வந்தவருக்கு உணவிட்ட செயலோடு ஒத்திருத்தலை 'கோபல்லபுரத்து மக்கள்' கதைவழி விளக்கி எழுதுக.** *து *[PTA - 5]*

**முன்னுரை :**

'பசித்தவருக்கு உணவிடுதல்' என்பது அறச்செயல் ஆகும். அவ்வாறு உணவிடும் அன்னமய்யாவின் அறச்செயலைப்பற்றி கோபல்லபுரத்து மக்கள் என்னும் கதை வழி இக்கட்டுரையில் காண்போம்.

**பசித்தவருக்கு உணவிடுதல் :**

'உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே!' – புறநானூற்று அடிகள்.

உடலானது உணவையே முதன்மையாகக் கொண்டது. அத்தகைய உணவு கொடுப்பவர் உயிரை கொடுத்தவர் போன்றோர் ஆவார்.

**வழிப்போக்கனின் நிலை :**

கோபல்லபுரத்து கிராமத்தில் வெள்ளந்தி மனம் படைத்தவர் அன்னமய்யா. அக்கிராமத்தில் சுப்பையாவின் நிலத்தில் அருகு எடுத்துக் கொண்டிருந்தார்கள். அப்போது, தாடியும், அழுக்கு ஆடையும் உடுத்திய, பார்வைக்கு வயோதிகனாகவும் சாமியாரைப் போலவும் இருந்த ஒரு வாலிபனை அன்னமய்யா பார்த்தார். அவன் கண்கள் பசியால் வாடியிருந்தது. தன்னைப் பார்த்து நேசப் புன்னகை காட்டிய அவன் அருகில் சென்றார் அன்னமய்யா.

**அன்னமய்யாவின் விருந்தோம்பல் :**

அன்னமய்யாவைப் பார்த்து, "குடிக்கத் தண்ணி கிடைக்குமா?" என்று வாலிபன் கேட்டான். அருகில் அருகெடுத்துக்கிட்டு இருக்கிறவங்ககிட்ட இருக்கும் நீச்சுத் தண்ணீரை வாங்கிகொடுக்க அழைத்துச் சென்றார் அன்னமய்யா. ஒரு வேப்பமரத்தின் அடியில் பல கறுப்பு மண் கலயங்கள் இருந்தன. அன்னமய்யா கலயத்தின் மூடியாக இருந்த சிரட்டையை எடுத்துச் சுத்தப்படுத்தி அதில் நீத்துபாகத்தை வடித்து வாலிபனிடம் நீட்டினான். சப்பிக் குடிப்பதா அண்ணாந்து குடிப்பதா என்று அவன் தயங்கியபோது, 'சும்மா கடித்து குடிங்க' என்றார் அன்னமய்யா. வாலிபன் நீத்துபாகத்தை உறிஞ்சும்போது கண்கள் சொருகின. அன்னமய்யா 'உட்கார்ந்து குடிங்க' என்று உபசரித்தார்.

**அன்னமய்யாவின் மனநிறைவு :**

வாலிபன் கலயத்திலிருந்து நீத்துபாகத்தை இரண்டாவது முறை சிரட்டையில் வாங்கி மனநிறைவுடன் குடித்தான். பிறகு வேப்பமரத்து நிழலே படுத்து அயர்ந்தான். வாலிபனுக்கு எப்படி ஒரு நிறைவு ஏற்பட்டதோ அதைவிட மேலான நிறைவு அன்னமய்யாவுக்கு ஏற்பட்டது. மார்பில் பால் குடித்துக் கொண்டிருக்கும் போதே வயிறு நிறைந்ததும் அப்படியே தூங்கிவிடும் குழந்தையைப் பார்ப்பதுபோல அவனை ஒரு பிரியத்தோடு பார்த்தார் அன்னமய்யா. நீச்சுத் தண்ணி கொடுத்ததோடு விடாமல், அனைவரும் உணவு உண்ணும் போது மணியை(அந்த வாலிபன்) வரவேற்று உபசரித்து அவனுக்கு கம்மஞ்சோற்றைக் கொடுத்து அவனது பசியைப் போக்கினார்.

வாலிபன் அன்னமய்யாவிடம் உங்கள் பெயரென்ன? என்று கேட்க அன்னமய்யா என்று பதில் அளித்தார் அவர். ஆகா… எவ்வளவு பொருத்தமான பெயர்… 'எனக்கு இன்று நீ இடும் அன்னம்தான் என் உயிரைக் காப்பாற்றியது' என்று மனதிற்குள் நினைத்துக் கொண்டான் அந்த வாலிபன்.

**முடிவுரை :**

அன்னமய்யா என்ற பெயருக்கேற்றாற்போல விருந்தோம்பலில் உயர்ந்தவராக அந்த வாலிபன் கண்களுக்கு தெரிகிறார். புதிதாக வந்தவருக்கு உணவிட்ட அன்னமய்யாவின் செயல் வழி 'பசித்தவருக்கு உணவிடுதல்' என்பதே சிறந்த அறச்செயல் என்று நாம் உணர்கிறோம்.

# 4. நான்காம் தமிழ்



## பலவுள் தெரிக

1. ‘உனதருளே பார்ப்பன் அடியேனே’ – யாரிடம் யார் கூறியது? *செ-1 *[AUG - 2022, SEP - 2020, PTA - 5]*
   அ) குலசேகராழ்வாரிடம் இறைவன் **ஆ) இறைவனிடம் குலசேகராழ்வார்**
   இ) மருத்துவரிடம் நோயாளி ஈ) நோயாளியிடம் மருத்துவர்

2. தலைப்புக்கும் குறிப்புகளுக்கும் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுக்க. *உ *[PTA - 3]*
   **தலைப்பு** : செயற்கை நுண்ணறிவு
   **குறிப்புகள்** : கண்காணிப்புக் கருவி, அசைவு நிகழும் பக்கம் தன் பார்வையைத் திருப்புகிறது. திறன் பேசியில் உள்ள வரைபடம் போக்குவரத்திற்குச் சுருக்கமான வழியைக் காண்பிப்பது.
   **அ) தலைப்புக்குப் பொருத்தமான குறிப்புகள் இடம்பெற்றுள்ளன.**
   ஆ) குறிப்புகளுக்குத் தொடர்பில்லாத தலைப்பு கொடுக்கப்பட்டுள்ளது.
   இ) தலைப்புக்குத் தொடர்பில்லாத குறிப்புகள் அளிக்கப்பட்டுள்ளன.
   ஈ) குறிப்புகளுக்குப் பொருத்தமில்லாத தலைப்பு வழங்கப்பட்டுள்ளது.

3. பரிபாடல் அடியில் ‘விசும்பும் இசையும்’ என்னும் தொடர் எதனைக் குறிக்கிறது? *செ-2 *[MDL - 19, PTA - 2]*
   அ) வானத்தையும் பாட்டையும் ஆ) வானத்தையும் புகழையும்
   இ) வானத்தையும் பூமியையும் **ஈ) வானத்தையும் பேரொலியையும்**

4. குலசேகர ஆழ்வார் ‘வித்துவக்கோட்டம்மா’ என்று ஆண் தெய்வத்தை அழைத்துப் பாடுகிறார். பூனையார் பால்சோற்றைக் கண்டதும் வருகிறார்-ஆகிய தொடர்களில் இடம்பெற்றுள்ள வழுவமைதி முறையே - *இ *[PTA - 4]*
   அ) மரபு வழுவமைதி, திணை வழுவமைதி ஆ) இட வழுவமைதி, மரபு வழுவமைதி
   **இ) பால் வழுவமைதி, திணை வழுவமைதி** ஈ) கால வழுவமைதி, இட வழுவமைதி

5. பாரத ஸ்டேட் வங்கியின் உரையாடு மென்பொருள் எது? *உ *[APR – 2023, PTA - 1]*
   அ) துலா ஆ) சீலா இ) குலா **ஈ) இலா**

## கூடுதல் வினாக்கள்

6. “கத்துங் குயிலோசை – சற்றே வந்து *இ *[APR - 2023]*
   காதிற் படவேணும்” – பாரதியார் -இப்பாடலடியில் இடம்பெற்றுள்ள வழுமைதி.
   அ) திணை வழுவமைதி ஆ) பால் வழுவமைதி **இ) மரபு வழுவமைதி** ஈ) கால வழுவமைதி

7. ஆண் குழந்தையை ‘வாடிச்செல்லம்’ என்று கொஞ்சுவது : *இ *[SEP - 2021]*
   **அ) பால் வழுவமைதி** ஆ) திணை வழுவமைதி இ) மரபு வழுவமைதி ஈ) கால வழுவமைதி

8. தென்னை மரங்கள் நிறைந்த பகுதியைக் குறிப்பிடும் வழாநிலை *இ *[PTA - 3]*
   அ) தென்னந்தோட்டம் ஆ) தென்னஞ்சோலை **இ) தென்னந்தோப்பு** ஈ) தென்னங்காடு

9. திணைவழுவமைதி *இ *[PTA - 5]*
   அ) ‘இந்த பாப்பா தூங்கமாட்டாள்’ என்று தன்னையே குழந்தை குறிப்பிடுவது
   ஆ) இரவெல்லாம் நாய் கத்திக் கொண்டே இருந்தது
   இ) வாடா செல்லம் என்று தாய் மகளை அழைப்பது
   **ஈ) ‘என் தங்கை வந்தாள்’ என்று பசுவைக் குறிப்பிடுவது**

10. “சங்க இலக்கியங்கள ஐந்திணைகளுக்குமான ஒழுக்கங்களை இரு திணைகளும் பயன்பெற எடுத்தியம்புகின்றன”.
    - இத்தொடரில் அமைந்துள்ள தொகைச் சொற்களின் பொருத்தமான வரியைக் கண்டறிக.
    அ) குறிஞ்சி, முல்லை, நெய்தல், பாலை - நல்வினை, தீவினை *இ *[MDL – 19, PTA - 5]*
    **ஆ) குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை - உயர்திணை, அஃறிணை**
    இ) குறிஞ்சி, முல்லை, நெய்தல், பாலை, மருதம் - அறம், பொருள், இன்பம்
    ஈ) குறிஞ்சி, முல்லை, மலை, காடு, வயல் - பணை, திணை

## குறுவினா

**1. வருங்காலத்தில் தேவையெனக் கருதுகின்ற செயற்கை நுண்ணறிவு பொதிந்த இரண்டு அறிவியல் கண்டுபிடிப்புகளைக் குறிப்பிடுக.** *உ *[PTA - 6, SEP – 2020, MDL-19]*

* **எ.கா. செயற்கை நுண்ணறிவால் இயங்கும் போக்குவரத்து ஊர்திகள்.**
* செயற்கை நுண்ணறிவால் குழந்தைகளைப் பேணிப் பாதுகாக்கும் **ரோபோக்கள்.**
* கொடிய நோய்களைக் கண்டறிந்து மருத்துவம் பார்க்கும் **இயந்திர மருத்துவர்.**

**2. வருகின்ற கோடை விடுமுறையில் காற்றாலை மின் உற்பத்தியை நேரில் காண்பதற்கு ஆரல்வாய்மொழிக்குச் செல்கிறேன் - இத்தொடர் கால வழுவமைதிக்கு எடுத்துக்காட்டாக அமைவது எவ்வாறு?** *இ *[MAY - 22, PTA - 6]*

* **வழுத்திருத்தம்:** வருகின்ற கோடை விடுமுறையில் காற்றாலை மின் உற்பத்தியை நேரில் காண்பதற்கு ஆரல்வாய்மொழிக்குச் **செல்வேன்.** இது காலவழுவமைதி.
* 'வருகின்ற கோடைவிடுமுறை' என்பது எதிர்காலம், 'செல்வேன்' என்று வருவதற்குப் பதிலாக 'செல்கிறேன்' என்று நிகழ்காலம் வந்தாலும், இந்நிகழ்வு உறுதியாக நடக்கவிருப்பதால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**3. மருத்துவத்தில் மருந்துடன் அன்பும் நம்பிக்கையும் ஆற்றும் பாங்கினை எழுதுக.** *செ-1 *[PTA–4, SEP-2021]*

* நோயாளியின் நோயைப் போக்குவதில் மருந்துகள் மட்டுமின்றி மருத்துவரின் அன்பான, நம்பிக்கையான வார்த்தைகளும், நோயாளியின் நோயை விரைவாக குணப்படுத்தும்.

**4. உயிர்கள் உருவாகி வளர ஏற்ற சூழல் பூமியில் எவை எவையெனப் பரிபாடல்வழி அறிந்தவற்றைக் குறிப்பிடுக.**

* வானம் * காற்று * நெருப்பு * நீர் * நிலம் *செ-2 *[PTA–1]*

**5. "சீசர் எப்போதும் என் சொல்பேச்சைக் கேட்பான். புதியவர்களைப் பார்த்துக் கத்துவானே தவிர கடிக்க மாட்டான்" என்று இளமாறன் தன்னுடைய வளர்ப்பு நாயைப் பற்றிப் பெருமையாகக் கூறினார் - இதில் உள்ள திணை வழுவமைதிகளைத் திருத்தி எழுதுக.** *இ

**வழுத்திருத்தம்:** 'சீசர் எப்போதும் என் சொல்பேச்சைக் **கேட்கும்.** புதியவர்களைப் பார்த்துக் **குரைக்குமே** தவிர **கடிக்காது'** என்று இளமாறன் தன்னுடைய வளர்ப்பு நாயைப் பற்றிப் பெருமையாகக் கூறினார்.

### கூடுதல் வினாக்கள்

**6. அண்ணன் நேற்று வீட்டுக்கு வந்தது. அண்ணன் புறப்படும்போது அம்மா வழியனுப்பியது. (வழுவை வழாநிலையாக மாற்றுக)** *இ *[MDL – 19]*

அண்ணன் நேற்று வீட்டுக்கு **வந்தார்.** அண்ணன் புறப்படும்போது அம்மா **வழியனுப்பினார் /வழியனுப்பினாள்.**

**7. பெருமாள் திருமொழி – நூற் குறிப்பு வரைக.** *செ-1 *[AUG - 2022]*

* பெருமாள் திருமொழி நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தில் ஐந்தாம் திருமொழியாக உள்ளது.
* இதனைப் பாடியவர் குலசேகராழ்வார். * இதில் 105 பாடல்கள் உள்ளன.

**8. ஜப்பானில் சாப்ட் வங்கி உருவாக்கிய இயந்திர மனிதன் பெப்பர் குறித்து எழுதுக.** *உ *[PTA - 6]*

* பெப்பர் உலக அளவில் அதிகம் விற்பனையாகும் ரோபோ ஆகும்.
* வீட்டுக்கு, வணிகத்துக்கு, படிப்புக்கு என மூன்று வகை ரோபோக்கள் உள்ளன.
* மனிதரின் முகபாவனைகளிலிருந்து உணர்வுகளைப் புரிந்து, அதற்கேற்ப செயல்படுகின்றன.
* பெப்பரை வரவேற்பாளராகவும் பணியாளராகவும் வீடுகளிலும், நிறுவனங்களிலும் பயன்படுத்துகிறார்கள்.

## சிறுவினா

**1. "மாளாத காதல் நோயாளன் போல்" என்னும் தொடரிலுள்ள உவமை சுட்டும் செய்தியை விளக்குக.**

* **உவமை –** நோயாளன் போல் * **உவம உருபு –** போல் *செ-1 *[SEP – 2020, PTA – 6]*
* **உவமை சுட்டும் செய்தி:** 'உடலில் ஏற்பட்ட புண்ணை மருத்துவர் கத்தியால் அறுத்துச் சுட்டாலும் அது நன்மைக்கே' என்று உணர்ந்து நோயாளி அவரை நேசிப்பார். அதுபோல, இறைவன் தனது விளையாட்டால் நீங்காத துன்பத்தைத் தந்தாலும் அவனது அடியவனாகிய குலசேகராழ்வார் இறைவனின் அருளையே எப்போதும் எதிர்பார்த்து நம்பிக்கையோடு வாழ்வதாக வேண்டுகிறார்.

**2. இன்றைய அறிவியல் கண்டுபிடிப்புகள் மனிதனை மேம்படுத்துகின்றனவா? என்பது குறித்த சிந்தனைகளை முன்வைத்து எழுதுக.** *உ [PTA – 3]

இன்றைய அறிவியல் கண்டுபிடிப்புகள் மனிதனை மேம்படுத்துகின்றன. மனிதன் கடினம் என்று கருதும் செயல்களையும் செய்யக்கூடியவையே இன்றைய அறிவியல் கண்டுபிடிப்புகள்.

❋ **இயந்திர மனிதன்** : பல்வேறு துறைகளில் இதன் பங்களிப்பு மனித வாழ்வை மேம்படுத்துகிறது.

❋ **திறன்பேசி வரைபடம்** : நாம் செல்லும் வழியில் போக்குவரத்து நெரிசல் அதிகமாக இருந்தால், அதற்கான மாற்றுப்பாதை கண்டறிவது போன்ற பல வசதிகள் உள்ளடக்கியது.

❋ **கணினி** : நம் செயல்களை எளிமைப்படுத்துகிறது. நம்மால் இயலாதவற்றை நம்மைவிட நுட்பமாகச் செய்கிறது.

❋ **கூகுள்** : நாம் அறியா வார்த்தைளை, செய்திகளைக் கணினியில் பதிவிட தன் தரவுகளில் ஒப்பிட்டு அதைப்பற்றின விவரங்களைக் கால் நொடிக்கும் குறைவான நேரத்தில் திரையில் காண்பிக்கிறது.

❋ **பல்வேறு இயந்திரங்கள்** : வானொலி, தொலைக்காட்சி, மின் விளக்குகள், துணி துவைக்கும் இயந்திரம், மாவு அறைக்கும் இயந்திரம், மின் சமைப்பான், குளிர்சாதனப் பெட்டி, மிதிவண்டி, பேருந்து, மகிழுந்து, புகைவண்டி, வானூர்தி ஆகியன நம் வாழ்க்கை முறையை எளிமைப்படுத்தியுள்ளது.

மனிதக் கண்டுபிடிப்புகள் அனைத்திலும் நன்மை, தீமை என்று இரண்டு பக்கங்கள் உள்ளன. அதற்கேற்ப நாம் அறிவியல் கண்டுபிடிப்புகளைச் சரியாக பயன்படுத்தினால், அது நம்மை மேம்படுத்தும்.

**3. மனிதர்களின் மூளையைப் போன்றது, செயற்கை நுண்ணறிவு கொண்ட கணினியின் மென்பொருள். மனிதனைப் போலவே பேச, எழுத, சிந்திக்க இத்தொழில்நுட்பம் மேம்படுத்தப்படுகிறது. இதனால் மனிதகுலத்துக்கு ஏற்படுகிற நன்மைகளைப் பற்றி அறிவியல் இதழ் ஒன்றுக்கு 'எதிர்காலத் தொழில்நுட்பம்' என்ற தலைப்பில் எழுதுக.** *உ

**<u>எதிர்காலத் தொழில்நுட்பம்</u>**

❋ செயற்கை நுண்ணறிவு என்பது ஒரு மென்பொருள் அல்லது கணினிச் செயல்திட்ட வரைவு.

❋ மனிதனால் செய்ய இயலாத, அலுப்புத் தட்டக்கூடிய, கடினமான செயல்களைச் செயற்கை நுண்ணறிவுள்ள ரோபோக்கள் செய்யும்.

❋ எதிர்காலத்தில் ரோபோக்கள் குழந்தைகளைக் கவனித்துக் கொள்ளவும், வயதானவர்களுக்கு உதவிகள் செய்து உற்ற தோழனாகவும், விடுதி, வங்கி மற்றும் அலுவலகங்களில் ஆலோசனை வழங்குவது, தண்ணீர் கொண்டு வந்து தருவது எனப் பலவற்றைச் செய்யும்.

❋ எதிர்காலத்தில் நாம் பயணிக்கும் ஊர்திகளைச் செயற்கை நுண்ணறிவு கொண்டு இயக்குவதால் விபத்துகள், போக்குவரத்து நெரிசல், பயண நேரம், எரிபொருள் பயன்பாடு போன்றவை குறையும்.

❋ மென்பொருள்கள் மனிதர்களுடன் போட்டியிட வாய்ப்புள்ளது.

❋ கல்வித்துறையில் இத்தொழில்நுட்பத்தை வகுப்புகள் எடுக்க, தேர்வுகள் நடத்தப் பயன்படுத்தலாம்.

❋ வேலை வாய்ப்புகளில் கணிசமான மாற்றங்களைக் கொண்டுவரப்போகிறது.

**4.** நேற்றிரவு பெய்த மழை எல்லாம் தொட்டியை நிறைத்திருந்தது. வாழைத் தோப்பில் குட்டியுடன் நின்றிருந்த மாடு கத்தியது; தந்தை என்னிடம், "இலச்சுமி கூப்பிடுகிறாள், போய்ப் பார்" என்றார். "இதோ சென்று விட்டேன்" என்றவாறே அங்குச் சென்றேன். துள்ளிய குட்டியைத் தடவிக்கொடுத்து, "என்னடா விளையாடவேண்டுமா?" என்று கேட்டேன். என் தங்கையும் அங்கே வந்தாள். அவளிடம், "நீயும் இவனும் விளையாடுங்கள்" என்று கூறினேன். அவிழ்த்துவிடப்பட்ட இலச்சுமி தொட்டியிலிருந்த நீரைக் குடித்தாள்.
**இப்பத்தியிலுள்ள வழுவமைதிகளைப் பட்டியலிட்டு எழுதுக.** *இ [PTA - 5]

| | |
|---|---|
| 1. நிறைத்**திருந்தது (நிறைத்தது)** | *கால வழுவமைதி* |
| 2. வாழைத்**தோப்பு (தோட்டம்)** | *மரபு வழுவமைதி* |
| 3. **குட்டி**யுடன் மாடு **(கன்று)** | *மரபு வழுவமைதி* |
| 4. இலச்சுமி கூப்பிடுகி**றாள் (கூப்பிடுகிறது)** | *திணை வழுவமைதி* |
| 5. இதோ சென்று**விட்டேன் (சென்று விடுகிறேன்)** | *கால வழுவமைதி* |
| 6. துள்ளிய **குட்டி**யை **(கன்று)** | *மரபு வழுவமைதி* |
| 7. **என்னடா** விளையாடவேண்டுமா? **(மாட்டை குறிக்கிறது)** | *திணை வழுவமைதி* |
| 8. நீயும் **இவனும்** விளையாடுங்கள். **(இதனுடன்)** | *திணை வழுவமைதி* |
| 9. தொட்டியிலிருந்த நீரைக்குடித்**தாள். (குடித்தது)** | *திணை வழுவமைதி* |

## நெடுவினா

1. **ஒரு குழந்தையைத் தூக்கவும், கீழே விழுந்த ஒரு தேனீர்க் கோப்பையை எடுக்கவும் மென்பொருள் அக்கறை கொள்ளுமா? வெறும் வணிகத்துடன் நின்றுவிடுமா? இக்கருத்துக்களை ஒட்டிச் 'செயற்கை நுண்ணறிவின் எதிர்கால வெளிப்பாடுகள்' பற்றி ஒரு கட்டுரை எழுதுக.** *உ *[PTA - 2]*

**முன்னுரை :**

வளர்ந்துவரும் அறிவியல் தொழில் நுட்பத்தில் செயற்கை நுண்ணறிவு எப்படியெல்லாம் மனிதனுக்கு உதவுகிறது என்றும், ஒரு குழந்தையைத் தூக்குவது, கீழே விழுந்த தேனீர் கோப்பையை எடுப்பது போன்ற வணிகமல்லாத செயல்களுக்குப் பயன்படுத்தலாமா? என்பது பற்றியும் இக்கட்டுரையில் காண்போம்.

**செயற்கை நுண்ணறிவு :**

மனிதன் சிந்தித்து செயல்படுவது போன்று ஒரு இயந்திரத்தைச் சிந்தித்துச் செயல்பட வைக்கும் முறையே 'செயற்கை நுண்ணறிவு' என்கிறோம். இது திட்டமிடல், பிரச்சனைகளுக்குத் தீர்வு காணல், பன்முகங்களில் சிந்தித்தல், கற்றுக் கொண்டு அதை செயல்படுத்துதல், முடிவுகளுக்கேற்பத் தானாக மாறிக்கொள்ளுதல் போன்ற பல பணிகளை மனிதனைப் போல சிந்தித்து செயல்படுத்துகிறது.

**ரோபோக்கள் - வணிக ரீதியான செயற்கை நுண்ணறிவு :**

மனிதன் செய்யக்கூடிய பல்வேறு பணிகளை, செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்துடன் இணைத்து உருவாக்கப்பட்ட தானியங்கி இயந்திரமே 'ரோபோ'. இதன் பயன்பாட்டால் குறைந்த காலத்தில் குறைந்த விலையில் அதிக எண்ணிக்கையில் பொருட்கள் உற்பத்தி செய்து உற்பத்தி திறன் வணிக ரீதியில் அதிகரித்துள்ளது. மனிதன் உடலைவருத்தி செய்துகொண்டிருந்த பல வேலைகளுக்கான வேலைவாய்ப்பு குறைந்துபோனாலும் புதுப்புது செயல்மிகு வேலைவாய்ப்புகள் கூடிக்கொண்டுதான் இருக்கின்றன.

**ஒரு குழந்தையை ரோபோவால் தூக்க முடியுமா?**

குழந்தைகளுக்கு விளையாட்டு காட்டுவதற்கு, பாடம் நடத்துவதற்கு போன்ற சிந்தித்து செயல்படக் கூடிய சில செயல்களை மட்டுமே ரோபோக்கள் செய்கின்றன. இவை நம் மேற்பார்வையிலேயே செயல்படுகின்றன. தனியாகச் செயல்படும் அளவிற்கு வடிவமைக்கப்படவில்லை. உதாரணமாக ஒரு குழந்தை அழுதால் அல்லது சோகமாக இருந்தால் அவர்களின் உணர்வறிந்து தூக்கி அரவணைத்து தட்டிக்கொடுத்து சமாதானப்படுத்த வேண்டும் என்று ரோபோக்களுக்குத் தெரியாது. எதிர்காலத்தில் உணர்ச்சிகளைப் பகுத்தறியும் ரோபோக்கள் உருவாக்கப்பட்டால் இவையும் சாத்தியமே.

**கீழே விழுந்த தேனீர் கோப்பையை எடுக்க முடியுமா?**

இன்றைய சூழலில் உணவகங்களில் மக்களை வரவேற்று தேவையான உணவைப் பரிமாறவும், உணவைச் சமைக்கவும், இடத்தைப் பாத்திரத்தைச் சுத்தம் செய்யவும் ரோபோக்கள் பயன்படுகின்றன. எதிர்பாராமல் நடக்கும் விபத்துகளைக் கண்டறிந்து செயல்படும் உள்ளீடுகளை ரோபோக்களில் கொண்டு வரவில்லை. அவற்றை ரோபோக்களில் உள்ளீடு செய்தால் கீழே விழும் தேனீர் கோப்பையை எடுத்து அப்புறப்படுத்த வேண்டும் என்று சிந்தித்து செயல்படும்.

**செயற்கை நுண்ணறிவின் எதிர்கால வெளிப்பாடுகள் :**

- மனிதனால் செய்ய இயலாத, அலுப்புத் தட்டக்கூடிய, கடினமான செயல்களை செயற்கை நுண்ணறிவுள்ள ரோபோக்கள் செய்யும்.
- எதிர்காலத்தில் ரோபோக்கள் குழந்தைகளைக் கவனித்துக் கொள்ளவும், வயதானவர்களுக்கு உதவிகள் செய்து உற்ற தோழனாகவும் விடுதி, வங்கி மற்றும் அலுவலகங்களில் ஆலோசனை வழங்குவது, தண்ணீர் கொண்டு வந்து தருவது எனப் பலவற்றைச் செய்யும்.
- எதிர்காலத்தில் நாம் பயணிக்கும் ஊர்திகளைச் செயற்கை நுண்ணறிவுடன் செயல்படுத்தினால் விபத்துகள் குறையும், போக்குவரத்து நெரிசல் இருக்காது, நேரம் குறையும், எரிபொருள் மிச்சப்படும்.
- கல்வித்துறையில் இத்தொழில்நுட்பத்தை வகுப்புகள் எடுக்க, தேர்வுகள் நடத்தப் பயன்படுத்தலாம்.
- வங்கிகளில் வாடிக்கையாளர்களின் சேவைகளை அதிகமாக்கித் துரிதப்படுத்திச் செயல்படும் 'உரையாடும் மென்பொருள்' பரவலாகப் பயன்படுத்தப்படலாம்.

**முடிவுரை :**

தொழில் நுட்பங்கள் எவ்வளவுதான் வளர்ந்தாலும் மனிதர்களைப் போன்று உணர்வுப் பூர்வமான செயல்களை ரோபோக்கள் செய்வதற்கான சாத்தியக்கூறு இக்காலத்தில் இல்லை. எதிர்காலத்தில் தொழில் நுட்ப வளர்ச்சியினால் உணர்திறன் போன்றவற்றை கொண்டு வந்தால் ரோபோக்கள் மனிதர்களைப் போல தன்னிச்சையாக செயல்பட வாய்ப்புள்ளது.

**2. நம் முன்னோர் அறிவியல் கருத்துகளை இயற்கையுடன் இணைத்துக் கூறுவதாகத் தொடங்குகின்ற பின்வரும் சொற்பொழிவைத் தொடர்ந்து நிறைவு செய்க.** *செ-2

பேரன்பிற்குரிய அவையோர் அனைவருக்கும் வணக்கம்! இன்று இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழுடன் அறிவியலை நான்காம் தமிழாகக் கூறுகின்றனர். ஆதிகாலந்தொட்டு இயங்கிவரும் தமிழ்மொழியில் அறிவியல் என்பது தமிழர் வாழ்வியலோடு கலந்து கரைந்து வந்துள்ளதை இலக்கியங்கள் மூலம் அறிகிறோம். அண்டத்தை அளந்தும், புவியின் தோற்றத்தை ஊகித்து கூறும் அறிவியல் செய்திகள் இலக்கியங்களில் உள்ளன. சங்க இலக்கியமான பரிபாடலில்.....

***"விசும்பில் ஊழி ஊழ் ஊழ் செல்லக்***
***கரு வளர் வானத்து இசையில் தோன்றி"*** என்ற வரிகளில், உயிர்கள் எதுவும் இல்லாத பரந்தப் பெருவெளியில் அண்டத் தோற்றத்துக்குக் காரணமான கரு (பரமாணு) வானத்தில் பேரொலியுடன் தோன்றியது என்று கீரந்தையார் கூறுகிறார்.

உருவம் இல்லாத காற்று முதலான பூதங்களின் அணுக்களுடன் வளர்கின்ற வானம் என்னும் முதல் பூதத்தின் யுகம்தான் அது. அந்த அணுக்களின் ஆற்றல் கிளர்ந்து பருப்பொருள்கள் சிதறும்படியாகப் பல யுகக்காலங்கள் கடந்து சென்றன.

பின்பு நெருப்புப் பந்துபோலப் புவி உருவாகிய யுகக்காலம் தொடர்ந்து, பின்னர்ப் பூமி குளிரும்படியாகத் தொடர்ந்து மழை பொழிந்த யுகக்காலம் கடந்தது. அவ்வாறு பெய்த தொடர் மழையால் பூமி வெள்ளத்தில் மூழ்கியது. மீண்டும் மீண்டும் பெய்த வெள்ளத்தால் நிறைந்த இப்பெரிய உலகத்தில், உயிர்கள் உருவாகி வாழ்வதற்கு ஏற்ற சூழல் தோன்றியது. உயிர்கள் தோன்றி நிலைபெறும்படியான யுகக்காலம்தான் அது. இதனை கீரந்தையார்

**"மீண்டும் பீடு உயர்பு ஈண்டி, அவற்றிற்கும்**
**உள்ளீடு ஆகிய இருநிலத்து ஊழியும்..."** என்றுக் கூறுகிறார்.

இவ்வாறு உலகம் படிப்படியாகத் தோன்றிய நிகழ்வு குறித்து பரிபாடலில் கீரந்தையார் கூறியுள்ளார். தமிழர் இலக்கியங்களில் துளிர்ந்திருக்கும் அறிவியல் கருத்துகள் இன்றளவும் அவற்றோடு ஒத்துப்போவதைக் காண்கையில் பெருவியப்பு மேலிடுகிறது.

**3. "அறிவியலாளர் ஸ்டீபன் ஹாக்கிங்குடன் விண்வெளிப் பயணம்" என்னும் தலைப்பில் கற்பனைக் கதை ஒன்று எழுதுக.** *து *[PTA – 3]*

**முன்னுரை**

அறிவியல் சுற்றுலா சென்று வந்த களைப்பில் உறங்கிய நான் ஒரு கனவு கண்டேன். அக்கனவில் அறிவியலாளர் ஸ்டீபன் ஹாக்கிங்குடன் விண்வெளியில் பயணம் செய்து கொண்டிருக்கிறேன். அக்கனவில் நிகழ்ந்த அனுபவங்களைப் பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

**ஸ்டீபன் ஹாக்கிங் :**

ஸ்டீபன் ஹாக்கிங் தனது 21 வயதில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். மருத்துவத்திற்குப் பின், அவர் சில திங்களே உயிர் வாழ்வார் என்று மருத்துவர்கள் கூறினார்கள். பக்கவாதம் என்னும் நரம்பு நோய்ப் பாதிப்புடன் அவர், மருத்துவ உலகமே மிரண்டுபோகுமளவு மேலும் 53 ஆண்டுகள் இயங்கினார். விரைவில் கன்னத்தின் தசையசைவும் கண்சிமிட்டலும் தவிர அனைத்து உறுப்புகளும் செயலிழந்துவிட்டன. கன்னத்தசையசைவு மூலம் தன் கருத்தைக் கணினியில் தட்டச்சுசெய்து வெளிப்படுத்தினார்.

**விண்வெளியில் நான் :**

எந்த இயக்கமும் மேற்கொள்ள இயலாத நிலையிலும் அறிவியலின் இயங்கும் தன்மையை அறிந்து புதுப்புது உண்மைகளைச் சொன்ன ஸ்டீபன் ஹாக்கிங்கை நேரில் கண்டு திகைப்புடன் நின்றேன். சிறப்பு வசதிகளையுடைய நாற்காலியில் அமர்ந்துகொண்டு விண்கலத்தில் ஏறினார் ஸ்டீபன் ஹாக்கிங். அவருடன் அவருடைய உதவியாளரும் ஏறினார். விண்கலம் தீயைக் கக்கிக்கொண்டு வானில் சீறிப் பாய்ந்தது. நிறையக் கேள்விகளோடு நான் ஹாக்கிங் அருகில் அமர்ந்திருந்தேன்.

**ஸ்டீபன் ஹாக்கிங்குடன் உரையாடல் :**

எனது கேள்விகளைச் செயற்கை நுண்ணறிவின் துணைகொண்டு உதவியாளர் ஹாக்கிங்குக்குச் சொன்னார்.

- நான் அவருடைய ஹாக்கிங் கதிர்வீச்சு குறித்து விளக்கமளிக்குமாறு கேட்டேன்.

**ஹாக்கிங் கூறிய பதில் :** ஒரு விண்மீனின் ஆயுள்காலம் முடியும்போது அது சுருங்கத் தொடங்குவதால் அதனுடைய ஈர்ப்பாற்றல் அதிகமாகிக்கொண்டே செல்வது பற்றியும் அதன் ஈர்ப்பெல்லைக்குள் செல்லும் எதுவுமே, ஏன் ஒளிகூட வெளியே தப்பி வரமுடியாது என்று, ஜான்வீலர் கூறிய கருந்துளைப் பற்றியும் எனக்குப் புரியும்படி கூறினார்.

- ❋ கருந்துளை என்பது கருப்பாக இருக்கும் என்றே எண்ணியிருந்தேன். அதுகுறித்து அவரிடம் கேட்டேன். **ஹாக்கிங் சிரித்தவாறே கூறிய பதில் :** கருந்துளையினுள் செல்லும் எந்த ஒன்றும் தப்பித்து வெளியே வரமுடியாது. கருந்துளையின் ஈர்ப்பு எல்லையிலிருந்து கதிர்வீச்சுகள் வெளிப்பட்டுக் கொண்டேயிருக்கும். கருந்துளை உண்மையிலேயே கருப்பாக இருப்பதில்லை. ஒரு சில நாட்கள் கழித்துக் கருந்துளையிலிருந்து கதிர்வீச்சும் அணுத்துகள்களும் கசியத் தொடங்கி இறுதியில் கருந்துளை வெடித்து மறைந்துவிடும் என்றார்.
- ❋ கருந்துளை 'அழிவின் ஆற்றல்' அல்ல. அது 'படைப்பின் ஆற்றல்' என்று பறைசாற்றினார்.
- ❋ மேலும் அவரிடம் நான், ஈர்ப்பலைகள் குறித்த முடிவுகளைக் கணிதச் சமன்பாடுகள் மூலம் கோட்பாடுகளாக ஐன்ஸ்டைன் சொன்னார். ஆனால் நீங்கள் கருந்துளைப் பற்றிய ஆய்வில் விண்மீன் இயக்கத்தோடு ஒப்பிட்டு கூறியது எளிதில் புரிந்து கொள்ள உதவியது என்றேன்.
- ❋ மேலும் அறிவியல் உண்மைகளை அறிவியல் அறிஞர்கள்தான் புரிந்துகொள்வார்கள். ஆனால், அவர் கோட்பாடுகளைப் பொதுமக்களுக்கும் புரியும் வகையில் எளிமையாக விளக்கினார்.

ஊக்கமும் உழைப்பும் கொண்ட ஆளுமைத் தன்மை இல்லாதிருப்பதே குறை என்பதை உணர்ந்தேன்.

**முடிவுரை**

சில மணி நேரங்களுக்குப் பிறகு, விண்கலம் பூமிக்குத் திரும்பியது. மிகுந்த மகிழ்ச்சிப் பெருக்கில் நான் திளைத்துக் கொண்டிருந்தபோது என் கனவு கலைந்தது. என் கனவால் எனக்கு ஏற்பட்ட விண்வெளிப் பயண அனுபவத்தை நண்பர்களோடும், உறவினர்களோடும் பகிர்ந்து கொண்டேயிருக்கிறேன்.

## கூடுதல் வினாக்கள்

**4. உங்களைக் கவர்ந்த அறிவியல் அறிஞர்களின் கூற்றுகளை ஒப்பிட்டு, அவை ஸ்டீபன் ஹாக்கிங் கருத்துக்களோடு ஒத்திருப்பதைச் சுவைபட விளக்குக.** *து *[PTA–6]*

**முன்னுரை**

அறிவியல் கருத்துகளை கோட்பாடுகளாக மட்டுமே புரிந்து கொள்ள முடியும் என்று வரையறுத்த ஜான் மில்லர், ஆல்பர்ட் ஐன்ஸ்டீன் போன்ற அறிவியல் அறிஞர்களின் பார்வையில், பொதுமக்களுக்கும் எளிதாக புரியும்படி அறிவியல் கருத்துகளை விளக்கிய ஸ்டீபன் ஹாக்கிங் என் மனம் கவர்ந்த அறிவியல் அறிஞர். ஸ்டீபன் ஹாக்கிங்கின் பேரண்டத்தைப் பற்றிய கருத்துகளை பிற அறிஞர்களின் கூற்றுகளோடு ஒத்திருப்பதை இக்கட்டுரையில் காண்போம்.

**கருந்துளை பற்றிய ஜான் மில்லரின் முதற்கோட்பாடு :**

கருந்துளை பற்றிய கோட்பாட்டை முதன்முதலில் கண்டறிந்து குறிப்பிட்டவர் ஜான் மில்லர் என்னும் அறிவியல் அறிஞர் ஆவார். இவர், "கருந்துளை உள்ளே போக போக ஒளியைக் கூட தப்பவிடாமல் அதனுடைய ஈர்ப்பு எல்லைக்குள் ஈர்க்கும்" எனக் கண்டறிந்து உலகிற்கு கூறினார்.

**ஈர்ப்பலைகள் குறித்த ஆல்பர்ட் ஐன்ஸ்டீனின் கோட்பாடு :**

ஐன்ஸ்டீன் தனது ஈர்ப்பலைகள் பற்றிய கோட்பாட்டை தன் கற்பனைத் திறனுடன் ஒப்பிட்டுக் கூறுகிறார். அவர், $E = MC^2$ என்ற கணிதச் சமன்பாடுகள் மூலம் தனது கருத்துகளை கோட்பாடுகளாகச் சொன்னார். மேலும் அவர் அணுக்கரு வினைகளின் செயல்பாடுகளை பற்றியும் விண்வெளியில் உள்ள ஆற்றல் எவ்வாறு நிறையாக மாறுகிறது, நிறை எங்கே போகிறது, என்பதை கோட்பாடாக மட்டும் விளக்கி கூறினார். அவரது அறிவுத்திறனுடனான கற்பனையை ஏற்றுக் கொள்ள யாரும் முன்வரவில்லை.

**அறிவியல் அணுகுமுறையிலான ஹாக்கிங் கோட்பாடு :**

- கருந்துளை, குறித்த தன்னுடைய ஆய்வை மில்லர் மற்றும் ஐன்ஸ்டீன் போல கோட்பாடுகளாக வெளியிடாமல் விண்மீன் இயக்கத்தோடு ஒப்பிட்டு எளிய மக்களுக்கும் புரியும் வகையில் ஸ்டீபன் ஹாக்கிங் விளக்கியதால் உலகம் கருந்துளை பற்றிய கோட்பாட்டை எளிதில் புரிந்துகொண்டது.
- அனைத்து அறிவியலாளர்களும் கருந்துளை என்பது 'அழிவின் ஆற்றல்' என்று கூறி வந்ததை மாற்றி, கருந்துளையை 'படைப்பின் ஆற்றல்' என்று வரையறுத்தவர் ஸ்டீபன் ஹாக்கிங் ஆவார்.
- **ஹாக்கிங்கின் கதிர்வீச்சுக் கோட்பாடு :**
  (1) கருந்துளையினுள் செல்லும் எந்த ஒன்றும் தப்பித்து வெளியே வரமுடியாது.
  (2) கருந்துளையின் ஈர்ப்பு எல்லையிலிருந்து கதிர்வீச்சுகள் வெளிப்பட்டுக் கொண்டிருக்கின்றன.
  (3) கருந்துளை உண்மையிலேயே கருப்பாக இருப்பதில்லை. ஒரு கட்டத்தில் கதிர்வீச்சும் அணுத்துகள்களும் கசியத் தொடங்கி இறுதியில் கருந்துளை வெடித்து மறைந்துவிடும்.

இவ்வாறாக அறிவுத்தேடலில் உடல், உள்ளத் தடைகளை தகர்த்து எளிய மக்களும் புரிந்துகொள்ளும் வகையில் கருந்துளை, பெருவெடிப்பு கொள்கைகள் பற்றிய அடிப்படை உண்மைகளை உலகிற்கு விளக்கியவர் அறிவியல் மாமேதை ஸ்டீபன் ஹாக்கிங் என்றால் அது மிகையாகாது.

**முடிவுரை**

எளிய கருத்துகளை அறிவியல் அணுகுமுறையுடன் கூறிய ஹாக்கிங்குடைய துணிச்சல், உறுதி, அறிவாற்றல், நகைச்சுவை உணர்வு ஆகியவை உலகமக்களால் என்றென்றும் நினைவில் நிலைத்திருக்கும்.

# 5. மணற்கேணி



## பலவுள் தெரிக

1. 'மாபாரதம் தமிழ்ப்படுத்தும் மதுராபுரிச் சங்கம்வைத்தும்' என்னும் சின்னமனூர்ச் செப்பேட்டுக் குறிப்பு உணர்த்தும் செய்தி *உ [SEP – 2020, PTA – 2]
   **அ) சங்க காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது**
   ஆ) காப்பியக் காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது
   இ) பக்தி இலக்கியக் காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது
   ஈ) சங்கம் மருவிய காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது

2. அருந்துணை என்பதைப் பிரித்தால்___________ *செ-1 [APR – 2023]
   **அ) அருமை + துணை** ஆ) அரு + துணை
   இ) அருமை + இணை ஈ) அரு + இணை

3. 'இங்கு நகரப் பேருந்து நிற்குமா?' என்று வழிப்போக்கர் கேட்டது ______ வினா. *இ [MDL – 19]
   'அதோ, அங்கே நிற்கும்'. என்று மற்றொருவர் கூறியது ___விடை.
   அ) ஐயவினா, வினா எதிர் வினாதல் ஆ) அறிவினா, மறை விடை
   **இ) அறியா வினா, சுட்டு விடை** ஈ) கொளல் வினா, இனமொழி விடை

4. "அருளைப் பெருக்கி அறிவைத் திருத்தி *செ-1 [AUG – 2022, PTA - 3]
   மருளை அகற்றி மதிக்கும் தெருளை" - என்று இவ்வடிகளில் குறிப்பிடப்படுவது எது?
   அ) தமிழ் ஆ) அறிவியல் **இ) கல்வி** ஈ) இலக்கியம்

5. இடைக்காடனாரின் பாடலை இகழ்ந்தவர் ……… இடைக்காடனாரிடம் அன்பு வைத்தவர் ………..
   அ) அமைச்சர், மன்னன் ஆ) அமைச்சர், இறைவன் *செ-2
   இ) இறைவன், மன்னன் **ஈ) மன்னன், இறைவன்**

### கூடுதல் வினா

6. 'ஜெயகாந்தன் சிறுகதைகள் இருக்கிறதா?' என்று நூலகரிடம் வினவுதல் ______ ஆகும். *இ [MAY – 22]
   **அ) கொளல் வினா** ஆ) கொடை வினா இ) ஏவல் வினா ஈ) ஐய வினா

## குறுவினா

1. ***"கழிந்த பெரும் கேள்வியினான் எனக் கேட்டு முழுது உணர்ந்த கபிலன் தன் பால் பொழிந்த பெரும் காதல்மிகு கேண்மையினான் இடைக்காட்டுப் புலவன் தென்சொல்"*** **- இவ்வடிகளில் கழிந்த பெரும் கேள்வியினான் யார்? காதல்மிகு கேண்மையினான் யார்?** *செ-2 [PTA - 2]

| | |
|---|---|
| ❋ கழிந்த பெரும் கேள்வியினான் | குலேசபாண்டிய மன்னன் |
| ❋ காதல்மிகு கேண்மையினான் | புலவர் இடைக்காடனார் |

2. **செய்குதம்பிப் பாவலரின் கல்வி பற்றிய கருத்தினை முழக்கத் தொடர்களாக்குக.** *செ-1
   ❋ அருளைப் பெருக்குவோம்! ❋ அறிவைச் சீராக்குவோம்!
   ❋ அறியாமையை அகற்றுவோம்! ❋ அறிவுக்குத் தெளிவு தருவோம்.
   ❋ அரிய துணையாம் கல்வியைக் கற்போம்! ❋ கல்வியைப் போற்றிக் கற்போம்!

3. **அமர்ந்தான் - பகுபத உறுப்பிலக்கணம் தருக.** *செ-2

| **அமர்ந்தான் - அமர் + த் (ந்) + த் + ஆன்** | |
|---|---|
| அமர் - பகுதி | த் - சந்தி, ந் ஆனது விகாரம் |
| த் - இறந்தகால இடைநிலை | ஆன் - படர்க்கை ஆண்பால் வினைமுற்று விகுதி |

**4. இந்த அறை இருட்டாக இருக்கிறது. மின்விளக்கின் சொடுக்கி எந்தப் பக்கம் இருக்கிறது? இதோ... இருக்கிறதே! சொடுக்கியைப் போட்டாலும் வெளிச்சம் வரவில்லையே! மின்சாரம் இருக்கிறதா, இல்லையா? மேற்கண்ட உரையாடலில் உள்ள வினாக்களின் வகைகளை எடுத்தெழுதுக.** *இ *[PTA -3]*

அ) மின்விளக்கின் சொடுக்கி எந்தப்பக்கம் இருக்கிறது? - **அறியா வினா**

ஆ) மின்சாரம் இருக்கிறதா? இல்லையா? - **ஐய வினா**

## கூடுதல் வினாக்கள்

**5. குறிப்பு வரைக – 'சதாவதானம்'.** *செ-1 *[APR - 2023]*

* 'சதம்' என்றால் நூறு என்று பொருள்.
* ஒருவரது புலமையும், நினைவாற்றலையும் நுண்அறிவையும் சோதிப்பதற்காக ஒரே நேரத்தில் நிகழ்த்தப்படும் நூறு செயல்களையும் நினைவில் கொண்டு விடையளித்தல் சதாவதானம் எனப்படும்.

**6. மொழிபெயர்ப்பைப் பற்றி மணவை முஸ்தபா குறிப்பிடுவது யாது?** *உ *[MDL–19]*

"ஒரு மொழியில் உணர்த்தப்பட்டதை வேறொரு மொழியில் வெளியிடுவதே மொழிபெயர்ப்பு." என்று மணவை முஸ்தபா கூறுகிறார்.

**7. பாலகுமாரன் புதினங்கள் இருக்கிறதா? என்று நூலகரிடம் வினவுவது எவ்வகை வினா?** கொளல் வினா. **பிரபஞ்சன் புதினங்கள் இருக்கிறது என்று நூலகர் கூறுவது எவ்வகை விடை?** இனமொழி விடை. *இ *[SEP–2020]*

## சிறுவினா

**1. மன்னன் இடைக்காடனார் என்ற புலவனுக்குச் சிறப்புச் செய்தது ஏன்? விளக்கம் தருக.** *செ-2 *[PTA - 3]*

* புலவர் இடைக்காடனார், குலேச பாண்டிய மன்னனின் அவையில் தன் கவிதையை பாடினார். மன்னன், இடைக்காடனார் கவிதையை சுவைக்காமல் அவமதித்தார். புலவர் இறைவனிடம் முறையிட்டார்.
* இறைவன் இடைக்காடனாரின் வேண்டுதலைக் கேட்டு, தம்முடைய இலிங்க வடிவத்தை மறைத்து கடம்பவனத்திலிருந்து வெளியேறி, வடக்கே ஒரு திருக்கோவிலை உண்டாக்கி அங்குச் சென்றார்.
* இதனை அறிந்த மன்னன் தன் பிழையைப் பொறுத்தருளுமாறு இறைவனிடம் வேண்டி மனம் மாறி, புலவர்கள் சூழ இடைக்காடனாருக்கு ஒப்பனை செய்து சிறப்புச் செய்தான்.

**2. உங்களுடன் பயிலும் மாணவர் ஒருவர் பள்ளிப் படிப்பைப் பாதியில் நிறுத்தி வேலைக்குச் செல்ல விரும்புகிறார். அவரிடம் கற்பதன் இன்றியமையாமையை எவ்வகையில் எடுத்துரைப்பீர்கள்?** *[PTA-1]*

➔ **கற்கையில் கசக்கும் கல்வி கற்றபின் இனிக்கும் :** **(செ–நீதிவெண்பா)**

* இளமையில் கற்கும் கல்வி முதுமையில் நம்மைக் காப்பாற்றும்.
* கல்வி பணிக்காக மட்டுமல்ல, நம்முடைய வாழ்க்கையை மேம்படுத்தவும் உதவும்.
* எப்போது வேண்டுமானாலும் நம்மால் பணத்தை ஈட்ட முடியும். ஆனால் இளம் வயதில் மட்டுமே முழுமையாகக் கல்வியைக் கற்க முடியும் போன்ற உண்மைகளை எடுத்துரைப்பேன்.

➔ **கனவுகள் மெய்ப்படக் கல்வி அவசியம் :**

* நாம் கல்வி கற்றால்தான் நம்முடைய தலைமுறையை அறியாமையிலிருந்து காப்பாற்ற முடியும்.
* 'கனவுகள் மெய்ப்பட, கல்வி அவசியம்' என்ற கலாமின் பொன்மொழியை நினைவுபடுத்துவேன்.

➔ **உலகை வெல்லும் ஆயுதம் கல்வி :**

* கல்வி கற்றவர்கள் அடைந்த நிலையையும், கல்வி கற்காமல் திரிபவர்களையும் ஒப்பிட்டுப் பார்க்கச் சொல்லி, அவனை மீண்டும் பள்ளிக்கு அழைத்து வந்து கல்வி கற்க வைப்பேன்.

**3. ஐக்கிய நாடுகள் அவையில் மொழிபெயர்ப்பு** *உ

ஐ.நா.அவையில் ஒருவர் பேசினால் அவரவர் மொழிகளில் புரிந்துகொள்வதற்கு வசதி செய்யப்பட்டிருக்கிறது. மொழிபெயர்ப்பு (Translation) என்பது எழுதப்பட்டதை மொழிபெயர்ப்பது; ஆனால் ஒருவர் பேசும்போதே மொழிபெயர்ப்பது விளக்குவது (Interpreting) என்றே சொல்லப்படுகிறது. ஐ.நா.அவையில் ஒருவர் பேசுவதை மொழிபெயர்க்கும் மொழிபெயர்ப்பாளர் பார்வையாளர்களுக்குத் தெரியாதபடி வேறு இடத்தில் இருப்பார். ஒருவர் பேசுவதைக் காதணிகேட்பியில் (Headphone) கேட்டபடி சில நொடிகளில் மொழிபெயர்த்து ஒலிவாங்கி வழியே பேசுவார். அவையில் உள்ள பார்வையாளர் தம்முன் உள்ள காதணிகேட்பியை எடுத்துப் பொருத்திக்கொண்டு அவரது மொழியில் புரிந்துகொள்வார்.

**இப்பகுதியிலிருந்து ஐந்து வினாக்களை உருவாக்குக.**

1. ஐ.நா. அவையில் ஒருவர் பேசுவதை அவரவர் தாய்மொழியில் கேட்க இயலுமா?
2. மொழிபெயர்ப்பு என்றால் என்ன?
3. ஒருவர் பேசும்போதே மொழிபெயர்ப்பதை எவ்வாறு அழைக்கப்படுகிறது?
4. ஐ.நா. அவையில் மொழிபெயர்ப்பு வசதி எவ்வாறு அமைக்கப்பட்டுள்ளது?
5. மேற்கண்ட உரைப்பத்திக்குப் பொருத்தமான தலைப்பு ஒன்று தருக.

**4.** முயற்சி திருவினை ஆக்கும் முயற்றின்மை
இன்மை புகுத்தி விடும். *இ

**இக்குறட்பாவில் அமைந்துள்ள பொருள்கோளின் வகையைச் சுட்டி விளக்குக.**

| இப்பாடலில் அமைந்துள்ள பொருள்கோள் **ஆற்றுநீர்ப் பொருள்கோள்.** | |
|---|---|
| **இலக்கணம்** | பாடலின் தொடக்கம் முதல் முடிவு வரை ஆற்றுநீரின் போக்கைப் போல நேராகவே பொருள் கொள்ளுமாறு அமைதல் ஆற்றுநீர்ப் பொருள்கோள். |
| **பாடல்பொருள்** | முயற்சி ஒருவனுக்கு செல்வத்தைப் பெருகச் செய்யும், முயற்சி இல்லாதிருத்தல் அவனுக்கு வறுமையை உருவாக்கிவிடும். |
| **பொருத்தம்** | இக்குறட்பாவில், முயற்சி செல்வத்தைத் தரும்; முயற்சி செய்யாமை வறுமையைத் தரும் என்று பாடலின் தொடக்கம் முதல் முடிவு வரை, நேராகப் பொருள் கொள்ளும் முறையில் அமைந்திருப்பதால் இது ஆற்றுநீர்ப் பொருள்கோள் ஆயிற்று. |

## கூடுதல் வினா

**5. கொண்டுகூட்டுப் பொருள்கோளினை விளக்கி, எடுத்துக்காட்டு ஒன்று தருக.** *இ *[PTA-4]*

| | |
|---|---|
| **இலக்கணம்** | ஒருசெய்யுளில் பல அடிகளில் சிதறிக்கிடக்கும் சொற்களைப் பொருளுக்கு ஏற்றவாறு ஒன்றோடொன்று கூட்டிப் பொருள் கொள்வது கொண்டுகூட்டுப் பொருள்கோள் ஆகும். |
| **எடுத்துக்காட்டு** | "ஆலத்து மேல குவளை குளத்துள<br>வாலின் நெடிய குரங்கு" |
| **பொருத்தம்** | இதில் ஆலத்து மேல குரங்கு, குளத்துள குவளை – என்று கருத்தைக் கொண்டு அங்குமிங்கும் பொருள்கோள் அமைந்திருப்பதால் இது கொண்டு கூட்டுப் பொருள்கோள் எனப்படும். |

## நெடுவினா

**1. இறைவன், புலவர் இடைக்காடன் குரலுக்குச் செவிசாய்த்த நிகழ்வை நயத்துடன் எழுதுக.** *செ-2 *[PTA – 1]*

**அ) இடைக்காடனார் மன்னரின் அவையில் கவிதை படித்தல் :**
கலைகளை முழுவதும் உணர்ந்த நண்பர் கபிலனின் மேல் அன்புகொண்ட இடைக்காடனார், தேன் ஒழுகும் வேப்பமாலையினை அணிந்த பாண்டியனின் அவைக்குச் சென்று, தான் இயற்றிய கவிதையைப் படித்தார். பாண்டிய மன்னன் இடைக்காடனார் கவிதையைச் சுவைக்காமல் அவமதித்தார்.

**ஆ) பாண்டிய மன்னனின் செயலை இறைவனிடம் முறையிட்டல் :**
இடைக்காடனார் இறைவனிடம் "பாண்டியன், பொருட்செல்வத்தோடு கல்விச் செல்வமும் மிக உடையவன் எனக் கூறக்கேட்டு, அவன் முன் சொற்சுவை நிரம்பிய கவிதை பாடினேன். அவனோ சிறிதேனும் சுவைத்துத் தலை அசைக்காமல் புலமையை அவமதித்தான்"

**இ) இறைவன் புலவரின் புலம்பலுக்குச் செவிசாய்த்தல் :**
"பாண்டியன் என்னை இகழவில்லை, சொல்லின் வடிவாக உன் இடப்புறம் வீற்றிருக்கும் பார்வதி தேவியையும், சொல்லின் பொருளாக விளங்கும் உன்னையுமே அவமதித்தான்" என்று சினத்துடன் கூறி முறையிட்டார். அவரது சொல் வேற்படைபோல் இறைவனின் திருச்செவியில் சென்று தைத்தது.

**ஈ) இறைவன் கோவிலைவிட்டு நீங்குதல் :**
இடைக்காடனாருக்கு மனமகிழ்ச்சி உண்டாக்க இறைவன், ஞானமயமாகிய தம்முடைய இலிங்க வடிவத்தை மறைத்து உமாதேவியாரோடும் கடம்பவனத் திருக்கோவிலை விட்டு வெளியேறி, நேர் வடக்கே ஒரு திருக்கோவிலை உண்டாக்கி அங்குச் சென்றார்.

**உ) இறைவனிடம் மன்னன் வேண்டுதல் :**
"இறைவனே, என்னால், என் படைகளால், என் பகைவரால், தங்களுக்கு இடையூறு ஏற்பட்டதா? தவமும் தருமமும் சுருங்கியதோ? இல்லறமும் துறவறமும் தத்தம் நெறியில் இருந்து தவறினவோ? எமது தந்தையே யான் அறியேன்" என்று வேண்டினான் பாண்டியன்.

**ஊ) மன்னன் தன் பிழையை உணர்தல் :**

"இடைக்காடனார் பாடலை இகழ்ந்த குற்றம் தவிர வேறு குற்றம் உன்னிடம் இல்லை" என்றார் இறைவன். வானிலிருந்து ஒலித்த இறைவனின் சொற்கேட்டுப் பாண்டிய மன்னன், "புண்ணியனே, சிறியவர்களின் குற்றம் பொறுப்பது பெரியவருக்குப் பெருமையல்லவா?" என்று வேண்டினான்.

**எ) புலவருக்கு மன்னன் சிறப்புச் செய்தல் :**

மன்னன், தன் மாளிகையில் இடைக்காடனாரை மங்கலமாக ஒப்பனை செய்து பொன் இருக்கையில் விதிப்படி அமர்த்தி மன்னிப்புக் கேட்டான். புலவர்களும் மன்னனை மன்னித்தனர்.

**2. *'கற்கை நன்றே கற்கை நன்றே பிச்சை புகினும் கற்கை நன்றே'* என்கிறது வெற்றிவேற்கை. மேரியிடமிருந்து பறிக்கப்பட்ட புத்தகம், அச்சிறுமியின் வாழ்க்கையில் கல்விச் சுடரை ஏற்றிய கதையைப் பற்றிய உங்களின் கருத்துகளை விவரிக்க.** *து *[APR – 2023, PTA – 2, MDL -19]*

| குறிப்புச்சட்டகம் | |
|---|---|
| ❋ முன்னுரை | ❋ கல்வியின் மீது தாகம் |
| ❋ பருத்திப்பூவில் மகிழ்ச்சியடையும் மேரி | ❋ கல்விச்சுடர் ஏற்றிய வில்சன் |
| ❋ பறிக்கப்பட்ட புத்தகம் | ❋ முடிவுரை |

**முன்னுரை**

சில வார்த்தைகள் சிலரது வாழ்க்கையையே உயர்த்திவிடும் வல்லமை படைத்தவை. **உனக்குப் படிக்கத் தெரியாது** என்ற மூன்று வார்த்தைகள் மேரியின் வாழ்க்கையை மாற்றிய உண்மை கதை இது. கல்வியறிவு மறுக்கப்பட்ட கறுப்பின பெண்மணி கல்வி வளர்ச்சி பெற்று, தன் சமூகத்திற்கே ஒற்றைச் சுடராக ஒளிர்ந்து வாழ்ந்தவர்தான் மேரிஜேன் என்பவர்.

**பருத்திப்பூவில் மகிழ்ச்சியடையும் மேரி :**

அமெரிக்காவின் ஓர் ஊரில் பருத்திக்காட்டில் கூலி வேலை செய்து பிழைத்து வந்த சாம் மெக்லியோட், பாட்ஸி தம்பதியரின் மகள்தான் மேரி என்ற கறுப்பு வைரம். சாம்-ன் பிள்ளைகளில் மேரி மிகவும் வேறுபட்ட பெண்ணாக, துடிப்புடன் பெற்றோருக்குத் துணையாகவே வலம் வந்தாள். பருத்திப்பூமொட்டு மலர்வதைப் பார்க்கிற முதல் ஆளாக, தானே இருக்க வேண்டும் என்று விரும்பி வெற்றியும் கண்டவள்.

**பறிக்கப்பட்ட புத்தகம் :**

பென் வில்சனின் மாளிகை வீட்டில் வேலை செய்வது அவர்களது தொடர்பணியாகும். ஒருநாள் பாட்ஸியும் மேரியும் பின்புறக் கதவுப்பக்கமாக வீட்டினுள் சென்றனர். வெள்ளைக் குழந்தையொன்று மேரியை 'உள்ளே வா' என்றது. மேரி தயக்கத்துடன் உள்ளே நுழைந்து விளையாட்டுப் பொருட்களையெல்லாம் பார்த்தாள். மேசையின் மீதிருந்த ஒரு புத்தகத்தை எடுத்துப் புரட்டிப்பார்த்தாள் மேரி. 'உன்னால் படிக்க முடியாது' என்று சொல்லி அந்த சிறுமி மேரியின் கையில் இருந்த புத்தகத்தை வெடுக்கென்று பிடுங்கிக் கொண்டாள்.

**கல்வியின் மீது தாகம் :**

இச்செயலால் மனம் வேதனை அடைந்த மேரி நட்புணர்வற்ற அந்த இடத்திலிருந்து வெளியேறினாள். "நான் படிக்க வேண்டும்! நான் வாசிக்கக் கற்றுக் கொள்ளப் போகிறேன், நான் எழுதப்படிக்கப் போகிறேன்" என்று தனக்குத் தானே சொல்லிக் கொண்டாள். 'தான் எப்படியும் படித்தே ஆகவேண்டும்' என்று உறுதிபூண்டு இறைவனிடம் மனமுருகி வேண்டினாள்.

**கல்விச்சுடர் ஏற்றிய வில்சன் :**

மேரியின் வேண்டுதலுக்கு இணங்க வெள்ளை மாளிகையிலுள்ள திருமதி வில்சனை சந்தித்தார். இவர் மேரியைப் போன்ற குழந்தைகள் படித்தாக வேண்டும் என்ற குறிக்கோள் உடையவர். திருமதி வில்சன், மேரியின் வேலைகளை முடித்துவிட்டு படிக்க வர சொல்லி, "எழுதவும் படிக்கவும் கூடியவர்" என்ற பட்டத்தைப் பெற உதவி செய்தாள். உயர்நிலைப்பள்ளிக்குப் போக ரயில் நிலையம் வரை வந்து மேரி செல்ல வேண்டிய இடம், சந்திக்க வேண்டிய ஆசிரியர் பற்றிய குறிப்புகளை கூறி வில்சன் வழியனுப்பினார். 'புதிய நம்பிக்கை' என்ற கல்விச்சுடரை ஒரு கருப்பினப் பெண்மணியின் வாழ்வில் ஏற்றிய பெருமை திருமதி வில்சனை சேரும்.

**முடிவுரை**

இவ்விதம் மாளிகை வீட்டில் மேரியிடமிருந்து பறிக்கப்பட்ட அந்தப்புத்தகமே மேரியின் வாழ்க்கையில் கல்விச்சுடரை ஏற்றியது எனலாம். ஒடுக்கப்பட்ட, கல்வி மறுக்கப்பட்ட கறுப்பினச் சமூகத்தின் குலவிளக்கு, விடிவெள்ளி சிறுமி மேரி தான் என்பதில் ஐயமில்லை.

3. தமிழின் இலக்கிய வளம் - கல்வி மொழி - பிறமொழிகளில் உள்ள இலக்கிய வளங்கள் - அறிவியல் கருத்துகள் - பிறதுறைக் கருத்துகள் - தமிழுக்குச் செழுமை *[PTA - 4]* (அல்லது) முன்னுரை - மொழிபெயர்ப்பு நூல்கள் - எட்டுத்திக்கின் கலைச்செல்வங்கள் கொணர்ந்திங்கு சேர்ப்பீர் - மொழிபெயர்ப்பும் கல்வியே - முடிவுரை. *[PTA –5]*

**மேற்கண்ட குறிப்புகளைக் கொண்டு 'செம்மொழித் தமிழுக்கு வளம் சேர்க்கும் மொழிபெயர்ப்புக் கலை' என்ற தலைப்பில் வார இதழ் ஒன்றுக்கு நடுப்பக்கக் கட்டுரை எழுதுக.** *உ

## செம்மொழித் தமிழுக்கு வளம் சேர்க்கும் மொழிபெயர்ப்புக் கலை

**முன்னுரை :**

ஒரு குறிப்பிட்ட மொழியின் இலக்கிய வளமையையும், நில தனித்துவங்களையும், வாழ்வியல்களையும் நம் தாய்மொழியில் அறிந்துகொள்வதற்கு உதவுவது மொழிபெயர்ப்பு ஆகும். நம் தாய்மொழியாம் செம்மொழித் தமிழுக்கு மொழிபெயர்ப்புக்கலை எவ்வாறு வளம் சேர்த்துள்ளது என்பதை இக்கட்டுரையின் வாயிலாக நாம் அறிந்து கொள்ளலாம்.

**தமிழின் இலக்கிய வளம் :**

- உலக இலக்கியங்களுள் முதன்மை பெற்றுள்ளவை சங்க இலக்கியங்கள். இவ்வளவிற்கு விரிவாக உருவாக்கப்பட்ட இலக்கியங்கள், உலகில் வேறு எம்மொழியிலும் இல்லை என்பது உலக இலக்கியங்களை ஆய்ந்த கமில்சுவலபில் என்னும் செக் நாட்டு மொழியியல் பேரறிஞரின் முடிவு.
- இத்தனை சிறப்புடைய தமிழ்மொழியின் இலக்கியங்களை மொழிபெயர்ப்புச் செய்வதன் மூலம் நம்முடைய பண்பாட்டையும் இலக்கியச் செறிவையும் நாம் உலகறியச் செய்ய முடியும்.
- தமிழிலிருந்து முதன்முதலாக 1595இல் திருக்குறள் மலையாளத்திற்கு மொழிபெயர்க்கப்பட்டது.
- 1730இல் இலத்தீன் மொழியில் வீரமாமுனிவர் திருக்குறளை மொழிபெயர்த்தார்.
- எட்வின் அர்னால்டின் ஆசிய ஜோதி என்ற நூல் கவிமணியால் தழுவி எழுதப்பட்டது.
- லியோ டால்ஸ்டாயின் அன்னா கரீனா, போரும் அமைதியும் ஆகியன தமிழில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.

**மொழிபெயர்ப்பு - கல்வி மொழி :**

- நம்முடைய இலக்கியங்களைப் பிறமொழிகளில் மொழிபெயர்ப்பதால் அம்மொழி பேசுவோர் நம் தமிழ்மொழியின் சிறப்பறிந்து தமிழைக் கற்கத் தொடங்குவர்.
- இதனால் தமிழ் உலகளாவிய கல்வி மொழியாக ஏற்றம் பெறும். அதனால், மனித வளத்தை முழுமையாகப் பயன்படுத்த முடியும்; வேலைவாய்ப்புத் தளத்தை விரிவாக்க முடியும்;
- மொழிபெயர்ப்பானது ஒரு தனிக்கலை. மொழிபெயர்ப்பாளர் எந்த மொழியுடனும் தனிப்பற்றுக் கொள்ளாமல், நடுநிலையில் நின்று மொழிபெயர்க்க வேண்டும். குறிப்பாக அவருக்கு இரண்டு மொழிகளிலும் (தருமொழி, பெறுமொழி) புலமை இருத்தல் வேண்டும். இரு மொழிகளின் சமூக, பண்பாட்டுச் சூழ்நிலைகளை நன்கு அறிந்திருத்தல் வேண்டும். எனவே, மொழிபெயர்த்தல் ஒரு கல்வியே ஆகும்.

**அறிவியல் கருத்துகள் :**

நம்முடைய அறிவியல் சிந்தனை மேலும் மேம்பட, பிற மொழியில் உருவாகியுள்ள அறிவியல் கருத்துகளை தமிழ் மொழியில் மொழிபெயர்க்க வேண்டும். புதிய கண்டுபிடிப்புகளில் வரும் பிறமொழி அறிவியல் சொற்களுக்குரிய புதிய புதிய சொற்கள் தமிழில் உருவாக்கப்பட வேண்டும். அப்போதுதான் நவீன உலகில் தமிழ்மொழி வளர்ச்சியடையும்.

**பிறதுறைக் கருத்துகள் :**

சமூக ஊடகங்கள், தொலைக்காட்சி, வானொலி, திரைப்படம், வார, மாத, தினசரி இதழ்கள், விளம்பரங்கள் என அனைத்துத் துறைகளின் வளர்ச்சியிலும் மொழிபெயர்ப்பு முக்கிய பங்காற்றுகிறது. இதன் காரணமாக நம் மொழியில் புதிய சிந்தனைகள், புதிய மொழிக்கூறுகள், புதிய சொற்கள் உருவாகி தமிழ் வளர்ச்சியடைய ஏதுவாகிறது.

**பிறமொழிகளில் உள்ள இலக்கிய வளங்கள் :**

***"சென்றிடுவீர் எட்டுத்திக்கும் - கலைச்***
***செல்வங்கள் யாவும்கொணர்ந்திங்குச் சேர்ப்பீர்"***- என்ற பாரதியின் கூற்றை நாம் நடைமுறைப்படுத்த வேண்டும். இராமாயணம், மகாபாரதம் போன்றவை வடமொழியிலிருந்து தமிழில் மொழிபெயர்க்கப்பட்டவை. இவைபோன்றே பிற வெளிநாட்டு மொழிகளிலிருந்தும் இலக்கியங்கள் நம் தாய்மொழியில் மொழிபெயர்த்தால்தான் நம்மொழி மேலும் செழுமை பெறும்.

**முடிவுரை :**

பன்னாட்டு மக்களுடன் பழகும் வாய்ப்பு அதிகரித்துள்ளதால், அவரவர் மொழிகளில் உறவினை மேம்படுத்திக் கொள்ள மொழிபெயர்ப்பு இன்றியமையாததாக மாறிவிட்டது. கால வெள்ளத்தால் அடித்துச் செல்ல முடியாத மொழியாய் நம் செந்தமிழ்மொழி விளங்குகிறது. மேற்கண்ட முறைகளைக் கொண்டு மொழிபெயர்ப்புக் கலையை நாம் திறம்பட பயன்படுத்தினால் நம் தாய்மொழிக்கு வளம் சேர்க்கலாம்.

# 6. நிலா முற்றம்



## பலவுள் தெரிக

1. குளிர் காலத்தைப் பொழுதாகக் கொண்ட நிலங்கள்... *இ *[PTA - 3]*
   அ) முல்லை, குறிஞ்சி, மருத நிலங்கள்
   ஆ) குறிஞ்சி, பாலை, நெய்தல் நிலங்கள்
   **இ) குறிஞ்சி, மருதம், நெய்தல் நிலங்கள்**
   ஈ) மருதம், நெய்தல், பாலை நிலங்கள்

2. ஒயிலாட்டத்தில் இருவரிசையில் நின்று ஆடுகின்றனர். இத்தொடரின் செயப்பாட்டு வினைத் தொடர் எது?
   அ) ஒயிலாட்டத்தில் இருவரிசையில் நின்று ஆடுவர். *உ *[PTA - 6]*
   ஆ) ஒயிலாட்டத்தில் இருவரிசையில் நின்று ஆடப்படுகிறது.
   **இ) ஒயிலாட்டம் இருவரிசையில் நின்று ஆடப்படுகிறது.**
   ஈ) ஒயிலாட்டம் இருவரிசையில் நின்று ஆடப்படுகின்றனர்.

3. மலர்கள் தரையில் நழுவும். எப்போது? *செ-1 *[PTA - 1]*
   அ) அள்ளி முகர்ந்தால் **ஆ) தளரப் பிணைத்தால்**
   இ) இறுக்கி முடிச்சிட்டால் ஈ) காம்பு முறிந்தால்

4. கரகாட்டத்தைக் கும்பாட்டம் என்றும் குடக்கூத்து என்றும் கூறுவர். இத்தொடருக்கான வினா எது? *உ *[PTA-5]*
   அ) கரகாட்டம் என்றால் என்ன?
   ஆ) கரகாட்டம் எக்காலங்களில் நடைபெறும்?
   இ) கரகாட்டத்தின் வேறுவேறு வடிவங்கள் யாவை?
   **ஈ) கரகாட்டத்தின் வேறு பெயர்கள் யாவை?**

5. கோசல நாட்டில் கொடை இல்லாத காரணம் என்ன? *செ-3 *[APR – 2023, AUG – 2022, SEP – 2021, PTA – 4]*
   அ) நல்ல உள்ளம் உடையவர்கள் இல்லாததால் ஆ) ஊரில் விளைச்சல் இல்லாததால்
   இ) அரசன் கொடுங்கோல் ஆட்சி புரிவதால் **ஈ) அங்கு வறுமை இல்லாததால்**

## கூடுதல் வினாக்கள்

6. கூத்துக்கலைஞர் பாடத் தொடங்கினார். கூடியிருந்த மக்கள் அமைதியாயினர்.
   - இத்தொடர்களின் சரியான கலவைத் தொடர் *உ *[PTA - 2]*
   அ) கூத்துக்கலைஞர் பாடவில்லை என்றால் கூடியிருந்த மக்கள் அமைதியாயிரார்.
   **ஆ) கூத்துக்கலைஞர் பாடத்தொடங்கியதும் கூடியிருந்த மக்கள் அமைதியாயினர்.**
   இ) கூத்துக்லைஞர் பாடத்தொடங்கினார் என்பதால் கூடியிருந்த மக்கள் அமைதியாயினர்.
   ஈ) கூத்துக்கலைஞர் பாடத்தொடங்கி கூட்டத்திலிருந்தவர்களை அமைதிப்படுத்தி வைத்தார்.

7. தொல்காப்பியம் குறிப்பிடும் இசைக்கருவி *உ *[MDL - 19]*
   அ) ஜால்ரா **ஆ) பறை** இ) உறுமி ஈ) நாதஸ்வரம்

8. முல்லை நிலமக்களின் உணவுப் பொருள்கள் *இ *[PTA - 6]*
   அ) வெண்நெல், வரகு ஆ) மலைநெல், திணை
   **இ) வரகு, சாமை** ஈ) மீன், செந்நெல்

9. பொருத்துக. *இ **[PTA - 4] [QR]**
   1) குறிஞ்சி - i) உப்புவிளைத்தல்
   2) முல்லை - ii) நெல்லரிதல்
   3) மருதம் - iii) நிரை மேய்த்தல்
   4) நெய்தல் - iv) தேனெடுத்தல்

| தெரிவுகள் | | | | |
|---|---|---|---|---|
| **அ)** | **1-iv** | **2-iii** | **3- ii** | **4-i** |
| ஆ) | 1-iii | 2-ii | 3-iv | 4-i |
| இ) | 1-i | 2-iv | 3-ii | 4- iii |
| ஈ) | 1-ii | 2-i | 3-iii | 4-iv |

## குறுவினா

1. **காட்டில் விளைந்த வரகில் சமைத்த உணவு மழைக்கால மாலையில் சூடாக உண்ணச் சுவை மிகுந்திருக்கும். இத்தொடரில் அமைந்துள்ள முதற்பொருள், கருப்பொருள்களை வகைப்படுத்தி எழுதுக.** *இ *[PTA - 2]*

✱ முதற்பொருள் • **நிலம்** - காடு

• **பொழுது** : 1. **பெரும்பொழுது** - கார்காலம் (மழைக்காலம்)

2. **சிறுபொழுது** - மாலை

✱ **கருப்பொருள் :** உணவு - வரகு

2. **"நேற்று நான் பார்த்த அருச்சுனன் தபசு என்ற கூத்தில் அழகிய ஒப்பனையையும் சிறந்த நடிப்பையும் இனிய பாடல்களையும் நுகர்ந்து மிக மகிழ்ந்தேன்!" என்று சேகர் என்னிடம் கூறினான். இக்கூற்றை அயற்கூற்றாக எழுதுக.** *பொது

முன்தினம், அவன் பார்த்த அருச்சுனன் தபசு என்ற கூத்தில் அழகிய ஒப்பனையையும், சிறந்த நடிப்பையும், இனிய பாடல்களையும் நுகர்ந்து மிகவும் மகிழ்ந்ததாக சேகர் என்னிடம் கூறினான்.

3. ***உறங்குகின்ற கும்பகன்ன 'எழுந்திராய் எழுந்திராய்'*** *செ-3 *[SEP – 2020, PTA - 6]*
***காலதூதர் கையிலே 'உறங்குவாய் உறங்குவாய்'***
**கும்பகன்னனை என்ன சொல்லி எழுப்புகிறார்கள்? எங்கு அவனை உறங்கச் சொல்கிறார்கள்?**

✱ "உறங்குகின்ற கும்பகருணனே! உன்னுடைய பொய்யான வாழ்வெல்லாம் முடியப் போகிறது. அதனைக் காண்பதற்கு உறக்கத்தை விட்டு எழுந்திடுவாய்!" என்று சொல்லி எழுப்புகிறார்கள்.

✱ "காற்றாடி போல எல்லா இடங்களிலும் திரிகின்ற வில்லைப் பிடித்த காலனுக்குத் தூதரானவர் கையில் படுத்து உறங்குவாய்..." என அவன் உறங்க வேண்டிய இடத்தை சொல்கின்றனர்.

4. ***சாந்தமானதொரு பிரபஞ்சத்தைச்***
***சுமக்கின்றன ஒல்லித் தண்டுகள்*** **- இக்கவிதை அடிகள் உணர்த்தும் உள்ளழகை எழுதுக.** *செ-1 *[PTA - 5]*

✱ பெண்களே இவ்வுலகத்தைத் தாங்கும் போராளிகள் என்பதை இவ்வடிகள் அழகாக எடுத்துரைக்கின்றன.

✱ பூக்களை ஒல்லியான காம்புகள் தாங்குகின்றன. அதனைப்போல பெரிய குடும்பச்சுமைகளை பெண்ணெனும் ஒல்லித்தண்டு தாங்கிக்கொள்கிறது.

5. **கீழ்வரும் தொடர்களில் பொருந்தாத கருப்பொருளைத் திருத்தி எழுதுக.** *இ

**(அ)** உழவர்கள் மலையில் உழுதனர்.

**திருத்திய கூற்று :** குறவர்கள் மலையில் கிழங்கு தேனெடுத்தனர்.

**(ஆ)** முல்லைப் பூச்செடியைப் பார்த்தவாறே பரதவர் கடலுக்குச் சென்றனர்.

**திருத்திய கூற்று :** நெய்தல் பூச்செடியைப் பார்த்தவாறே பரதவா் கடலுக்குச் சென்றனர்.

## சிறுவினா

1. **வைத்தியநாதபுரி முருகன் குழந்தையாக அணிந்திருக்கும் அணிகலன்களுடன் செங்கீரை ஆடிய நயத்தை விளக்குக.** *செ-2 *[PTA – 1, MDL -19]*

✱ முருகன் திருவடிகளில் அணிந்த செம்பொன் கிண்கிணிகளோடு சிலம்புகளும் சேர்ந்து ஆடின.

✱ இடையில் அணிந்திருந்த அரைஞாண் கயிற்றோடு, ஒளி வீசுகின்ற அரைவடங்கள் ஆடியது.

✱ பசும்பொன் என ஒளிரும் தொந்தியுடன் சிறுவயிறு சரிந்தாடியது.

✱ பட்டம் கட்டிய நெற்றியில் பொட்டுடன் வட்டவடிவான நெற்றிச்சுட்டி பதிந்து ஆடியது.

✱ காதில் அணிந்துள்ள கம்பிகளால் உருவான குண்டலங்களும் குழைகளும் அசைந்து ஆடின.

✱ தலையிலுள்ள சூழியும், உச்சிக் கொண்டையும் அதில் சுற்றியுள்ள முத்துகளோடு அசைந்து ஆடின.

✱ அழகிய பவளம் போன்ற திருமேனியும் ஆட, செங்கீரை ஆடுக.

இவ்வாறு வைத்தியநாதபுரியில் எழுந்தருளியுள்ள முருகப் பெருமான் அழகிய அணிகலன்களுடன் செங்கீரை ஆடியதைக் குமரகுருபரர் நயம்பட எடுத்துரைக்கிறார்.

**2. நவீன கவிதையில் வெளிப்படும் நுண்மை உள்ளம், பூத்தொடுக்கும் நாட்டுப்புறப் பாடலில் வெளிப்படுகிறது. ஒப்பிட்டு எழுதுக.** *செ-1 *[PTA - 5]*

(**குறிப்பு :** நவீன கவிதை மற்றும் நாட்டுப்புறப் பாடலுக்கு பாட புத்தக பக்க எண் : 148 காண்க.)

| விடை | |
|---|---|
| **நவீன கவிதை** | **நாட்டுப்புறப் பாடல்** |
| ❖ பூவை இறுக்கி முடிச்சிட்டால் காம்பு முறியும்.<br>❖ தளரப் பிணைத்தால் மலர்கள் தரையில் நழுவும்.<br>❖ எப்படி கட்டினாலும் மரணம் என்பது உறுதி என்று அறிந்திருந்தும் வருந்தாமல் பூக்கள் சிரிக்கும்.<br>❖ இத்தகைய பூக்களை பெண்களோடு ஒப்பிடுகிறார்.<br>❖ இத்தகைய மென்மை உள்ளம் கொண்ட பூவை எப்படி தொடுப்பது என்று நவீன கவிதை கூறுகிறது. | ❖ பூக்களைக் கையால் எடுத்தால் கையின் வெப்பத்தால் காம்பு அழுகிப் போகும்.<br>❖ விரலால் தொடுத்தால் பூக்கள் வெம்பி விடும்.<br>❖ எனவே, தங்கத்துரட்டியால் வலிக்காமல் பூக்களை பறித்து மலர்களாகவே படைத்திடுவோம்.<br>❖ இத்தகைய மென்மை உள்ளம் கொண்ட பூக்களை எப்படி மாரியம்மனுக்கு மாலையாக தொடுப்பது என்று நாட்டுப்புறப் பாடல் கூறுகிறது. |
| ஒப்பீடு : இவ்விரு பாடல்களும் பூக்களின் மென்மை தன்மையை கருபொருளாகக் கொண்டு பாடுகின்றன. | |

**3. 'கடற்கரையில் உப்புக் காய்ச்சுதல் நடைபெறுகிறது; மலைப் பகுதிகளில் மலைப் பயிர்களும் நிலப் பகுதிகளில் உழவுத் தொழிலும் நடைபெறுகின்றன.' - காலப்போக்கில் பல மாற்றங்கள் நிகழ்ந்தபோதிலும், பண்டைத் தமிழரின் திணைநிலைத் தொழில்கள் இன்றளவும் தொடர்வதையும் அவற்றின் இன்றைய வளர்ச்சியையும் எழுதுக.**

**கடற்கரையில் உப்புக்காய்ச்சுதல் :** *இ *[PTA – 3]*

✱ மீன் பிடித்தல், உப்பு விளைத்தல் போன்றவை **நெய்தல்** நிலப்பகுதியில் நடைப்பெற்றது.
✱ இன்றும் மீனவர்கள் கடலில் மீன்கள் பிடித்து, பதப்படுத்தி வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்கின்றனர்.
✱ பரந்த பரப்பளவில் உப்பளங்களில் உப்பு காய்ச்சி சுத்திகரித்து ஏற்றுமதி செய்கின்றனர்.

**மலைப் பகுதிகளில் மலைப் பயிர்கள் :**

✱ தேனெடுத்தல், தினை விதைத்தல், கிழங்கு அகழ்தல் ஆகியவை **குறிஞ்சி** நில தொழில்கள்.
✱ இன்றைய சூழ்நிலையில், தேன் ஏற்றுமதி தொழிலில் முக்கிய இடம் வகிப்பதால், தேனீ வளர்ப்பு மக்களால் விரும்பி பின்பற்றும் முக்கிய சுயதொழிலாக உள்ளது.
✱ தினை, வரகு போன்ற சிறுதானியங்களை விரும்பி உண்பதால் அவற்றை அதிகம் பயிரிடுகின்றனர்.

**நிலப் பகுதிகளில் உழவுத் தொழில் :**

✱ நெல் பயிரிடல், களை பறித்தல், அறுவடை செய்தல் போன்ற செயல்கள் **மருத** நிலத்தில் செய்தனர்.
✱ இன்று அதிக விளைச்சல் தரக்கூடிய புதுமையான கலப்பின நெல் ரகங்கள் பயிரிடப்படுகின்றன.
✱ இதனை செய்வதற்கு மனித ஆற்றலை விட இயந்திர ஆற்றல் பெரிதும் பயன்படுத்தப்படுகிறது.

**4. படங்கள் வெளிப்படுத்தும் நிகழ்த்துகலை குறித்து இரண்டு வினாக்களையும் அவற்றுக்கான விடைகளையும் எழுதுக.**

**அ) கால்களில் சலங்கை அணிந்து ஆடும் ஏதேனும் ஒரு நிகழ்த்துக்கலை குறித்து எழுதுக.** *உ *[PTA – 2, SEP–20]*

➔ **தேவராட்டம்**

✱ இந்தக் கலை, வேட்டி கட்டியும் தலையிலும் இடையிலும் சிறுதுணி கட்டியும் கால்களில் சலங்கை அணிந்தும் எளிய ஒப்பனையுடன் நிகழ்த்தப்படுகின்றது.
✱ தேவராட்டம் 'வானத்துத் தேவர்கள் ஆடிய ஆட்டம்' எனப் பொருள் கொள்ளப்படுகிறது.


**அ) காலில் சலங்கை**

✱ ஆண்கள் மட்டுமே ஆடும் ஆட்டம். 8 முதல் 13 கலைஞர்கள் கலந்து கொள்ள வேண்டும்.
✱ உறுமி(தேவதுந்துபி) தேவராட்டத்திற்குரிய இசைக்கருவியாகும்.

**ஆ) கரகாட்டம் என்றால் என்ன? விளக்குக.**

✱ கரகாட்டம் என்பது, 'கரகம்' என்னும் பித்தளைச் செம்பையோ சிறிய குடத்தையோ தலையில் வைத்துத் தாளத்திற்கு ஏற்ப ஆடுவது ஆகும்.
✱ கரகச்செம்பின் அடிப்பாகத்தை உட்புறமாகத் தட்டி, ஆடுபவரின் தலையில் நன்கு படிய செய்கின்றனர்.
✱ தலையில் செம்பு நிற்க மணலையோ பச்சரிசியையோ நிரப்புகின்றனர்.


**ஆ) தலையில் வைக்கப்படும் கரகம்**

✱ கண்ணாடியாலும், பூக்களாலும் அழகூட்டிய கரகக்கூட்டின் நடுவில், கிளி பொம்மையைப் பொருத்திய மூங்கில் குச்சியைச் செருகி வைத்து ஆடுகின்றனர்.
✱ நையாண்டி மேள இசை, நாகசுரம், தவில், பம்பை போன்ற இசைக்கருவிகள் இசைக்கப்படுகின்றது.

## கூடுதல் வினாக்கள்

**5. 'பொய்க்கால் குதிரையாட்டம்' என்னும் நிகழ்கலை குறித்து நீங்கள் அறிந்தவற்றை எழுதுக.** *உ [PTA - 4]

* **போலச் செய்தல்** என்ற பண்பினை அடிப்படையாகக் கொண்ட கலை பொய்க்கால் குதிரையாட்டம் ஆகும்.
* இது மரத்தாலான பொய்க்காலில் நின்று, குதிரை வடிவுள்ள கூட்டை உடம்பில் சுமந்து ஆடும் ஆட்டம்.
* கால்களை மறைக்கும் உயரத்திற்குத் துணியைக் கட்டிக்கொண்டு குதிரை மேல் ஏறிப்பயணம் செய்வதுபோன்ற கடிவாளத்தை ஆட்டி, காலை உயர்த்தி, நான்குபுறமும் ஓடியும் ஆடுகின்றனர்.
* நையாண்டி மேளமும் நாதசுரமும் இசைக்கப்படுகின்றன. இது மராட்டியர் காலத்தில் தஞ்சைக்கு வந்தது.
* வேறு பெயர்கள்: புரவி ஆட்டம், புரவி நாட்டியம், கச்சிகொடி(இராஜஸ்தான்), குதிரைக்களி (கேரளம்).

**6. கம்பராமாயணம் - நூற்குறிப்பு வரைக.** *செ-3 [MAY – 2022]

* கம்பர், இராமனது வரலாற்றைத் தமிழில் வழங்கி இராமாவதாரம் எனப் பெயரிட்டார்.
* இதுவே கம்பராமாயணம் என அழைக்கப்படுகிறது.
* இப்பாடல்கள் சந்தநயம் மிக்கது. இது 113 படலங்களையும், 10,500 பாடல்களையும் கொண்டது.
* இது ஆறு காண்டங்களை கொண்டது. அவை பால காண்டம், அயோத்தியா காண்டம், ஆரண்ய காண்டம், கிட்கிந்தா காண்டம், சுந்தர காண்டம், யுத்த காண்டம்.

## நெடுவினா

**1. நெகிழிப் பைகளின் தீமையைக் கூறும் பொம்மலாட்டம் உங்கள் பள்ளியின் ஆண்டு விழாவில் நிகழ்த்தப்படுகிறது. அதற்குப் பாராட்டுரை ஒன்றினை எழுதுக.** *உ

**பாராட்டுரை**

அனைவருக்கும் வணக்கம். ஆண்டு விழாவில் சற்று முன் நிகழ்ந்த நெகிழிப்பைகளின் தீமையைக் கூறும் பொம்மலாட்டம் நம்மை வியப்பின் உச்சிக்கே அழைத்துச் சென்றது என்றால் அது மிகையன்று… ஆம்… இன்று உலகின் அழிவிற்குக் காரணமான நெகிழிப்பையின் தீமைகளை அனைவருக்கும் தத்ரூபமாக விளக்கிய பொம்மலாட்டம் மிகவும் அருமையாக இருந்தது.

பூமியை ஒரு பொம்மையாக அமைத்து, அது நெகிழிப்பைகளால் சிதைக்கப்படுவதைக் காட்டிய விதம் சிறப்பாக அமைந்தது. பூமியின் ஆதங்கத்தை, துன்பப்படும் நிலையைத் தன் குரலில் கொண்டு வந்து பார்வையாளர்களை ஆழமாகச் சிந்திக்க வைத்த நம் பள்ளி மாணவனின் திறமை அளப்பரியது. அவனுக்கு எம் பள்ளியின் சார்பாக மனம் நிறைந்த பாராட்டுகள்.

மாடு ஒன்று நெகிழிப்பையில் உள்ள உணவை நெகிழிப்பையோடு சேர்த்து தின்றுவிட்டு அவதியுறுவதை மிக அருமையாகப் பதிவு செய்திருந்தனர். அம்மாட்டின் வேதனைக்குரலில் கலங்கிப் போயினர் பார்வையாளர்கள். மிகச்சிறப்பாக அமைந்திருந்தது அப்பகுதி.

நெகிழிப் பையினால் மனிதர்கள் எதிர்கொள்ளும் நோய்களான மூச்சுக்குழல் பாதிப்பு, சுவாசக் கோளாறு, மலட்டுத்தன்மை ஏற்படுதல், நரம்புத்தளர்ச்சி, சிறுநீரகக் கோளாறு, குடல்புண், செரிமானக் கோளாறுகள் போன்றவற்றைப் பல்வேறு பொம்மைகளைக் கொண்டு உணர்த்தியதற்குப் பாராட்டுகள்.

'மாநில அரசு நெகிழிப்பைகளைப் பயன்படுத்தக் கூடாது' என்று தடையுத்தரவு விதித்திருக்கிறது. அதனை மீறிப் பல இடங்களில் நெகிழிப்பைகளை மக்கள் பயன்படுத்தி வருகிறார்கள். இதனை பொம்மலாட்டத்தின் மூலம் வெளிக்கொணரும் போது நம்மையறியாமல் கோபம் ஏற்படுவது இந்நிகழ்ச்சிக்குக் கிடைத்த மிகப் பெரிய வெற்றியாகவே கருத வேண்டும்.

நிகழ்ச்சியின் இறுதியில் பொம்மைகள்

ஒழிப்போம்……. ஒழிப்போம்…….. நெகிழிப்பைகளை ஒழிப்போம்…...
காத்திடுவோம்…. காத்திடுவோம்…. பூமித்தாயைக் காத்திடுவோம்…..
நெகிழிப்பைகளை மறப்போம்…….. துணிப்பைகளை எடுப்போம்……
நெகிழிப்பைகளை வீசி…………… உயிர்களை நேசி………………

- போன்ற விழிப்புணர்வு முழக்கங்களை முழக்கமிடும் காட்சிகளில் பார்வையாளர்களையும் சேர்த்து முழக்கமிட வைத்தது அனைவரையும் சிந்திக்கச் செய்தது. பலத்த கைத்தட்டல்களோடு பொம்மலாட்டம் நிறைவு பெற்றது மாணவப் படைப்பாளிகளுக்குக் கிடைத்த விருதாகும்.

பள்ளி ஆண்டு விழா என்றால் ஆடலும் பாடலும் என்றில்லாமல் இதுபோன்ற கலைகள் மூலம் பல நல்ல கருத்துகளை விதைத்துள்ளனர். அம்மாணவர்களுக்கு அனைவரின் சார்பாக எங்களது பாராட்டுகள். அவர்கள் தொடர்ந்து எதிர்காலத்திலும் சமூக அக்கறையோடு விளங்க வேண்டும்! என்று உங்கள் சார்பாக கேட்டுக்கொண்டு விடைபெறுகிறேன்… நன்றி.

2. நிகழ்கலை வடிவங்கள் - அவை நிகழும் இடங்கள் - அவற்றின் ஒப்பனைகள் - சிறப்பும் பழைமையும் - இத்தகைய மக்கள் கலைகள் அருகிவருவதற்கான காரணங்கள் - அவற்றை வளர்த்தெடுக்க நாம் செய்யவேண்டுவன - இவை குறித்து நாளிதழுக்கான தலையங்கம் எழுதுக. *உ [PTA – 3]

**நிகழ்கலை நாம் பாதுகாக்க வேண்டிய பொக்கிஷம்**

**முன்னுரை**

கண்ணுக்குக் காட்சியையும் சிந்தைக்குக் கருத்தினையும் தருவன நிகழ்கலைகள். தமிழக மக்களின் பண்பாட்டின் பதிவுகளாக விளங்குபவை இக்கலைகள். இக்கலைகளைக் குறித்து இந்தக் கட்டுரை விரிவாக எடுத்துரைக்கிறது.

**நிகழ்கலை வடிவங்களும், நிகழும் இடங்களும்**

❋ கரகாட்டம், மயிலாட்டம், காவடியாட்டம், ஒயிலாட்டம், தேவராட்டம், சேர்வையாட்டம், பொய்க்கால் குதிரையாட்டம், தப்பு ஆட்டம், புலி ஆட்டம், தெருக்கூத்து, தோற்பாவைக் கூத்து ஆகியன நிகழ்த்துக் கலைகளின் வடிவங்கள் ஆகும்.
❋ நிகழ்கலைகள் மேடைகளிலும் திறந்தவெளிகளிலும் களத்துமேடுகளிலும் நிகழ்த்தப்படுகின்றன.
❋ கரகாட்டம், மயிலாட்டம், காவடியாட்டம், ஒயிலாட்டம் போன்றவை திருவிழாக்களில் நிகழ்த்தப்படுகின்றன.
❋ பொம்மலாட்டம் (தோற்பாவைக் கூத்து) போன்ற கலைகளுக்கு மேடை அவசியமாகின்றது.

**ஒப்பனைகள் :**

❋ கரகாட்டம் - ஆண், பெண் தலையில் கிளி பொம்மை பொருந்திய கரகம் வைத்து வேடமிட்டு ஆடுதல்.
❋ மயிலாட்டம் -மயில் வடிவக் கூண்டுக்குள் உடலை மறைத்து நையாண்டி மேளத்திற்கேற்ப ஆடுதல்.
❋ ஒயிலாட்டம் - காலில் சலங்கை அணிந்து, கையில் சிறுதுணியை இசைக்கேற்ப வீசி குழுவாக ஆடுதல்.
❋ தேவராட்டம் - தலையிலும் இடுப்பிலும் துணி, கால்களில் சலங்கை போன்று ஒப்பனை செய்தல்.
❋ தப்பாட்டம் - 'தப்பு' என்ற தோற்றக்கருவியை இசைத்துக்கொண்டே அதன் இசைக்கேற்ப ஆடுதல்.
❋ பொய்க்கால் குதிரையாட்டம் - குதிரை கூட்டைச் சுமந்து அரசன், அரசி போன்று ஒப்பனை செய்தல்.

**நிகழ்கலையின் சிறப்பும் பழைமையும் :**

❋ மக்களின் எண்ண வெளிப்பாடாக, வாழ்க்கையைக்காட்டும் கண்ணாடியாக, மக்களின் சமய வழிபாட்டிலும் வாழ்வியல் நிகழ்வுகளிலும் பிரிக்கமுடியாத பண்பாட்டுக் கூறுகளாக நிகழ்கலைகள் விளங்குகின்றன.
❋ **'நீரற வறியாக் கரகத்து'** என்ற புறநானூற்று வரி மூலம் கரகாட்டத்தின் பழமையை அறியலாம்.
❋ சிலப்பதிகாரத்தில் மாதவி ஆடிய ஆட்டம் **குடக்கூத்து** (கரகாட்டம்) எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.
❋ தோற்பாவைக் கூத்து குறித்த செய்திகள் **திருக்குறள், திருவாசகம், பட்டினத்தார்** பாடல்களில் காணப்படுகின்றன. இவ்வாறு சிறப்பும் பழைமையும் நிறைந்ததாக நிகழ்கலைகள் உள்ளன.

**மக்கள் கலைகள் அருகி வருவதற்கான காரணங்கள் :**

❋ பரம்பரை பரம்பரையாக இத்தொழில்களைச் செய்வோரின் சந்ததிகள் படித்து வேறு பணிகளுக்குச் சென்றுவிடுவதால் இக்கலைகளை முன்னெடுத்துச் செல்ல யாரும் இல்லாத நிலை ஏற்பட்டுள்ளது.
❋ நாகரிகத்தின் காரணமாகவும், கலைஞர்களுக்குப் போதிய வருமானம் இல்லாத காரணத்தாலும், திரைத்துறை வளர்ச்சியினாலும் இக்கலைகள் குறைந்து வருகின்றன.

**நிகழ்கலைகளை வளர்த்தெடுக்க நாம் செய்யவேண்டுவன :**

❋ கலைஞாயிறு ந.முத்துசாமி ஏற்படுத்திய கூத்துப்பட்டறை போன்ற பயிற்சிப் பள்ளிகளை மாவட்டந்தோறும் அமைத்து, இக்கலைகளை அரசோ, தனியாரோ வளர்த்தெடுக்க வேண்டும்.
❋ ஊடகங்கள் இக்கலைகளுக்கு முன்னுரிமை அளித்து நிகழ்ச்சிகளை ஒளிபரப்ப வேண்டும்.
❋ பள்ளிகளிலும், குடும்ப விழாக்களிலும் நம் பாரம்பரிய நடன நிகழ்ச்சிகளை ஊக்குவிக்க வேண்டும்.
❋ கலைஞர்களைப் பாராட்டி அவர்களை சிறப்பிக்கும் விதமாக விருதுகள் வழங்க வேண்டும்.
❋ தற்போது பள்ளிகளில் கலைத் திருவிழா என்ற பெயரில் பல்வேறு போட்டிகள் நடத்தப்பட்டு இக்கலைகள் அழியாத வகையில் தமிழக அரசு சிறப்பான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

**முடிவுரை**

நிகழ்கலை என்பது நமது அடையாளம். அதை நாம் மீட்டெடுத்து புதுப்பொலிவுடன் மீண்டும் அதை மக்களிடம் பரவச் செய்து, நமது தமிழகத்தின் தனித்துவத்தை நிலைநிறுத்துவோம்.

**3. சந்தக் கவிதையில் சிறக்கும் கம்பன் என்ற தலைப்பில் இலக்கிய உரை எழுதுக.** *செ-3 *[SEP – 2020]*

**சந்தக் கவிதையில் சிறக்கும் கம்பன்**

அன்பும் பண்பும் கொண்ட தலைவர் அவர்களே! தேர்ந்தெடுத்த பூக்களைப் போன்று வரிசை தொடுத்து அமர்ந்திருக்கும் ஆன்றோர்களே! அறிஞர் பெருமக்களே! வணக்கம். இயற்கை கொலு வீற்றிருக்கும் காட்சியைப் பெரிய கலைநிகழ்வே நடப்பதான தோற்றமாகக் கம்பன் காட்டும் கவி... தண்டலை மயில்கள் ஆட... **இவ்வுரையைத் தொடர்க!**

**அ) மருத நில அழகிய தோற்றம் :** மருத நிலத்தின் இயற்கை அழகை மிக அழகாகச் சந்த நயத்தோடு வருணிக்கிறார் கம்பர். சோலைகளிலே மயில்கள் ஆடவும், தாமரை மலர்கள் விளக்குகளை ஏந்தி நிற்கவும், மேகங்கள் மத்தளம் போல் ஒலிக்கவும், குவளைக் கொடிகளில் மலர்கள் கண்போல் விழித்துப் பார்க்கவும், நீர் நிலைகளின் அலைகள் திரைச்சீலையைப் போல் காட்டவும், யாழின் இசையைப் போல வண்டுகள் இனிமையாகப் பாடவும் மருதம் வீற்றிருக்கிறது என்கிறார் கம்பர்.

**ஆ) கோசல நாட்டின் பெருமைகள் :** கோசல நாட்டில் வறுமை இல்லை. எனவே கொடைக்கு இடமில்லை. நேருக்கு நேர் நின்று போர்புரிபவர் இல்லை. எனவே உடல்வலிமையை எடுத்துக்காட்ட வாய்ப்பில்லை. பொய் பேசுதல் இல்லை. எனவே உண்மையின் சிறப்புத் தெரிவதில்லை. கேள்விச்செல்வம் மிகுந்து இருப்பதால் அறியாமை சிறிதும் இல்லை. ஒன்றின் இருப்பால் இன்னொன்றை அடையாளப்படுத்தி கோசல நாட்டின் பெருமையைப் புலப்படுத்தும் கம்பனின் உத்தி போற்றத்தக்கது.

**இ) இராமனின் மாநிற மேனியை வருணித்தல் :** பகலவனின் ஒளி இராமனின் நீலமேனியில் பட்டுக் கதிரொளியே இல்லையென்றாகிவிட்டது. அவன் நிறம் மையோ? பச்சைநிற மரகதமோ? மறிக்கின்ற நீலக்கடலோ? மழை தரும் கரு மேகமோ? என கூற முடியவில்லை என்று தன் இயலாமையை கம்பர் கவித்திறன் பொங்க எடுத்துரைக்கிறார்.

**ஈ) குகன் தன் வேதனையை வெளிப்படுத்துதல் :** ஆழமும், அலைகளையும் கொண்ட கங்கை ஆற்றைக் கடந்து இவர்கள் செல்வார்களா? யானைகளைக் கொண்ட சேனையைக்கண்டு, புறமுதுகுக் காட்டி ஓடுகின்ற வில் வீரனல்லன். ‘என் நண்பன் நீ’ என்ற இராமனின் சொல்லைக் காப்பாற்றுவது எனது கடமையல்லவா? தோழமையை எண்ணாமல் இவர்களைக் கடந்து போகவிட்டால் இந்த வேடன் இறந்திருக்கலாமே என உலகத்தார் பழித்துரைக்கமாட்டார்களா? என குகன் உரைப்பதாய் அழகுற கூறுகிறார்.

**உ) கும்பகருணனை உறக்கத்திலிருந்து எழுப்புதல் :** உறங்குகின்ற கும்பகருணனே! உம்முடைய பொய்யான வாழ்வெல்லாம் இன்றிலிருந்து இறங்கத் தொடங்கிவிட்டது. அதனைக் காண எழுந்திருக்க வேண்டும். காற்றாடிபோல எல்லா இடங்களிலும் திரிகின்ற வில்லைப் பிடித்த காலனுக்குத் தூதரானவர் கையில் இனிப் படுத்து உறங்குவாயாக! என்பதாகக் கூறப்பட்டுள்ளது. உலக்கையால் மாறிமாறி இடிக்கும் ஒத்த ஓசை நயத்தில், கும்பகருணனை எழுப்பும் காட்சி வெளிப்படுகிறது.

இவற்றின் மூலம் கம்பர் சந்தக்கவிதை உலகில் சிறகடித்துப் பறந்தவர் என்பதை மறுக்க முடியாது.

# 7. விதைநெல்



## பலவுள் தெரிக

1. சரியான அகரவரிசையைத் தேர்ந்தெடுக்க. *செ-1 *[APR – 2023, PTA - 4]*
   அ) உழவு, மண், ஏர், மாடு  ஆ) மண், மாடு, ஏர், உழவு
   **இ) உழவு, ஏர், மண், மாடு**  ஈ) ஏர், உழவு, மாடு, மண்

2. ‘மாலவன் குன்றம் போனாலென்ன? வேலவன் குன்றமாவது எங்களுக்கு வேண்டும்’ - மாலவன் குன்றமும் வேலவன் குன்றமும் குறிப்பவை முறையே - *உ *[PTA - 1]*
   **அ) திருப்பதியும் திருத்தணியும்**  ஆ) திருத்தணியும் திருப்பதியும்
   இ) திருப்பதியும் திருச்செந்தூரும்  ஈ) திருப்பரங்குன்றமும் பழனியும்

3. ‘தன் நாட்டு மக்களுக்குத் தந்தையும் தாயும் மகனுமாக இருந்த அரசன்’ என்னும் மெய்க்கீர்த்தித் தொடர் உணர்த்தும் பொருள்- *செ-2
   அ) மேம்பட்ட நிருவாகத்திறன் பெற்றவர்  ஆ) மிகுந்த செல்வம் உடையவர்
   இ) பண்பட்ட மனிதநேயம் கொண்டவர்  **ஈ) நெறியோடு நின்று காவல் காப்பவர்**

4. இருநாட்டு அரசர்களும் தும்பைப் பூவைச் சூடிப் போரிடுவதன் காரணம் ___ *இ *[AUG - 22, SEP - 20, PTA - 2]*
   அ) நாட்டைக் கைப்பற்றல்  ஆ) ஆநிரை கவர்தல்
   **இ) வலிமையை நிலைநாட்டல்**  ஈ) கோட்டையை முற்றுகையிடல்

5. தமிழினத்தை ஒன்றுபடுத்தும் இலக்கியமாக ம.பொ.சி. கருதியது *உ *[MAY - 22, SEP - 21, PTA - 3]*
   அ) திருக்குறள்  ஆ) புறநானூறு  இ) கம்பராமாயணம்  **ஈ) சிலப்பதிகாரம்**

## கூடுதல் வினாக்கள்

6. மெய்க்கீர்த்தி என்பது *செ-2 *[MAY - 2022]*
   அ) கல்வெட்டில் பொறிக்கப்பட்ட சிற்பங்கள்
   ஆ) அழியாப்புகழ் பெற்ற நூல்கள்
   **இ) புலவர்களால் எழுதப்பட்டு கல் தச்சர்களால் கல்லில் பொறிக்கப்பட்டவை**
   ஈ) மெய்யான புகழ், கொடை, வீரம் முதலியன குறித்த நூல்கள்

7. ‘தூசும் துகிரும் ஆரமும் அகிலும்’ - இப்பாடலடி இடம் பெற்றுள்ள நூல்: *செ-3 *[MAY - 2022]*
   அ) மணிமேகலை  ஆ) தேம்பாவணி  இ) கம்பராமாயணம்  **ஈ) சிலப்பதிகாரம்**

8. சிலப்பதிகாரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மருவூர்பாக்கம் அமைந்துள்ள நகரம் : *செ-3 *[SEP – 2021]*
   அ) மதுரை  **ஆ) புகார்**  இ) வஞ்சி  ஈ) முசிறி

9. குமரி மாவட்டப் போராட்டத்தை முன்னெடுத்துச் சென்றவர் *உ *[PTA - 6]*
   அ) திரு.பிராகாசம்  **ஆ) மார்ஷல் ஏ.நேசமணி**  இ) தனிநாயகம் அடிகள்  ஈ) ந.முத்துசாமி

## குறுவினா

**1. பாசவர், வாசவர், பல்நிண விலைஞர், உமணர் - சிலப்பதிகாரம் காட்டும் இவ்வணிகர்கள் யாவர்?** *செ-3 *[AUG–2022, PTA–5]*

❋ பாசவர் - வெற்றிலை விற்பவர் ❋ வாசவர் - நறுமணப் பொருள்கள் விற்பவர்
❋ உமணர் - உப்பு விற்பவர் ❋ பல்நிண விலைஞர் - இறைச்சிகள் விற்பவர்

**2. மெய்க்கீர்த்தி பாடப்படுவதன் நோக்கம் யாது?** *செ-2 *[APR – 2023, PTA - 3]*

அரசர்கள் தங்களின் புகழையும் வரலாற்றையும், காலம் கடந்தும் நிலைத்து நிற்க கல்லில் செதுக்கிப் பாடுவதே மெய்க்கீர்த்தியின் நோக்கமாகும்.

**3. வறுமையிலும் படிப்பின்மீது நாட்டம் கொண்டவர் ம.பொ.சி. என்பதற்குச் சான்று தருக.**

- ✱ ம.பொ.சிவஞானம் படிப்பின்மீது அதிக ஆர்வம் கொண்டவர். *உ *[MAY – 2022, SEP – 2021, PTA – 4]*
- ✱ பழைய புத்தகம் விற்கும் கடைகளுக்குச் சென்று, புத்தகங்களைக் குறைந்த விலைக்கு வாங்குவார்.
- ✱ ஒருமுறை உணவிற்கு வைத்திருந்த பணத்தில் புத்தகங்களை வாங்கிக்கொண்டு பசியோடு இருந்தார்.

**4. புறத்திணைகளில் எதிரெதிர்த் திணைகளை அட்டவணைப்படுத்துக.** *இ *[PTA – 1, SEP - 2021]*

- ✱ வெட்சித்திணை x கரந்தைத் திணை (ஆநிரை சார்ந்தது)
- ✱ வஞ்சித்திணை x காஞ்சித்திணை (போர் சார்ந்தது)
- ✱ நொச்சித்திணை x உழிஞைத்திணை (கோட்டை சார்ந்தது)

**5. பொருத்தமான இடங்களில் நிறுத்தக் குறியிடுக.** *உ *[SEP - 2021]*

பழங்காலத்திலே பாண்டியன் ஆண்ட பெருமையைக்கூறி சோழன் ஆண்ட சிறப்பைச் சொல்லி சேரன் ஆண்ட மாண்பினைக் காட்டி நம் அருமைத் தமிழ்நாடு ஆங்கிலேயருக்கு அடிமைப்பட்டிருந்த சிறுமையையும் நினைவூட்டி விடுதலைப் போரில் ஈடுபட வருமாறு தமிழர்க்கு அழைப்பு விடுத்திருந்தேன். - ம.பொ.சி.

***விடை:*** பழங்காலத்திலே பாண்டியன் ஆண்ட பெருமையைக்கூறி**,** சோழன் ஆண்ட சிறப்பைச் சொல்லி**,** சேரன் ஆண்ட மாண்பினைக் காட்டி**,** நம் அருமைத் தமிழ்நாடு ஆங்கிலேயருக்கு அடிமைப்பட்டிருந்த சிறுமையையும் நினைவூட்டி விடுதலைப் போரில் ஈடுபட வருமாறு தமிழர்க்கு அழைப்பு விடுத்திருந்தேன்**.** - ம.பொ.சி.

## சிறுவினா

**1. 'முதல்மழை விழுந்ததும்' என்னவெல்லாம் நிகழ்வதாக கு.ப.ரா. கவிபாடுகிறார்?** *செ-1 *[PTA – 5]*

- ✱ முதல் மழை விழுந்ததும், உழுவதற்கேற்ப மேல்மண் பதமாகிவிட்டது.
- ✱ வானில் வெள்ளி முளைக்கும் முன்பே, உழவர்கள் காளைகளை ஓட்டி விரைந்து சென்றனர்.
- ✱ ஏர் தொழுது, இறைவனை வணங்கி மாடுகளை ஏரில் பூட்டி நிலத்தை உழுதனர்.
- ✱ மழை பொழிந்ததால், நிலம் சிலிர்த்து, நாற்று நிமிர்ந்து நிற்கும்.
- ✱ கவலையில்லாமல், கிழக்கில் தோன்றும் சூரியன் கதிர்கள் பரப்பும் வேளையில் நிலத்தினை உழுவதற்காக கலப்பையில் இருப்பைப் பொருத்தி நிலை நிறுத்துவோம்.

**2. அவந்தி நாட்டு மன்னன், மருதநாட்டு மன்னனுடன் போர் புரிந்து அந்நாட்டைக் கைப்பற்ற நினைக்கிறான்; அப்போர் நிகழ்வைப் புறப்பொருள் வெண்பாமாலை கூறும் இலக்கணத்தின் வழி விளக்குக.** *இ *[PTA- 5]*

**<u>அவந்தி நாட்டு மன்னன் மருத நாட்டுடன் போர் புரியும் நிகழ்வுகள் :</u>**

1. **வெட்சித்திணை:** போர் தொடங்கும் முன் அவந்தி நாட்டு மன்னன், தன்னுடைய வீரர்களை மருத நாட்டுக்கு அனுப்பி பசுக்களைக் கவர்ந்து வரச் செய்வான். அவ்வீரர்கள் வெட்சிப் பூவை அணிந்து செல்வர்.
2. **கரந்தைத்திணை:** அவந்தி நாட்டு வீரர்களால் கவர்ந்து செல்லப்பட்ட பசுக்கூட்டங்களை மீட்டு வர மருத நாட்டு வீரர்கள் கரந்தைப் பூவைச் சூடிச் செல்வர்.
3. **வஞ்சித்திணை:** மண்ணாசை காரணமாக அவந்தி நாட்டு மன்னன், மருத நாட்டைக் கைப்பற்ற போருக்குச் செல்வான். அப்போது அவந்தி நாட்டு வீரர்கள் வஞ்சிப்பூவைச் சூடிச் செல்வர்.
4. **காஞ்சித்திணை:** தன் நாட்டைக் கைப்பற்ற வந்த அவந்தி நாட்டு மன்னனோடு மருத நாட்டு வீரர்கள் காஞ்சிப்பூவைச் சூடிப் போரிடுவர்.
5. **நொச்சித்திணை:** அவந்தி நாட்டு மன்னனால் முற்றுகையிடப்பட்ட தம் மதிலைக் காத்தல் வேண்டி மருத நாட்டு வீரர்கள் நொச்சிப்பூவை அணிந்து போரிடுவர்.
6. **உழிஞைத்திணை:** மருத நாட்டின் கோட்டைக்குள் புகுந்து மதிலைச் சுற்றி வளைப்பர் அவந்தி நாட்டு வீரர்கள். அப்போது அவர்கள் உழிஞைப்பூவை அணிந்திருப்பர்.
7. **தும்பைத்திணை:** அவந்தி நாட்டு வீரர்களும் மருத நாட்டு வீரர்களும் வெற்றி ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு தும்பைப்பூவை அணிந்து போரிடுவர்.
8. **வாகைத்திணை:** போரில் வெற்றி பெறும் மன்னன் வாகைப்பூச் சூடி மகிழ்வான்.

**3. "தலையைக் கொடுத்தேனும் தலைநகரைக் காப்போம்" இடம் சுட்டிப் பொருள் விளக்குக.**

**இடம் :** சென்னையை ஆந்திராவிலிருந்து பிரித்தெடுத்தல் தொடர்பான மாநகராட்சி சிறப்புக் கூட்டமொன்றில், சென்னை பற்றிய தீர்மானமொன்றை முன்மொழிந்து, **ம.பொ.சி.** அவர்கள் கூறிய முழக்கம் இது.

**பொருள் :** உயிரைக் கொடுத்தேனும் தலைநகரான சென்னையைக் காக்க வேண்டும். *உ *[AUG-22, SEP-21, PTA-6]*

**விளக்கம் :** ஆந்திர மாநிலம் பிரியும் போது சென்னைதான் அதன் தலைநகராக இருக்க வேண்டும் என்று ஆந்திரத் தலைவர்கள் கருதினர். அப்போது மாநகரத் தந்தை செங்கல்வராயன் தலைமையில் கூடிய மாநகராட்சி சிறப்புக் கூட்டமொன்றில், சென்னை பற்றிய தீர்மானமொன்றை முன்மொழிந்து ம.பொ.சி. அவர்கள் 'தலைநகரான சென்னையை உயிரைக் கொடுத்தேனும் காத்திடுவோம்' என்று முழங்கினார்.

**4.** *"பகர்வனர் திரிதிரு நகரவீதியும்;*
*பட்டினும் மயிரினும் பருத்தி நூலினும்*
*கட்டு நுண்வினைக் காருகர் இருக்கையும்;*
*தூசும் துகிரும் ஆரமும் அகிலும்"*

*செ-3 **[APR - 2023]**

| | |
|---|---|
| **அ) இவ்வடிகள் இடம்பெற்ற நூல் எது?** | சிலப்பதிகாரம் |
| **ஆ) பாடலில் அமைந்த மோனையை எடுத்து எழுதுக.** | **ப**கர்வனர் - **ப**ட்டினும் |
| **இ) எதுகைச் சொற்களை அடிக்கோடிடுக.** | ப**ட்**டினும் - க**ட்**டு |
| **ஈ) காருகர் - பொருள் தருக.** | நெய்பவர் (நெசவாளர்) |
| **உ) இப்பாடலில் குறிப்பிடப்படும் நறுமணப் பொருள்கள் யாவை?** | அகில், சந்தனம் |

**5. பின்வரும் பத்தியைப் படித்து மையக்கருத்தை எழுதுக.** *செ-2

பேரரசனது மெய்ப் புகழை எடுத்துக்கூறுவது மெய்க்கீர்த்தி. பொதுவாக இது சோழ மன்னருடைய சாசனங்களின் தொடக்கத்தில் அரசனுடைய இத்தனையாவது ஆட்சியாண்டு என்று கூறுமிடத்து அமைக்கப்பெறும். சிறப்பாக அவனுடைய போர் வெற்றிகளையும் வரலாற்றையும் முறையாகக் கூறி, அவன் தன் தேவியோடு வீற்றிருந்து நீடு வாழ்க எனக் கூறி, பிறகே சாசனம் எழுந்த நிகழ்ச்சியைக் குறிப்பிடும்.

சோழ மன்னர் பரம்பரையில் மெய்க்கீர்த்தியோடு சாசனங்களைப் பொறிக்கும் வழக்கம் நெடுநாள் இருந்ததில்லை. முதல் இராசராசனுடைய எட்டாம் ஆண்டில்தான் மெய்க்கீர்த்தி காணப்படுகிறது. இதன்கண் வமிச பாரம்பரியம் விதந்து ஓதப்படவில்லை; ஏனைய பகுதிகள் உள்ளன. எனினும், இது மிகவும் சுருக்கமாகவே உள்ளது. இன்னும் பின்வந்த மெய்க்கீர்த்திகளின் வமிச பரம்பரையை மிகவும் விரித்துக் கூறியுள்ளன.

**(அல்லது) மெய்க்கீர்த்திக் குறித்துத் தாங்கள் அறிந்த இரண்டு கருத்துகளை எழுதுக.** *[PTA -2]*

### மெய்க்கீர்த்தி

- பேரரசின் மெய்ப்புகழையும், போர் வெற்றிகளையும், வரலாற்றையும் கூறும் சாசனம், மெய்க்கீர்த்தி ஆகும்.
- இது சாசனங்களின் தொடக்கத்தில் அரசனுடைய ஆட்சியாண்டு கூறுமிடத்து அமைக்கப்பெறும்.
- முதல் இராசராசனின் எட்டாம் நூற்றாண்டில்தான் மெய்க்கீர்த்தி காணப்படுகிறது.
- பிற்கால மெய்க்கீர்த்திகளில் வமிச பாரம்பரியம் பற்றி விரிவாக எழுதப்பட்டுள்ளது.

## கூடுதல் வினா

**6. பகைவேந்தர் இருவரும் வலிமையே பெரிது என்பதை நிலைநாட்டப் போரிடும் திணை குறித்து எழுதுக.**

- பகைவேந்தர் இருவரும் வலிமையை நிலைநாட்ட போரிடும் திணை தும்பைத்திணை ஆகும். *இ *[PTA-4]*
- பகைவேந்தர் இருவரும் தம் வீரர்களுடன் தும்பைப் பூச்சூடிப் போர்க்களத்தில் ஒருவரோடு ஒருவர் போரிடுவர்.

## நெடுவினா

1. **நாட்டு விழாக்கள் - விடுதலைப் போராட்ட வரலாறு – நாட்டின் முன்னேற்றத்தில் மாணவர் பங்கு – குறிப்புகளைக் கொண்டு ஒரு பக்க அளவில் 'மாணவப் பருவமும் நாட்டுப் பற்றும்' என்ற தலைப்பில் மேடை உரை எழுதுக.** *உ *[SEP – 2020, PTA – 1]*

| மாணவப்பருவமும் நாட்டுப்பற்றும்... |
|---|
| ✱ முன்னுரை |
| ✱ நாட்டு விழாக்கள் |
| ✱ விடுதலைப் போராட்ட வரலாறு |
| ✱ நாட்டின் முன்னேற்றத்தில் மாணவர் பங்கு |
| ✱ முடிவுரை |

**முன்னுரை**

"பாருக்குள்ளே நல்ல நாடு – எங்கள் பாரத நாடு" என்று நம் இந்தியத் திருநாட்டின் பெருமையைப் பறைசாற்றி என் உரையைத் தொடங்குகிறேன். மாணவர்களாகிய நாம் இந்தியத் திருநாட்டின் புதல்வர்கள். எனவே நம் நாட்டிற்கு நம்மால் முடிந்த கடமைகளை ஆற்ற வேண்டும்.

**நாட்டு விழாக்கள் :**

நம் நாட்டில் வாழும் மக்கள் அனைவரும் மதம், இனம், மொழி ஆகியவற்றை மறந்து கொண்டாடும் விழாக்களே நாட்டு விழாக்கள் ஆகும். இந்திய விடுதலை நாள், குடியரசு நாள், மகாத்மா காந்தியடிகளின் பிறந்தநாள், தியாகிகள் தினம், தேசிய இளைஞர் தினம் முதலான நாள்கள் நம் நாடு முழுவதும் சிறப்பாகக் கொண்டாடப்படும் விழா நாள்கள் ஆகும். நம் நாட்டின் விடுதலைக்காக உழைத்த நல்லோர்களையும், நம் நாட்டின் பெருமைகளையும், சிறப்புகளையும் மாணவர்கள் அறிந்து கொள்ள இவ்விழாக்கள் பெரிதும் உதவுகின்றன.

**விடுதலைப் போராட்ட வரலாறு :**

இந்தியத் திருநாடு நீண்ட நெடிய வரலாறு கொண்ட பழமையான நாடு. அயல்நாட்டவர்களின் அடிமைத்தளையிலிருந்து நாம் விடுதலை பெற நடைபெற்ற போராட்டங்கள் கணக்கிலடங்காதவை.

➔ இந்திய விடுதலைப் போராட்டம் **காந்தியடிகளின் சத்தியாகிரகப் போராட்டத்தில்** ஆரம்பித்தது.

➔ **தீண்டாமை விலக்கு, கதர் விர்ப்பனை** போன்ற பல போராட்டங்களை நிகழ்த்தினர்.

➔ **'இந்தியாவை விட்டு வெள்ளையனே வெளியேறு'** என்று கூறி போராடினர்.

➔ சென்னையை ஆந்திராவின் தலைநகராக்க நினைத்தவர்களிடமிருந்து **சென்னையை மீட்டனர்.** பழங்காலத்திலே பாண்டியன், சோழன், சேரன் ஆண்ட பெருமையைக் கூறி, ஆங்கிலேயருக்கு அடிமைப்பட்டிருந்த சிறுமையை நினைவூட்டி விடுதலைப்போரில் ஈடுபட்டனர். அத்தகைய விடுதலைப் போராட்ட வரலாற்றினையும் அப்போராட்டத்தில் உயிர் நீத்த தியாகிகளையும் மாணவர்களாகிய நாம் மறந்துவிடக்கூடாது. இன்று நாம் சுவாசிக்கும் விடுதலைக்காற்றை எளிதாகப் பெற்றிடவில்லை.

**நாட்டின் முன்னேற்றத்தில் மாணவர் பங்கு :**

நாம் நம்முடைய செயல்களில் ஒழுக்கத்தையும், கட்டுப்பாட்டையும் கடைப்பிடித்தால் நாடு முன்னேறும். மாணவர்கள் ஒரு சில துறைகளை மட்டும் தேர்வு செய்து படிக்காமல் பல்வேறு துறைகளிலும் கல்விப் பயின்று நாட்டின் வளர்ச்சியைப் பெருக்க வேண்டும். தூய்மை இந்தியா இயக்கத்தில் நம் சுற்றுப்புறத்தைத் தூய்மையாக வைத்துக் கொள்வோம். மாணவர்களின் ஆளுமைப் பண்புகளை வளர்க்கும் நாட்டு நலப்பணித்திட்டம், தேசிய மாணவர் படை, செஞ்சிலுவை சங்கம், நுகர்வோர் மன்றம் போன்ற அமைப்புகளில் சேர்ந்து நாட்டின் முன்னேற்றத்திற்கு உதவ வேண்டும்.

**முடிவுரை**

மாணவர்களாகிய நாம் மதம், இனம், சாதி, மொழி ஆகியவற்றால் வேறுபட்டு நிற்காமல் இந்தியன் என்ற உணர்வோடு செயலாற்றுவோம். உலக அரங்கில் நம் நாட்டை வளப்படுத்துவோம்... சிறப்புறச் செய்வோம்... என்று கூறி என் உரையை நிறைவு செய்கிறேன். நன்றி.

**2. பாடப்பகுதியில் இடம்பெற்றுள்ள மெய்க்கீர்த்திப் பாடலின் நயத்தை விளக்குக.** *செ-2

| குறிப்புச்சட்டகம் | |
|---|---|
| ✱ முன்னுரை<br>✱ மெய்க்கீர்த்தி - பொருள்<br>✱ மையக்கருத்து<br>✱ பொருள் நயம் | ✱ தொடைநயங்கள்<br>• மோனை நயம்<br>• எதுகை நயம்<br>✱ அணி நயம்<br>✱ முடிவுரை |

**முன்னுரை**

பாடப்பகுதியில் சோழ மன்னன் இரண்டாம் இராசராச சோழனின் பெருமைகளையும் வரலாற்றையும் கூறும் மெய்க்கீர்த்தி கொடுக்கப்பட்டுள்ளது. அப்பாடலின் நயத்தை விரிவாகக் காணலாம்.

**மெய்க்கீர்த்தி - பொருள் :**

மெய்க்கீர்த்தி = மெய் - உண்மை, கீர்த்தி - புகழ்: அரசாண்ட மன்னனின் உண்மையான புகழை எடுத்துரைக்கும் இலக்கியமே மெய்க்கீர்த்தி. இது கல்வெட்டில் எழுதப்பட்டிருக்கும்.

**மையக்கருத்து :**

இரண்டாம் இராசராச சோழனின் ஆட்சிச்சிறப்பினையும் அவன் ஆட்சி செய்த நாட்டின் வளத்தைப் பற்றியும் விளக்குகிறது.

**பொருள் நயம் :**

இப்பாடலின் பொருள்கள் மறைபொருளாக ஒப்பிடும் வகையில் கொடுக்கப்பட்டுள்ளது. இப்பாடலின் ஆசிரியர் சோழ நாட்டின் இயற்கை வளத்தில் இருப்பதை கூறி அவை மக்களிடம் இல்லாதிருப்பதை குறிப்பிட்டு அதன் வழியே நாம் பொருள் உணர்ந்து கொள்ளச் செய்யும் நயம் மிகச் சிறப்பாகப் பொருந்தி உள்ளது.

**உதாரணமாக,**

- ✱ யானைகள் மட்டுமே பிணிக்கப்படுகின்றன, மக்கள் ஒருபோதும் பிணிக்கப்படுவதில்லை.
- ✱ சிலம்புகள் மட்டுமே புலம்புகின்றன, மக்கள் புலம்புவதில்லை.
- ✱ ஓடைகள் மட்டுமே கலக்கமடைகின்றன, மக்கள் கலக்கமடைவதில்லை.
- ✱ புனல் மட்டுமே அடைக்கப்படுகின்றது, மக்கள் அடைக்கப்படுவதில்லை.
- ✱ மாங்காய்கள் மட்டுமே வடுப்படுகின்றன, மக்கள் வடுப்படுவதில்லை.
- ✱ மலர்கள் மட்டுமே பறிக்கப்படுகின்றன, மக்கள் உரிமைகள் பறிக்கப்படுவதில்லை.
- ✱ காடுகள் மட்டுமே கொடியுடையதாய் உள்ளன, மக்கள் கொடியவராய் இல்லை.
- ✱ வண்டுகள் மட்டுமே கள் உண்கின்றன, மக்கள் கள் அருந்துவதில்லை.
- ✱ மலைமூங்கில்கள் வெறுமையாய் இருக்கின்றன, மக்களிடம் வெறுமை இல்லை.
- ✱ நெற்கதிர்கள் மட்டுமே போராக எழுகின்றன, போர் என்பதே நாட்டில் இல்லை.

**தொடைநயங்கள் :**

✱ இப்பாடலில் மோனை நயம் இடம் பெற்றுள்ளது.

❖ **சீர்மோனை:** **த**ந்தையில்லோர்-**த**ந்தையாகியுந்; **தா**யாரில்லோர்-**தா**யராகியும்;

❖ **அடிமோனை:** **மா**வே – **மா**மலரே; **கா**வுகளே - **க**ள்ளுண்பன; **இ**யற்புலவரே-**இ**சைப்பாணரே;

✱ இப்பாடலில் எதுகை நயம் இடம் பெற்றுள்ளது.

❖ **சீர் எதுகை :** த**ந்**தையில்லோர் - த**ந்**தையாகியுந்; தா**யா**ரில்லோர் - தா**ய**ராகியும்;

❖ **அடி எதுகை:** ப**ழு**யானையே – வ**டு**மணிச்சிலம்பே; க**யற்** - இ**யற்**; வி**ழி** – மொ**ழி**;

**அணி நயம் :** உவமையணி

**முடிவுரை**

சோழமன்னன் இரண்டாம் இராசராசசோழனின் பெருமைகளை அவன் நாட்டின் இயற்கை வளத்தை எடுத்துக்கூறி அதன் வழியே எடுத்துரைத்திருப்பது போற்றுதலுக்குரியது. இப்பாடல் எளிதில் பொருள் கொள்ளும்படியாகவும் சந்த நயத்தோடும் இயற்றப்பட்டிருக்கிறது.

3. **சிலப்பதிகார மருவூர்ப்பாக்க வணிக வீதிகளை இக்கால வணிக வளாகங்களோடும் அங்காடிகளோடும் ஒப்பிட்டு எழுதுக.** *செ-3 *[APR – 2023, AUG -2022, SEP – 2021, PTA – 2, MDL – 19]*

**முன்னுரை**

வணிகமானது நாளுக்கு நாள் வளர்ந்து மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்கிறது. அன்று முதல் இன்று வரை ஒரு நாட்டிலிருந்து மற்றொரு நாட்டிற்கு பண்டமாற்று முறையும், பொருள்களின் உற்பத்தியும், அதைச் சந்தைப்படுத்துதலும் நடைபெற்றுக் கொண்டுதான் இருக்கிறது. இங்கு மருவூர்ப்பாக்க வணிக வீதிகளையும் இக்கால வணிக வளாகங்களையும் பற்றிய ஒப்பீட்டை விரிவாகக் காணலாம்.

| மருவூர்ப்பாக்க வணிக வீதிகள் | இக்கால வணிக வளாகங்கள் / அங்காடிகள் |
|---|---|
| ***அ) நறுமணப்பொருள் வீதி***<br>வண்ணக்குழம்பு, சுண்ணப்பொடி, குளிர்ந்த மணச்சாந்து, பூ, நறுமணப்பொருள்கள், அகில் முதலியவற்றை விற்பவர்கள் வீதிகளில் வணிகம் செய்தார்கள். | வண்ணப்பொருள்கள், அலங்காரப் பொருட்கள், நறுமணப்பொருள்கள் போன்றவை கடைகள் மற்றும் இணைய வழியிலும் விற்கப்படுகின்றது. |
| ***ஆ) நெசவாளர் வீதி***<br>பட்டு, முடி, பருத்தி நூல் கொண்டு அழகாகப் பின்னிக் கட்டும் கைத்தொழில் வல்லுநர்களான நெசவாளர்களை நிரம்பக் கொண்டது. | இன்றைக்கு கைத்தறி ஆடைகளைவிட விசைத்தறி ஆடைகளே அதிகம் விற்கின்றன. வீதிக்கு வீதி பல நவீன ஆடையகங்களைக் காண முடிகிறது. |
| ***இ) விலையுயர்ந்த அலங்காரப் பொருள்கள் விற்பனை***<br>விலைமதிப்பில்லாப் பொருள்களான பட்டும், பவளமும், முத்தும், பொன்னும், மணியும் அளவில்லாமல் வீதிகளில் குவிந்து கிடக்கின்றன. | குளிரூட்டப்பட்ட வணிக வளாகங்களில் பலவித அலங்காரங்களுடன் முத்து, பவளம், பொன், மணி, வைரம், வைடூரியம் விற்கப்படுகின்றன. |
| ***ஈ) கூல வீதி***<br>எட்டுவகைத் தானியங்களும் குவிந்து கிடக்கும் கூலக்கடைத் தெருக்கள் இருந்தன. | தானியங்களும், தினை வகைகளும், முந்திரி, பாதாம் போன்ற பருப்பு வகைகளும் பல வடிவங்களில் கடைகளிலும் பல்பொருள் அங்காடிகளிலும் கிடைக்கின்றன. |
| ***உ) பலவகை சிறு-குறு கைத்தொழிலாளர்கள்***<br>வெண்கலம், செம்புப் பாத்திரங்கள் செய்வோர், மரத்தச்சர், பொற்கொல்லர், இரும்புக் கொல்லர், ஓவியர், சிற்பிகள், இரத்தின வேலை செய்பவர், தையற்காரர், தோல்பொருள் தைப்பவர், மண், துணி, பொம்மைகள் செய்பவர். | அக்காலத் தொழில்களுடன், ஆரி வேலை, நெகிழி பொம்மைகள், இயக்கக்கூடிய இயந்திர (ரோபோ) பொம்மைகள், மென்பொருள் சார்ந்த பொருட்கள் செய்தல், நவீன சாதனங்களை விற்பவர்கள், பழுது நீக்குபவர்கள், முகவர்கள் போன்றோர் உள்ளனர். |
| ***ஊ) உணவுப்பொருள்கள் விற்பனை***<br>பிட்டு வணிகம், அப்பம் சுடுதல், மீன், உப்பு, வெற்றிலை முதலியன விற்றல், ஏலம் முதலிய ஐந்து நறுமணப்பொருள், இறைச்சி மற்றும் எண்ணெய் போன்ற உணவு சார்ந்த விற்பனையும் நடைபெற்றது. | அக்கால உணவு வகைகளுடன் துரிதஉணவு, பானங்கள், நொறுக்குதீனிகள் போன்ற பன்னாட்டு உணவுகள் பெரிய உணவகங்களில் துவங்கித் தள்ளுவண்டிகளிலும், இணையவழியில் வீடு தேடியும் விற்கப்படுகின்றன. பதப்படுத்தப்பட்ட உணவுகளும், இறைச்சிகளும் விற்கப்படுகின்றன. |
| ***எ) கலை வல்லுநர்கள்***<br>குழலிலும் யாழிலும் - குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் என ஏழு இசைகளை (ச, ரி, க, ம, ப, த, நி என்னும் ஏழு சுரங்களை) இசைத்துத் திறமையைக் காட்டும் வல்லுநர்கள் இருந்தனர். | அக்காலப் பாரம்பரிய இசையோடு, பியானோ, கிட்டார், டிரம்ஸ் போன்ற நவீனக் கருவிகளின் மூலம் திறமைகளைக் காட்டுகின்றனர். 'ஸ்முல்' போன்ற செயலிகளின் உதவியோடு, சாமான்யர்களும் இசை கலைஞர்கள் போல் பாடி மகிழ்விக்கின்றனர் |

**முடிவுரை**

சிலப்பதிகார மருவூர்ப்பாக்கத்தில் நடைபெற்ற வணிகங்கள் தெருக்களிலே காற்றோட்டமான சூழலில் இருந்தது. மக்கள் தொகை இன்றைய வணிகத்தையும் பண்டமாற்று முறையையும் நிரணயிக்கிறது. தெருக்கள் மாறினாலும், பொருட்கள் மாறினாலும் காலம் மாறினாலும் மக்களின் தேவைகள் மாறினாலும் வாழ்வியல் இன்பங்கள் மாறவில்லை. என்றைக்குமே மக்களின் சூழ்நிலைக்கேற்ப வணிகமானது மாறிக் கொண்டு தான் இருக்கும்.

**4. நிகழ்வுகளைத் தொகுத்து அறிக்கை எழுதுக.** *து *[PTA - 5]*

**மகளிர் நாள்விழா**

**இடம் :** பள்ளிக் கலையரங்கம் **நாள் :** 08.03.2023

கலையரங்கத்தில் ஆசிரியர்கள், மாணவர்கள் கூடுதல் - தலைமையாசிரியரின் வரவேற்பு - இதழாளர் கலையரசியின் சிறப்புரை - ஆசிரியர்களின் வாழ்த்துரை - மாணவத் தலைவரின் நன்றியுரை.

**மகளிர் நாள்விழா அறிக்கை**

**நாள் : 08.03.2023** **இடம் : பள்ளிக் கலையரங்கம்**

08.03.2020 அன்று மகளிர் நாள் விழாவானது எம் பள்ளியில் மிகவும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. காலை 10 மணி அளவில் தமிழ்த்தாய் வாழ்த்துடன் விழா இனிதே தொடங்கியது. ஆசிரியர்களும் மாணவர்களும் திரளாக வருகை புரிந்திருந்தனர். ஆசிரியர்கள், மாணவிகள் சிலர் பெண் விடுதலையைப் போற்றும் கும்மி பாடலைப் பாடி நடனமாடினர். 10.30 மணியளவில் எம்பள்ளித் தலைமையாசிரியர் வரவேற்புரை கூற விழா இனிதே ஆரம்பமானது.

தலைமையாசிரியர், *'மங்கையராய்ப் பிறப்பதற்கே நல்ல மாதவம் செய்திடல் வேண்டுமம்மா'* - என்று கூறி தனது வரவேற்புரையை ஆரம்பித்தார். அடுத்த கணம் அரங்கம் முழுவதும் கரவொலி கேட்டது. பள்ளிக்குச் சிறப்பு விருந்தினாராக வருகை புரிந்திருக்கும் பன்முகத் தன்மை கொண்ட இதழாளர் கலையரசி அவர்களை வரவேற்பதில் பெருமகிழ்ச்சி அடைவதாக பாராட்டிப் பேசினார். தலைமையாசிரியர், ஆசிரியர்கள், மாணவிகள் அனைவரையும் வரவேற்ற பிறகு தன் உரையை முடித்தார்.

விழாவிற்குச் சிறப்பு விருந்தினராக வருகைபுரிந்த இதழியலாளர் **கலையரசி** அவர்கள் *'நிமிர்ந்த நன்னடை ...'* என்ற பாரதியாரின் கவிதையைக் கூறி தன் உரையைத் தொடங்கினார். மகளிர்நாள் விழாவின் நோக்கம், அதன் சிறப்புகளைப் பற்றி விரிவாக எடுத்துக் கூறினார். மேலும், இன்றைய நாளில் கிராமப்புறத்தில் இருந்துவந்து விளையாட்டுத்துறையில் ஆசிய தடகளப்போட்டியில் 800 மீட்டர் ஓட்டத்தில் இந்தியாவுக்கான முதல் தங்கப்பதக்கத்தை வென்ற தங்க மங்கை கோமதி மாரிமுத்துவைப் பற்றிப்பேசினார். இவ்வாறு பலத்துறைகளில் சாதித்தப் பெண்களைப் பற்றிக் கூறினார். பெண்கள் பள்ளி, கல்லூரி, பணி எங்கு சென்றாலும் பல இன்னல்களைச் சந்திக்க நேரிடும். ஆனால், அதை மன தைரியத்துடன் எதிர்கொண்டு வாழ்வில் முன்னேற வேண்டும். அதுபோல், இப்பள்ளியில் படிக்கும் ஒவ்வொரு மாணவியும் தங்களுக்குக் கிடைக்கும் வாய்ப்புகளைப் பயன்படுத்தி வாழ்வில் சாதனைகள் பல படைக்க வேண்டும் என்று கூறி மாணவிகளை உற்சாகப்படுத்தினார்.

அதன்பிறகு, எம்பள்ளி ஆசிரியர்கள் ஒவ்வொருவராக மகளிர் தின வாழ்த்துக்களைக் கூறிச் சிறப்புரை ஆற்றினார்கள். ஆசிரியர்கள் சிலர் தாங்கள் அறிந்த சாதனைப் பெண்கள் பற்றி உரையாற்றினார்கள். மேலும் சிலர், தாங்கள் திருமணத்திற்குப் பிறகு தான் படித்து ஆசிரியராகப் பணியாற்றுகின்றனர் என்றனர். இவை மாணவிகளுக்குப் புதிய உத்வேகத்தை அளித்தது.

இறுதியாக மாணவத்தலைவி அமுதா, *"பெண் வீட்டை ஆள்பவள் மட்டும் அல்ல, நாட்டை ஆளும் திறமை படைத்தவள், பெண்ணாகப் பிறந்தது நம் பெருமை"* என்று கூறி அனைவருக்கும் நன்றியுரை வழங்க நாட்டுப்பண்ணுடன் விழா இனிதே முடிவுற்றது.

## கூடுதல் வினாக்கள்

**5. மங்கையராய்ப் பிறப்பதற்கே என்னும் பாடத்தில் இடம்பெற்றுள்ள மூவர் பற்றி சுருக்கி எழுதுக.** *து *[AUG-2022]*

**முன்னுரை**

பெண்கள் இன்று அனைத்துத் துறைகளிலிலும் ஆண்களுக்கு நிகராக சர்வ வல்லமை படைத்த சக்திகளாக மாறிவிட்டனர். இத்தகைய சாதனைகளைப் புரிய முன்னுதாரணமாக விளங்கிய பெண் சாதனையாளர்களைப் பற்றி விரிவாகக் காணலாம்.

**எம். எஸ். சுப்புலட்சுமி (முகில் நாச்சி) :**

**இளமைக்காலம் :**

- மதுரை சண்முக வடிவு சுப்புலட்சுமி வீணைக் கலைஞரான தன் தாயிடமிருந்து இசையைக் கற்றார்.
- ஐந்தாம் வகுப்பு வரை மட்டுமே படித்த இவர் பதினேழு வயதில் சென்னை மியூசிக் அகாதெமியில் மேதைகள் பலர் முன்பு கச்சேரி செய்து பாராட்டைப் பெற்றார்.

**புகழ் தந்த பாடல்கள் :**

- இவர் நடித்த மீரா திரைப்படம் மிகப் பெரிய வெற்றியைப் பெற்றது.
- காற்றினிலே வரும் கீதம், குறையொன்றுமில்லை ஆகியன இவர் பாடிய புகழ் பெற்ற பாடல்களாகும்.
- ஜவஹர்லால் நேரு, சரோஜினி நாயுடு ஆகியோரின் பாராட்டைப் பெற்றவர்.
- இரகுபதி இராகவ இராஜாராம் என்ற பாடலைப்பாடி காந்தியடிகளின் பாராட்டைப் பெற்றார்.
- இங்கிலாந்திலும் ஐக்கிய நாடுகள் சபையிலும் இவர் பாடல்களைப் பாடியுள்ளார்.

**விருதுகளும் பெருமைகளும் :**

- இசைப்பேரரசி என்று நேரு பெருமகனாரால் அழைக்கப்பட்டவர்.
- தாமரையணி விருது, இந்திய மாமணி விருது, பன்னாட்டு விருதான மகசேசே விருது பெற்றவர்.

**மோகனா (பாலசரஸ்வதி) :**

**இளமைக்காலம் :**

- இவர் பரதநாட்டியத்தில் புகழ் பெற்றவர்.
- ஏழு வயதில் காஞ்சிபுரத்தில் பரதநாட்டியத்தை முதன்முதலில் மேடையேறி அரங்கேற்றினார்.
- பதினைந்து வயதில் சென்னை சங்கீத சமாஜம் அரங்கில் இவரின் நடன நிகழ்ச்சி நடைபெற்றது.
- இசைமேதை பண்டிட் இரவிசங்கர் பாராட்டினார். அவரது தம்பி மூலம் பல வாய்ப்புகள் கிடைத்தன.

**புகழ் தந்த நடனங்கள் :**

- நம் நாட்டுப் பண்ணாகிய “ஜனகணமன” பாடலுக்கு மெய்ப்பாடுகளோடு பரதநாட்டியம் ஆடினார்.
- ஐரோப்பா, அமெரிக்கா முதலிய உலக நாடுகளில் இவரின் பரதநாட்டியம் அரங்கேறியுள்ளது.
- செவ்வணி விருது பெற்றவர்.

**மாதவி (சின்னப்பிள்ளை) :**

**சமூகப்பணி :**

- களஞ்சியம் என்ற பெயரில் இவர் மகளிர் சுய உதவிக் குழு உருவாக்கினார்.
- இதில் வயதானவர்கள், மாற்றுத்திறனாளிகள் என அனைவரையும் இவர் இணைத்தார்.
- இதனை பாராட்டி மாவட்ட ஆட்சித்தலைவர் கண்மாயில் மீன் பிடிக்கும் குத்தகையை கொடுத்தார்.
- சுனாமியால் பாதிக்கப்பட்டடோருக்கு இவர் தலைமையில் மீட்புப்பணிகள் மேற்கொண்டார்.
- இன்று இக்குழு பல மாநிலங்களிலில் பல லட்சம் பெண்களோடு வேலை செய்கிறது.

**விருதுகளும் பெருமைகளும் :**

- **பெண் ஆற்றல் விருது (ஸ்திரீ சக்தி புரஸ்கார்)** பெற்றார்.
- இவர் தமிழக அரசின் **ஔவை விருதையும்,** தூர்தர்ஷனின் **பொதிகை விருதையும்** பெற்றார்.
- அண்மையில் **தாமரைத்திரு விருதையும்** பெற்றார்.

**முடிவுரை**

பெண்கள் நாட்டின் கண்கள் என்பதை உலகுக்கு உணர்த்திய சாதனைப் பெண்கள் வழியில் நாமும் சென்றால் நற்புகழையும் உயர்ந்த நிலையையும் அடையலாம்.



இயல் - 7

**6. இரண்டாம் இராசராச சோழன் மெய்க்கீர்த்தியில் அமைந்துள்ள கருத்துகளை விவரிக்க.** *செ-2 *[PTA - 4]*

அரசாண்ட மன்னனின் உண்மையான புகழை எடுத்துரைக்கும் இலக்கியமே மெய்க்கீர்த்தி. பாடப்பகுதியிலுள்ள மெய்க்கீர்த்தி இரண்டாம் இராசராச சோழனின் ஆட்சிச்சிறப்பினையும், அவன் ஆட்சி செய்த நாட்டின் வளத்தைப் பற்றியும் விளக்குகிறது.

**அ) நாட்டுவளம் மற்றும் மக்களின் நிலை :**

❋ யானைகளே பிணிக்கப்படுகின்றன, மக்கள் ஒருபோதும் பிணிக்கப்படுவதில்லை.
❋ சிலம்புகள் மட்டுமே புலம்புகின்றன, மக்கள் புலம்புவதில்லை.
❋ ஓடைகள் மட்டுமே கலக்கமடைகின்றன, மக்கள் ஒருபோதும் கலக்கமடைவதில்லை.
❋ ஆற்றின் நீர் மட்டுமே சிறைப்படுத்தப்படுகின்றன, மக்கள் சிறைப்படுத்தப்படுவதில்லை.
❋ மாங்காய்கள் மட்டுமே வடுப்படுகின்றன, மக்கள் வடுப்படுவதில்லை.
❋ மலர்கள் மட்டுமே பறிக்கப்படுகின்றன, மக்கள் உரிமைகள் பறிக்கப்படுவதில்லை.
❋ காடுகள் மட்டுமே கொடியுடையதாய் உள்ளன, மக்கள் கொடியவராய் இல்லை.

**ஆ) திருநாட்டின் இயல்பு :**

❋ நீண்ட மலைகளே இருள் சூழ்ந்திருக்கின்றன, மக்கள் வறுமையோடு வாழ்வதில்லை.
❋ இளமான்களின் கண்கள் மட்டுமே மருளுகின்றன, மக்களிடம் கண்களில் மருட்சியில்லை.
❋ குளத்து மீன்களே பிறழ்ந்து செல்கின்றன, மக்கள் நிலை பிறழ்வதில்லை.
❋ செவிலித்தாயர் மட்டுமே சினங்காட்டுவர், வேறு யாரும் சினம் கொள்வதில்லை.
❋ புலவர் பாட்டில் மட்டுமே பொருள் பொதிந்து இருக்கின்றது, மக்களிடம் மறைவான பொருட்கள் இல்லை.
❋ இசைப்பாணரே தெருவில் ஆடிப்பாடுவர், தேவையற்று வேறு எவரும் அவ்வாறு செய்வதில்லை.

**இ) நெறி நின்று காவல் புரிபவன் சோழன் :**

இரண்டாம் இராசராசசோழன் தந்தையில்லாதோருக்குத் தந்தையாய் இருந்து, தாயில்லாதோருக்குத் தாயாய் இருந்து, மகனில்லாதோருக்கு மகனாக இருந்து, உலக உயிர்களுக்கு எல்லாம் உயிராக இருந்து நெறியோடு காவல் காக்கின்றான்.

**ஈ) புகழினத்தின் தலைவன் :**

விழி பெற்ற பயனாகவும், மெய் பெற்ற அருளாகவும், மொழி பெற்ற பொருளாகவும், புகழினைப் பெற்ற நூலாகவும் இரண்டாம் இராசராசசோழன் திகழ்கின்றான். இறுதியில் புகழ் அனைத்திற்கும் தலைவனாகி எல்லாவற்றையும் காப்பவனாக இருக்கின்றான்.

# 8. பெருவழி



## பலவுள் தெரிக

1. மேன்மை தரும் அறம் என்பது... *உ [SEP – 2021, PTA - 4]
   ***அ) கைமாறு கருதாமல் அறம் செய்வது*** ஆ) மறுபிறப்பில் பயன் பெறலாம் என்ற நோக்கில் அறம் செய்வது
   இ) புகழ் கருதி அறம் செய்வது ஈ) பதிலுதவி பெறுவதற்காக அறம் செய்வது
2. 'வீட்டைத் துடைத்துச் சாயம் அடித்தல்' இவ்வடி குறிப்பிடுவது *செ-1 [PTA - 5]
   அ) காலம் மாறுவதை ஆ) வீட்டைத் துடைப்பதை
   ***இ) இடையறாது அறப்பணி செய்தலை*** ஈ) வண்ணம் பூசுவதை
3. உலகமே வறுமையுற்றாலும் கொடுப்பவன் என்றும் பொருள்களின் இருப்பைக் கூட அறியாமல் கொடுப்பவன் என்றும் பாராட்டப்படுவோர் *உ [APR – 2023, SEP – 2020, PTA - 6]
   அ) உதியன்; சேரலாதன் ***ஆ) அதியன்; பெருஞ்சாத்தன்***
   இ) பேகன்; கிள்ளிவளவன் ஈ) நெடுஞ்செழியன்; திருமுடிக்காரி
4. காலக்கணிதம் கவிதையில் இடம்பெற்ற தொடர் *செ-2 [PTA - 6]
   ***அ) இகழ்ந்தால் என்மனம் இறந்துவிடாது*** ஆ) என்மனம் இகழ்ந்தால் இறந்துவிடாது
   இ) இகழ்ந்தால் இறந்துவிடாது என்மனம் ஈ) என்மனம் இறந்துவிடாது இகழ்ந்தால்
5. சிலப்பதிகாரத்திலும் மணிமேகலையிலும் அமைந்த பாவினம் *இ [AUG – 2022, PTA - 2]
   ***அ) அகவற்பா*** ஆ) வெண்பா இ) வஞ்சிப்பா ஈ) கலிப்பா

## கூடுதல் வினாக்கள்

6. கானடை என்பதைப் பிரித்தால், பொருந்தாத தொடரைத் தேர்க. *உ [MAY – 2022]
   அ) கான் அடை - காட்டைச் சேர் ஆ) கான் நடை - காட்டுக்கு நடத்தல்
   இ) கால் நடை - காலால் நடத்தல் ***ஈ) கால் உடை - காலால் உடைத்தல்***
7. 'எய்துவர் எய்தாப் பழி' - இக்குறளடிக்குப் பொருந்தும் வாய்பாடு எது? *இ [AUG – 2022, PTA - 1]
   ***அ) கூவிளம் தேமா மலர்*** ஆ) கூவிளம் புளிமா நாள்
   இ) தேமா புளிமா காசு ஈ) புளிமா தேமா பிறப்பு

## குறுவினா

**1. *'கொள்வோர் கொள்க; குரைப்போர் குரைக்க!*** *செ-2
***உள்வாய் வார்த்தை உடம்பு தொடாது'***

**அ) அடியெதுகையை எடுத்தெழுதுக. ஆ) இலக்கணக் குறிப்பு எழுதுக – கொள்க, குரைக்க**

| | |
|---|---|
| அ) அடி எதுகை | கொ**ள்**வோர், உ**ள்**வாய் |
| ஆ) இலக்கணக்குறிப்பு | **வியங்கோள் வினைமுற்று :** கொள்க, குரைக்க |

**2. குறள்வெண்பாவின் இலக்கணத்தை எழுதி எடுத்துக்காட்டுத் தருக.** *இ [APR – 2023, PTA – 1]

**குறள் வெண்பா :**

- இது வெண்பாவின் பொது இலக்கணம் அமையப்பெற்று இரண்டு அடிகளாய் வரும்.
- முதலடி நான்கு சீராக (அளவடி) வரும். இரண்டாம் அடி மூன்று சீராக (சிந்தடி) வரும்.

**எ.கா : உலகத்தோ டொட்ட வொழுகல் பலகற்றும்**
**கல்லார் அறிவிலா தார்.**

**3. குறிப்பு வரைக – அவையம்.** *உ [APR – 2023, MAY – 2022, PTA – 5]

- அறம் கூறும் மன்றங்களே அவையம் எனப்பட்டன.
- இவை அரசனின் அறநெறி ஆட்சிக்குத் துணை புரிந்தன.
- "அறம் அறக்கண்ட நெறிமான் அவையம்" என்கிறது புறநானூறு.

**4. காலக்கழுதை கட்டெறும்பானதும் கவிஞர் செய்வது யாது?** *செ-1 *[PTA - 6]*

- நாம் சன்னலினைச் சுத்தம் செய்து வைத்தாலும் சில காலங்கள் கழித்து அது மீண்டும் அழுக்காகிவிடும். அதை வாளித்தண்ணீர், சாயக்குவளை, கந்தைத்துணி, கட்டைத் தூரிகை போன்றவற்றைக் கொண்டு சுத்தம் செய்யும் பணி ஓய்வதில்லை.
- அதுபோல நம் மனதில் ஏற்படக்கூடிய சஞ்சலம் போன்ற அழுக்கை அறக்கருத்துகள் மூலம் தொடர்ந்து சுத்தப்படுத்த வேண்டும். ஏனெனில், உலகம் நிலைத்திருப்பதற்கான காரணம் தொடர் இயக்கமே.
- 'சன்னலைச் சுத்தம் செய்யும் பணியும் மனதை சுத்தம் செய்யும் அறப்பணியும் இவ்வுலகில் ஓய்வதில்லை' என்று கவிஞர் 'காலக்கழுதை கட்டெனும்பானதும்' என்று குறிப்பிடுகிறார்.

**5. வஞ்சிப்பாவிற்கு உரிய ஓசை தூங்கல் ஓசை ஆகும். துள்ளல் ஓசை கலிப்பாவுக்கு உரியது. இத்தொடர்களை ஒரே தொடராக இணைத்து எழுதுக.** *இ

வஞ்சிப்பாவிற்குத் தூங்கல் ஓசையும், கலிப்பாவிற்குத் துள்ளல் ஓசையும் உரியது.

## கூடுதல் வினாக்கள்

**6. கொடை என்பதும் ஓர் அறம் என்பதனை ஔவையார் எவ்வாறு குறிப்பிடுகிறார்?** *உ *[PTA - 2]*

- *"உலகமே வறுமையுற்றாலும் கொடுப்பவன் அதியன்"* என்கிறார் ஔவையார்.
- இவ்வாறு கொடை என்பதும் ஓர் அறம் என்று ஔவையார் குறிப்பிடுகிறார்.

**7. வெண்பா, ஆசிரியப்பாவின் ஓசைகளை எழுதுக.** *இ *[MAY – 2022, SEP–2021]*

- வெண்பாவின் ஓசை - செப்பலோசை
- ஆசிரியப்பாவின் ஓசை - அகவலோசை

**8. பா எத்தனை வகைப்படும்? அவை யாவை?** *இ *[AUG – 2022]*

பா நான்கு வகைப்படும். அவை

- வெண்பா
- ஆசிரியப்பா
- கலிப்பா
- வஞ்சிப்பா

**9. வெண்பாவின் பொது இலக்கணத்தை எழுதுக.**

- செப்பல் ஓசை பெற்று வரும். *இ *[PTA - 6]*
- ஈற்றடி முச்சீராகவும், ஏனைய அடிகள் நாற்சீராகவும் வரும்.
- இயற்சீர் வெண்டளை, வெண்சீர் வெண்டளை மட்டுமே பயின்று வரும்.
- இரண்டடி முதல் பன்னிரண்டு அடி வரை அமையும். *(கலிவெண்பா பதின்மூன்று அடிக்கு மேற்பட்டு வரும்)*
- ஈற்றுச்சீர் நாள், மலர், காசு, பிறப்பு என்னும் வாய்பாட்டில் முடியும்.

**10. கவிஞன் யானோர் காலக் கணிதம் -எனத் தொடங்கும் கவிஞர் கண்ணதாசனின் கவிதையில் உங்களைக் கவர்ந்த மூன்று தொடர்களை எழுதி காரணத்தைக் குறிப்பிடுக. (அ) காலக்கணிதம் கவிதையில் கவிஞர் கண்ணதாசன் குறிப்பிட்டுள்ள கருத்துகளுள் உங்களைக் கவர்ந்த ஐந்து கருத்துகளை எழுதுக.** *செ-2 *[MAY – 2022, PTA – 4]*

| தொடர் | காரணம் |
|---|---|
| *"மாற்றம் எனது மானிடத் தத்துவம்"* | மாற்றம் காண்பது எனது மனிதத் தன்மையின் தத்துவமாகும் என்று நமக்கோர் செய்தி சொல்லி நகர்ந்துபோன விதம் நம்மைத் திரும்பிப் பார்க்க வைக்கிறது. |
| *"எவ்வெவை தீமை எவ்வெவை நன்மை என்ப தறிந்து ஏகுமென் சாலை"* | என் வழியில் எவை தீமை, எவை நன்மை என்பதை அறிவேன் என்னும் இவ்வரிகள் எனக்கு பிடித்தவையாகும். |
| *"தலைவர் மாறுவர்; தர்பார் மாறும்; தத்துவம் மட்டுமே அட்சய பாத்திரம்"* | நம்மை ஆட்சி செய்யும் தலைவர் மாறலாம், ஆட்சி மாறலாம், ஆனால் மாற்றம் என்னும் தத்துவம் மட்டுமே நிலையானது என்று கூறியது மிகவும் அருமை. |
| *"கொள்வோர் கொள்க; குரைப்போர் குரைக்க!"* | மற்றவர் என்ன நினைப்பார்கள் என்று எண்ணினால் அவன் கவிஞன் அல்லன். ஏற்றுக் கொள்வோர் ஏற்றுக்கொள்ளட்டும். இகழ்ந்து பேசுவோர் பேசட்டும் என்று துணிந்து செயலாற்றினால்தான் நிலைத்திருக்க முடியும் என்று அழுத்தமாக சொன்னதால் இத்தொடர் என்னைக் கவர்ந்துள்ளது. |
| *"நானே தொடக்கம்; நானே முடிவு; நானுரைப் பதுதான் நாட்டின் சட்டம்!"* | முதலும் நானே, முடிவும் நானே, நான் கூறுவதே இந்நாட்டின் சட்டம் என்று கவிஞர் கூறுவது வீரத்தை வெளிப்படுத்துகிறது. |

## சிறுவினா

1. **'சங்க இலக்கியங்கள் காட்டும் அறங்கள் இன்றைக்கும் தேவையானவையே' என்பதற்குச் சில எடுத்துக்காட்டுகள் தருக. (அ) சங்க இலக்கியங்களில் காணப்படும் ஐந்து அறக்கருத்துகளைத் தொகுத்து, அவை இன்றும் தேவையே என்பதனை நிறுவுக.** *உ *[APR – 2023, MAY – 2022, SEP - 2021, PTA – 1, 5]*

**குறிப்பு : இவ்வினா நெடுவினா பகுதியில் அதிகம் கேட்கப்பட்டுள்ளது**

**முன்னுரை**

"அறம் செய விரும்பு" என்பது ஔவையின் மொழியாகும். அறத்தையே மனித உறவின் மையமாகக் கொண்ட காலமே சங்க காலமாகும். சங்க இலக்கியங்கள் காட்டும் அறக்கருத்துகளையும் அவை இன்றும் தேவை என்பது குறித்து இக்கட்டுரையில் காணலாம்.

**சங்க இலக்கியத்தில் வணிக நோக்கமில்லா அறம் :**

- இப்பிறப்பில் அறம் செய்தால், அதன் பயனை மறுபிறப்பில் பெறலாம் என்று அறம் செய்வதில் வணிக நோக்குக் கூடாது.
- 'நோக்கமின்றி அறம் செய்வதே மேன்மை தரும்' என்று புறநானூறு குறிப்பிடுகிறது.
- ஆய் என்ற வள்ளல் வணிக நோக்கின்றி அறம் செய்பவர் என்று ஏணிச்சேரி முடமோசியார் குறிப்பிடுகிறார்.

**இன்றைய தேவை:** சமூக ஊடகங்கில் விளம்பரத்துக்காக உதவுவது போன்று நடிக்கும் செய்திகளுக்கு மத்தியில் சங்க கால மக்களை போல எந்தவித எதிர்ப்பார்ப்பும் அதாவது வணிக நோக்கம் இல்லாது செய்யும் அறம் இன்றைக்கும் தேவையே.

**போர் அறம் :**

- போர் அறம் என்பது வீரமற்றோர், புறமுதுகிட்டோர், சிறார், முதியோர் ஆகியோரை எதிர்த்துப் போர் செய்யாமையைக் குறிக்கிறது.
- போரின் கொடுமையிலிருந்து பசு, பார்ப்பனர், பெண்கள், நோயாளர், புதல்வரைப் பெறாதவர் ஆகியோருக்குத் தீங்கு வராமல் போர் புரிய வேண்டும் என்று புறப்பாடல் கூறுகிறது.
- தம்மைவிட வலிமை குறைந்தாரோடு போர் செய்ய கூடாது என்று ஆவூர் மூலங்கிழார் குறிப்பிடுகிறார்.

**இன்றைய தேவை:** தற்காலத்தில் நாட்டிற்கு இடையே போர் நடைபெறாவிட்டாலும், மக்களுக்கு இடையே சாதி, மதம் என்ற பெயரில் ஏற்படும் வன்முறைகளை ஒடுக்கப் போர் அறம் தேவைப்படுகிறது.

**கொடை அறம் :**

- ஒரு மனிதன் தன்னுடைய மகிழ்ச்சியை மறந்து மற்றவர் மகிழ்ச்சியை நாடுவதில்தான் உண்மையான மகிழ்ச்சி அடங்கியிருக்கிறது.
- கொடையின் சிறப்பால் வள்ளல் எழுவர் போற்றப்படுவது, பழந்தமிழர் கொடை மாட்சியைப் புலப்படுத்துகிறது.
- கொடை என்பதும் ஓர் அறம் என்பதனை ஔவையார் *"உலகமே வறுமையுற்றாலும் கொடுப்பவன் அதியன்"* என அதியனைப் புகழ்ந்து கூறுகிறார்.

**இன்றைய தேவை:** தற்போதுள்ள பொருளாதார சூழ்நிலையில் கொடை என்பதே அரிதாகி வருகிறது. தேவைக்குரியோர்க்குக் கொடை அளித்தல் என்பது மிகவும் அவசியமான அறமாகும்.

**உதவியாண்மை (உதவும் அறம்) :**

- பிறருக்கு உதவி செய்தலை ஈழத்துப் பூதன் தேவனார் 'உதவியாண்மை' என்று குறிப்பிடுகிறார்.
- தன்னைத் தாண்டிப் பிறரைப் பற்றிச் சிந்திக்கும்போது, இருக்கும் நிலையை ஒதுக்கி, தான் இருக்க வேண்டிய நிலை எது? என்பதை மனிதன் உணர்கிறான்.
- உண்மையான செல்வம் என்பது பிறர்துன்பம் தீர்ப்பதுதான் என்கிறார் நல்வேட்டனார்.

**இன்றைய தேவை:** ஆயிரம் தொழில்நுட்பங்கள் வளர்ந்தாலும் மனிதன் ஒரு சார்புயிரியே. தன்னைச் சார்ந்திருப்போருக்கு மனிதன் அவசியம் உதவ வேண்டும்.

**வாய்மை (உண்மை பேசும் அறம்) :**

- 'வாய்மை பேசும் நாவே உண்மையான நா' என்ற கருத்தை, "பொய்யாச் செந்நா", "பொய்படுபறியா வயங்கு செந்நா" என்று சங்க இலக்கியங்கள் கூறுகின்றன.
- இன்பத்தின் கதவையும், துன்பத்தின் கதவையும் திறப்பதும் நாவே ஆகும். மெய் பேசும் நா மனிதனை உயர்த்துகிறது. பொய் பேசும் நா மனிதனைத் தாழ்த்துகிறது.
- 'பிழையா நன்மொழி' என்று வாய்மையையும் 'பொய் மொழிக் கொடுஞ்சொல்' என்று பொய்யையும் பற்றி நற்றிணை குறிப்பிடுகின்றது.

**இன்றைய தேவை:** இன்று மனிதர்கள் பொய் பேசிப் பேசி உலகமே பொய்மையாகி விட்ட நிலையில் உண்மை பேசி வாய்மையை நிலைநிறுத்துவது மிகவும் அவசியமாகிறது.

**முடிவுரை**

சங்க இலக்கியங்கள் காட்டும் அறங்கள், ஒரு மனிதன் தனியாகவும் சமூக உறுப்பினராகவும் இயங்குவதற்கும், அவனது பண்பு நலனை உருவாக்குவதற்கும் உதவும் விதிமுறைகளாகத் திகழ்கின்றன. சமயக் கலப்பில்லாத மானிட அறம் இயல்பாக நிலவிய காலம் சங்க காலமாகும். இது இன்றளவும் தேவையே என்பதை இக்கட்டுரையில் அறிந்தோம்.

**2. ஆசிரியப்பாவின் பொது இலக்கணத்தை எழுதுக.** *இ *[SEP – 2020]*

- ❋ அகவல் ஓசை பெற்று வரும்.
- ❋ ஈரசைச்சீர் மிகுதியாகவும், காய்ச்சீர் குறைவாகவும் பயின்று வரும்.
- ❋ ஆசிரியத்தளை மிகுதியாகவும், வெண்டளை, கலித்தளை ஆகியவை விரவியும் வரும்.
- ❋ மூன்றடி முதல் எழுதுபவர் மனநிலைக்கேற்ப அமையும்.
- ❋ ஏகாரத்தில் முடித்தலே இதன் சிறப்பு.

**3. 'சுற்றுச்சூழலைப் பேணுவதே இன்றைய அறம்' என்ற தலைப்பில், பெற்றோர் ஆசிரியர் கூட்டத்தில் பேசுவதற்கான உரைக்குறிப்பு ஒன்றை உருவாக்குக. *(குறிப்பு - சுற்றுச்சூழல் மாசுபடுவதைத் தடுக்கச் சட்டங்கள் இயற்றப்பட்டிருந்தாலும், ஒவ்வொருவரின் உள்ளத்திலும் ஏற்படும் மாற்றமே சுற்றுச்சூழலைப் பாதுகாக்கும்)***

- ❋ அறம் என்றால் ஒழுக்கம் எனப் பொருள்படும். *உ
- ❋ மாசுபாடு நிறைந்த இவ்வுலகில் சுற்றுச்சூழலைப் பேணுவதும் அதிகம் தேவைப்படும் ஓர் அறவுணர்வு ஆகும்.
- ❋ வீட்டையும் நாட்டையும் தூய்மையாக வைத்திருத்தல்.
- ❋ சுற்றுச்சூழலுக்கு அடித்தளமான காடுகளையும், காட்டு விலங்குகளையும் பாதுகாத்தல்.
- ❋ ஆறு மற்றும் குளங்களை முறையாக பராமரித்தல்.
- ❋ குப்பைகளைச் சுத்தம் செய்து குப்பைத்தொட்டியில் போடுதல்.
- ❋ வாகன இயக்கக் கட்டுப்பாடு மற்றும் மாசுக் கட்டுப்பாட்டு விதிகளை கடைப்பிடிக்க வலியுறுத்தல்.
- ❋ தொழிற்சாலைக் கழிவு மறுசுழற்சி மற்றும் நெகிழிப்பொருட்களின் தீமைகளை விவரித்தல்.
- ❋ அரசு சட்டங்கள் இயற்றினாலும் தனிமனித மாற்றமே சுற்றுச்சூழலைப் பாதுகாக்கும்.

*சுற்றுச்சூழலைக் காப்போம், சுகமாக வாழ்வோம்!*

**4. வாளித் தண்ணீர், சாயக் குவளை, கந்தைத் துணி, கட்டைத் தூரிகை - இச்சொற்களைத் தொடர்புபடுத்தி ஒரு பத்தி அமைக்க.** *செ-1 *[PTA – 2]*

எங்கள் பள்ளியில் நாட்டு நலப்பணித்திட்ட முகாம் நடைபெற்றது. அப்போது பள்ளியைத் தூய்மைப்படுத்தும் பணியில் நாங்கள் ஈடுபட்டோம். நான் **கந்தைத் துணி** கொண்டு சன்னல் கம்பிகளைத் துடைத்து சுத்தம் செய்தேன். பிறகு நண்பர்கள் **சாயக் குவளையில்** வெள்ளை சுண்ணாம்பைச் சுடுநீரில் கரைத்து எடுத்து வந்தனர். **கட்டைத் தூரிகை** கொண்டு சுவற்றுக்கு வெள்ளையடித்தோம். சுண்ணாம்புத் துளிகள் தரையில் சிந்தியிருந்தன. அதனை **வாளித் தண்ணீர்** எடுத்து வந்து துடைப்பத்தால் வகுப்பறைகளின் தரைப்பகுதியைக் கழுவிச் சுத்தம் செய்தேன்.

## கூடுதல் வினாக்கள்

**5. கீழ்க்கண்ட குறட்பாக்களுக்கு அலகிட்டு வாய்பாடு தருக.** *இ

**1. நாள்தொறும் நாடி முறைசெய்யா மன்னவன் நாள்தொறும் நாடு கெடும்** **[APR-23]**

| சீர் | அசை | வாய்பாடு |
|---|---|---|
| நாள்/தொறும் | நேர் நிரை | கூவிளம் |
| நா/டி | நேர் நேர் | தேமா |
| முறை/செய்/யா | நிரை நேர் நேர் | புளிமாங்காய் |
| மன்/னவன் | நேர் நிரை | கூவிளம் |
| நாள்/தொறும் | நேர் நிரை | கூவிளம் |
| நா/டு | நேர் நேர் | தேமா |
| கெடும் | நிரை | மலர் |

இக்குறட்பா 'மலர்' என்னும் வாய்பாடுடன் முடிந்துள்ளது.

**2. கருவியும் காலமும் செய்கையும் செய்யும் அருவினையும் மாண்ட தமைச்சு** **[MAY-22]**

| சீர் | அசை | வாய்பாடு |
|---|---|---|
| கரு/வியும் | நிரை நிரை | கருவிளம் |
| கா/லமும் | நேர் நிரை | கூவிளம் |
| செய்/கை/யும் | நேர் நேர் நேர் | தேமாங்காய் |
| செய்/யும் | நேர் நேர் | தேமா |
| அரு/வினை/யும் | நிரை நிரை நேர் | கருவிளங்காய் |
| மாண்/ட | நேர் நேர் | தேமா |
| தமைச்சு | நிரைபு | பிறப்பு |

இக்குறட்பா 'பிறப்பு' என்னும் வாய்பாடுடன் முடிந்துள்ளது.

**3. செயற்கை அறிந்தக் கடைத்தும் உலகத்
தியற்கை அறிந்து செயல் [SEP – 2021]**

| சீர் | அசை | வாய்பாடு |
|---|---|---|
| செயற்/கை | நிரை நேர் | புளிமா |
| அறிந்/தக் | நிரை நேர் | புளிமா |
| கடைத்/தும் | நிரை நேர் | புளிமா |
| உல/கத் | நிரை நேர் | புளிமா |
| தியற்/கை | நிரை நேர் | புளிமா |
| அறிந்/து | நிரை நேர் | புளிமா |
| செயல் | நிரை | மலர் |

இக்குறட்பா 'மலர்' என்னும் வாய்பாடுடன் முடிந்துள்ளது.

**4. அரியவற்றுள் எல்லாம் அரிதே பெரியாரைப்
பேணித் தமராக் கொளல் [PTA - 1]**

| சீர் | அசை | வாய்பாடு |
|---|---|---|
| அரி/யவற்/றுள் | நிரை நிரை நேர் | கருவிளங்காய் |
| எல்/லாம் | நேர் நேர் | தேமா |
| அரி/தே | நிரை நேர் | புளிமா |
| பெரி/யா/ரைப் | நிரை நேர் நேர் | புளிமாங்காய் |
| பே/ணித் | நேர் நேர் | தேமா |
| தம/ராக் | நிரை நேர் | புளிமா |
| கொளல் | நிரை | மலர் |

இக்குறட்பா 'மலர்' என்னும் வாய்பாடுடன் முடிந்துள்ளது.

**5. "வன்கண் குடிகாத்தல் கற்றறிதல் ஆள்வினையோ
டைந்துடன் மாண்ட தமைச்சு" [PTA - 2]**

| சீர் | அசை | வாய்பாடு |
|---|---|---|
| வன்/கண் | நேர் நேர் | தேமா |
| குடி/காத்/தல் | நிரை நேர் நேர் | புளிமாங்காய் |
| கற்/றறி/தல் | நேர் நிரை நேர் | கூவிளங்காய் |
| ஆள்/வினை/யோ | நேர் நிரை நேர் | கூவிளங்காய் |
| டைந்/துடன் | நேர் நிரை | கூவிளம் |
| மாண்/ட | நேர் நேர் | தேமா |
| தமைச்சு | நிரைபு | பிறப்பு |

இக்குறட்பா 'பிறப்பு' என்னும் வாய்பாடுடன் முடிந்துள்ளது.

**6. "தொழுதகை யுள்ளும் படையொடுங்கும் ஒன்னார
அழுதகண் ணீரும் அனைத்து" [PTA-3, SEP-20]**

| சீர் | அசை | வாய்பாடு |
|---|---|---|
| தொழு/தகை | நிரை நிரை | கருவிளம் |
| யுள்/ளும் | நேர் நேர் | தேமா |
| படை/யொடுங்/கும் | நிரை நிரை நேர் | கருவிளங்காய் |
| ஒன்/னார் | நேர் நேர் | தேமா |
| அழு/தகண் | நிரை நிரை | கருவிளம் |
| ணீ/ரும் | நேர் நேர் | தேமா |
| அனைத்து | நிரைபு | பிறப்பு |

இக்குறட்பா 'பிறப்பு' என்னும் வாய்பாடுடன் முடிந்துள்ளது.

**7. "ஊழையும் உப்பக்கம் காண்பர் உலைவின்றித்
தாழா துஞற்று பவர்" [PTA - 4]**

| சீர் | அசை | வாய்பாடு |
|---|---|---|
| ஊ/ழை/யும் | நேர் நேர் நேர் | தேமாங்காய் |
| உப்/பக் கம் | நேர் நேர் நேர் | தேமாங்காய் |
| காண்/பர் | நேர் நேர் | தேமா |
| உலை/வின்/றித் | நிரை நேர் நேர் | புளிமாங்காய் |
| தா/ழா | நேர் நேர் | தேமா |
| துஞற்/று | நிரை நேர் | புளிமா |
| பவர் | நிரை | மலர் |

இக்குறட்பா 'மலர்' என்னும் வாய்பாடுடன் முடிந்துள்ளது.

**8. "உலகத்தோ டொட்ட வொழுகல் பலகற்றும்
கல்லார் அறிவிலா தார்"[TB][PTA-5, AUG-22]**

| சீர் | அசை | வாய்பாடு |
|---|---|---|
| உல/கத்/தோ | நிரை நேர் நேர் | புளிமாங்காய் |
| டொட்/ட | நேர் நேர் | தேமா |
| வொழு/கல் | நிரை நேர் | புளிமா |
| பல/கற்/றும் | நிரை நேர் நேர் | புளிமாங்காய் |
| கல்/லார் | நேர் நேர் | தேமா |
| அறி/விலா | நிரை நிரை | கருவிளம் |
| தார் | நேர் | நாள் |

இக்குறட்பா 'நாள்' என்னும் வாய்பாடுடன் முடிந்துள்ளது.

**9. "பண்என்னாம் பாடற் கியைபின்றேல் கண்என்னாம்
கண்ணோட்டம் இல்லாத கண்" [PTA - 6]**

| சீர் | அசை | வாய்பாடு |
|---|---|---|
| பண்/என்/னாம் | நேர் நேர் நேர் | தேமாங்காய் |
| பா/டற் | நேர் நேர் | தேமா |
| கியை/பின்/றேல் | நிரை நேர் நேர் | புளிமாங்காய் |
| கண்/என்/னாம் | நேர் நேர் நேர் | தேமாங்காய் |
| கண்/ணோட்/டம் | நேர் நேர் நேர் | தேமாங்காய் |
| இல்/லா/த | நேர் நேர் நேர் | தேமாங்காய் |
| கண் | நேர் | நாள் |

இக்குறட்பா 'நாள்' என்னும் வாய்பாடுடன் முடிந்துள்ளது.

**10. "பொருளல் லவரைப் பொருளாகச் செய்யும்
பொருளல்ல தில்லை பொருள்" [MDL-19]**

| சீர் | அசை | வாய்பாடு |
|---|---|---|
| பொரு/ளல் | நிரை நேர் | புளிமா |
| லவ/ரைப் | நிரை நேர் | புளிமா |
| பொரு/ளா/கச் | நிரை நேர் நேர் | புளிமாங்காய் |
| செய்/யும் | நேர் நேர் | தேமா |
| பொரு/ளல்/ல | நிரை நேர் நேர் | புளிமாங்காய் |
| தில்/லை | நேர் நேர் | தேமா |
| பொருள் | நிரை | மலர் |

இக்குறட்பா 'மலர்' என்னும் வாய்பாடுடன் முடிந்துள்ளது.

இயல் - 8

## நெடுவினா

**1. பள்ளித்திடலில் கிடைத்த பணப்பையை உரியவரிடம் ஒப்படைத்ததையும் அதற்குப் பாராட்டுப் பெற்றதையும் பற்றி வெளியூரில் இருக்கும் உறவினர் ஒருவருக்குக் கடிதம் எழுதுக.** *உ *[APR – 2023, AUG -2022, PTA – 6]*

*** * விடை பக்க எண் : 153 காண்க* ***

**2. காலக்கணிதம் கவிதையில் பொதிந்துள்ள நயங்களைப் பாராட்டி எழுதுக.** *செ-2 *[SEP – 2021, PTA – 5]*

*கவிஞன் யானோர் காலக் கணிதம்*
*கருப்படு பொருளை உருப்பட வைப்பேன்!*
*புவியில் நானோர் புகழுடைத் தெய்வம்*
*பொன்னினும் விலைமிகு பொருளென் செல்வம்!*
*இவைசரி யென்றால் இயம்புவதென் தொழில்*
*இவைதவ றாயின் எதிர்ப்பதென் வேலை!*
*ஆக்கல் அளித்தல் அழித்தல்இம் மூன்றும்*
*அவனும் யானுமே அறிந்தவை; அறிக!* - **கண்ணதாசன்**

**குறிப்புச்சட்டகம்**
- ❋ முன்னுரை
- ❋ திரண்ட கருத்து
- ❋ மைய கருத்து
- ❋ தொடை நயங்கள்
- ❋ அணி நயம்
- ❋ முடிவுரை

**முன்னுரை**

கவிஞர் கண்ணதாசன் பாமர மக்களுக்கும் தமிழ் இலக்கியங்களை எளிய மொழியில் கொண்டு சேர்த்தவர். நம் பாடப்பகுதியில் இடம் பெற்றுள்ள காலக்கணிதம் என்ற கவிதையில் கையாண்டுள்ள நயங்கள் பற்றிப் பின்வருமாறு விரிவாகக் காணலாம்.

**திரண்ட கருத்து :**

வாழைக்கு அழகு குருத்து
பாடலுக்கு அழகு கருத்து

கவிஞனாகிய நான் ஓர் காலக்கணிதம் ஆவேன். பொருள் பொதிந்த பாடல்களை நான் உருவாக்குவேன். பொன்னைவிட விலை மதிப்புடையது என் கவிச்செல்வம். எவையெல்லாம் சரியோ அதைச் சொல்வது என் தொழில். எவையெல்லாம் தவறோ அதை எதிர்ப்பது என் வேலை. ஆக்கல், அளித்தல், அழித்தல் ஆகிய முத்தொழில்களும் கடவுளும் நானும் மட்டுமே உணர்ந்தவை. காலத்திற்கேற்ப மாற்றம் பெற்றுக்கொண்டே இருப்பவன் நான் என்று கவிஞர் உரைக்கிறார்.

**மையக்கருத்து :**

கவிஞன் என்பவர் உண்மைப்பொருளை உருவாக்கும் காலக்கணிதம் ஆவார்.

**தொடை நயங்கள் :**

தொடையற்ற பாட்டு நடையற்றுப் போகும்

என்பதற்கு ஏற்பத் தொடைநயங்கள் அமையப் பாடல் தொகுக்கப்பட்டுள்ளது.

✷ **மோனை நயம் :**

குயவனின் கைவண்ணம் பானையிலே
புலவனின் கைவண்ணம் மோனையிலே

❋ சீர்தோறும் அல்லது அடிதோறும் முதல் எழுத்து ஒன்றிவரத் தொடுப்பது மோனை நயமாகும்.

❋ **எ.கா :** ♣ **அடி மோனை** - **க**விஞன் - **க**ருப்படு; **பு**வியில் - **பொ**ன்னினும்
**இ**வைசரி - **இ**வைதவறாயின்; **ஆ**க்கல் - **அ**வனும்

♣ **சீர் மோனை** - **க**விஞன் - **கா**லக்கணிதம்; **பு**வியில் - **பு**கழுடை
**பொ**ன்னினும் - **பொ**ருளென்; **இ**வைசரி - **இ**யம்புவதென்
**ஆ**க்கல்- **அ**ளித்தல் - **அ**ழித்தல்; **அ**வனும் - **அ**றிந்தவை - **அ**றிக

✷ **எதுகை நயம் :**

பாடலுக்கு எது கைகொடுக்காவிட்டாலும்
எதுகை கைக்கொடுக்கும்

❋ செய்யுளில் சீர்தோறும், அல்லது அடிதோறும் முதலெழுத்து அளவொத்து நிற்க இரண்டாம் எழுத்து ஒன்றிவரத்தொடுப்பது எதுகை நயமாகும்.

❋ **எ.கா : சீர் எதுகை :** க**ரு**ப்படு - பொ**ரு**ளை - உ**ரு**ப்பட; அ**றி**ந்தவை - அ**றி**க

**அடி எதுகை:** இ**வை**சரி - இ**வை**தவறாயின்

✷ **முரண் தொடை :**

கோட்டைக்கு அழகு அரண்
பாடலுக்கு அழகு முரண்

✷ செய்யுளில் மாறுபட்ட எதிரான சொல்லும் பொருளும் அமைந்து வருவது முரண் தொடை.

✷ ***எ.கா :*** சரி × தவறு, ஆக்கல் × அழித்தல்

**அணி நயம் :**

கோயிலுக்கு அழகு மணி
பாடலுக்கு அழகு அணி

♣ **உருவக அணி:** கவிஞர் தன்னைக் காலமாகிய கணிதம், புகழுடைத் தெய்வம் என்கிறார்.

♣ **உயர்வு நவிற்சி அணி:** உள்ளதை உள்ளவாறு கூறாமல் பொன்னினும் விலைமிகு பொருளெண்செல்வம் என்று தன்னை உயர்த்திப் பாடியுள்ளதால் 'உயர்வு நவிற்சி அணி' பயின்று வந்துள்ளது.

**முடிவுரை**

கண்ணதாசன் திரைப்படப் பாடல்களில் மட்டும் முத்திரையைப் பதிக்கவில்லை. தனிக்கவிதைகளிலும், புதினங்களிலும் தன் சொல்லாற்றலையும் கற்பனைத்திறனையும் வெளிக்கொண்டு வந்துள்ளார். அவருடைய திரைப்படப்பாடல்கள் காலத்தால் அழியாதவை. இக்கவிதை அதற்கு சான்றாகும்.

**3. குறிப்புகளைக் கொண்டு ஒரு பக்க அளவில் நாடகம் எழுதுக.** *து *[PTA - 6]*

**மாணவன் – கொக்கைப் போல, கோழியைப் போல – உப்பைப் போல – இருக்க வேண்டும் – கொக்கு காத்திருந்து கிடைக்கும் வாய்ப்பைப் பயன்படுத்திக்கொள்ளும் – குப்பையைக் கிளறினாலும் தனது உணவை மட்டுமே எடுத்துக்கொள்ளும் கோழி – கண்ணுக்குத் தெரியாவிட்டாலும் உப்பின் சுவையை உணரமுடியும் – ஆசிரியர் விளக்கம் – மாணவன் மகிழ்ச்சி.**

**மாணவர்கள் :** வணக்கம் ஐயா!

**தமிழாசிரியர்:** வணக்கம் மாணவர்களே! அமருங்கள். இன்று நான் உங்கள் வாழ்க்கைகான சில அறிவுரைகளைக் கூறப்போகிறேன்.

**மாணவர்கள் :** கூறுங்கள் ஐயா! ஆர்வமுடன் உள்ளோம்!

**தமிழாசிரியர்:** ஒவ்வொரு மாணவனும் கொக்கைப்போல, கோழியைப்போல, உப்பைப்போல இருக்க வேண்டும்!

**எழிலன் :** புரியவில்லையே ஐயா! கொக்கைப் போல மாணவன் ஒற்றைக் காலில் நிற்க வேண்டுமா?

**தமிழாசிரியர்:** (சிரித்தபடி) எழிலன் நான் கூறியது கொக்கைப் போன்று நிற்பதை அல்ல! அதன் உணர்வைக் கொண்டிருக்க வேண்டும் எனக்கூறினேன். அதாவது நீர்நிலைகளில் கொக்கு தனக்கான இரை கிடைக்கும் வரை நிதானமாகக் காத்திருந்து மீன்கள் வந்தவுடன் குறிவைத்து பிடிக்கும். அதுபோல, ஒரு மாணவன் தன்னுடைய லட்சியத்தை அடைவதில் கவனமாகவும், குறிக்கோளுடனும் இருக்க வேண்டும். புரிகிறதா மாணவர்களே?

**அமுதன் :** நன்றாகப் புரிகிறது ஐயா! கோழியைப்போல் எப்படி ஐயா இருக்க முடியும்?

**தமிழாசிரியர்:** கோழி என்ன செய்யும்? உணவிற்காகக் குப்பையைக் கிளறும். ஆனால், அந்தக் குப்பைகளை விட்டுவிட்டு தனக்குத் தேவையான உணவை மட்டும் எடுத்துக்கொள்ளும். அதுபோல, மாணவர்கள், தாம் சந்திக்கும் தீமைகளைத் தூரமாகத் தள்ளி, நன்மைகளை மட்டும் எடுத்துக்கொள்ள வேண்டும்.

**வளவன் :** மிகவும் அருமையாக கூறுகிறீர்கள் ஐயா! அதுபோல உப்பைப்போல பயனுள்ளதாக இருக்க வேண்டும் சரிதானே ஐயா?

**தமிழாசிரியர்:** உப்பு நம் கையில் இருக்கும்போது தெரியும். அதே ஏதேனும் ஒரு பொருளோடு கலந்துவிட்டால் தெரியுமா?

**மாணவர்கள்:** தெரியாது ஐயா!

**தமிழாசிரியர்:** மிகவும் சரி. உப்பின் சுவையைத் தனியாக நம்மால் அறிய முடியுமா?

**மாணவர்கள்:** அறிய முடியும் ஐயா!

**தமிழாசிரியர்:** உப்பை எந்த உணவோடு கலக்கினாலும், அது இருக்கிறது என்று கூற முடியும். ஆனால், அது கண்ணுக்குத் தெரியாது. அதுபோல மாணவர்கள் எந்தத் துறையில் இயங்கினாலும் அதில் தனது தனித்தன்மையை வெளிப்படுத்த வேண்டும். என்ன மாணவர்களே இன்று நான் கூறிய அறிவுரைகள் எப்படி இருந்தன? உங்கள் கருத்துகளைக் கூறுங்கள்?

**அமுதன்** : ஐயா! நீங்கள் ஆரம்பத்தில் "கொக்கைப்போல, கோழியைப்போல, உப்பைப்போல" எனக் கூறும்போது ஒன்றும் புரியவில்லை. ஆனால் இப்பொழுது நன்றாகப் புரிந்தது ஐயா! நீங்கள் கூறிய கருத்துகளை எங்கள் வாழ்க்கையில் நிச்சயம் கடைப்பிடித்து வாழ்வில் நல்ல நிலையை அடைந்து உங்களுக்குப் புகழ் சேர்ப்போம்!

(மாணவர்கள் அனைவரும் மகிழ்ச்சியில் கரவொலி எழுப்பி நன்றி கூறினர்.)

## கூடுதல் வினாக்கள்

**4. இராமானுசர் நாடகத்தில் வெளிப்படும் மனித நேயத்தை விவரிக்கவும். / இராமானுசர் நாடகத்தினைச் சுருக்கி கதையாய் எழுதுக.** *து *[AUG – 2022, SEP – 2021]*

**முன்னுரை :**

இறைவனை வழிபடுவதற்கு அறிவு வழியை விட இதய வழியே சிறந்தது என எண்ணிய இராமானுசர் தான் பெற்ற நலத்தை தானே வைத்துக்கொள்ள வேண்டும் என எண்ணாமல் தன்னலமற்ற பண்பு கொண்டு அவர்களது பிறவிப் பிணி நீங்க வழி செய்தார். இராமானுசரின் மனித நேயத்தைப் பற்றி இங்கு சுருக்கமாக பார்ப்போம்.

**தண்டும் கொடியுமாக :**

'திருமந்திரத் திருவருள் பெறத் தண்டும், கொடியுமாக இராமானுசரை வரச் சொல்லுங்கள்' என்று பூரணர் திருவரங்கத்திற்கு செய்தி அனுப்புகிறார். அதனால் இராமானுசர், திருவருளை பெற விரும்பும் கூரேசர், முதலியாண்டான் ஆகிய இருவரையும் தம்மோடு அழைத்துக்கொண்டு பூரணர் இல்லத்திற்கு வந்தார். அவர்களைக் கண்ட பூரணர் கோபம் கொண்டு "அம்மந்திரத்தை கூற உம்மை மட்டும் தானே அழைத்தேன், நீ உறவுகளுடன் ஏன் வந்தாய்?" என வினவினார். அதற்கு இராமானுசர் "தாங்கள் கூறிய தண்டு, கொடிக்கு இணையானவர்கள் இவர்கள். எனவே, கோபம் கொள்ளாது பரிவு கொண்டு திருவருள் புரிய வேண்டும்" என்று வேண்டினார்.

**குருவின் கட்டளை :**

பூரணர் மூவரையும் வீட்டிற்குள் அழைத்து "நான் கூறப் போகும் திருமந்திர மறைப் பொருள்கள் உங்கள் மூவருக்கு மட்டுமே தெரிய வேண்டும். வேறு யாரிடமாவது இதைக் கூறினால் அது ஆசிரியர் கட்டளையை மீறியதாகும். அப்படி நடந்தால் அதற்குத் தண்டனையாக நரகமே கிட்டும்" என்று திருமந்திரத்தை கூறினார். "திருமகளுடன் கூடிய நாராயணனின் திருப்பாதங்களைப் புகலிடமாகக் கொள்கிறேன். திருவுடன் சேர்ந்த நாராயணனை வணங்குகிறேன்" என்று பூரணர் கூறிய திருமந்திரத்தை மூவரும் மூன்று முறை உரக்கச் சொல்லி விடைப்பெற்றார்கள்.

**திருமந்திரத்தை மக்களுக்கு உரைத்தல் :**

திருக்கோட்டியூர் சௌம்ய நாராயணன் திருக்கோவிலின் மதில் சுவரின் மேல் இராமானுசர் நின்று கொண்டு, உரத்த குரலில் பேசத் தொடங்கினார். "கிடைப்பதற்குரிய பிறவிப்பிணியைத் தீர்க்கும் அருமருந்தான திருமந்திரத்தை உங்களுக்குக் கூறுகிறேன். அனைவரும் இணைந்து மந்திரத்தைச் சொல்லுங்கள்" என்று அவர் திருமந்திரத்தை சொல்லச் சொல்ல அனைவரும் உரத்த குரலில் மூன்று முறை கூறினார்கள்.

**குருவின் கோபமும் ஆசியும் :**

குருவின் சொல்லை மீறியதற்காக கோபம் கொண்டு பூரணர் இராமானுசரை கேட்டதற்கு "கிடைப்பதற்குரிய மந்திரத்தைத் தங்களின் திருவருளால் நான் பெற்றேன். அந்த திருமந்திரத்தை அனைவருக்கும் கூறினால் துன்பத்தில் உழன்று பேதை வாழ்வு வாழ்ந்து வரும் பல்லாயிரக்கணக்கான மக்கள் தங்களின் பிறவிப்பிணி நீங்கி பேறு பெறுவார்கள்" என்று கூறினார். இராமானுசரின் பரந்த மனதைக் கண்ட பூரணர், அவரை மன்னித்து இறைவனின் ஆசி பெற அவரை வாழ்த்தினார். இராமானுசத்திற்குத் தன் மகன் சௌம்ய நாராயணனை அடைக்கலமாக அளித்தார்.

**முடிவுரை :**

'நான் மட்டும் தண்டனைப்பெற்று நரகத்தைச் சேர்வேன். ஆனால் என் மக்கள் அனைவர்க்கும் நலம் கிட்டும். எல்லாரும் நலமுடன் வாழ்வார்கள்' என்ற இராமனுசரின் செயலில் இருந்து பிறருக்காக நரகமும் செல்லத் துணிந்த அவரின் தன்னலமற்ற மனிதநேயப் பண்பானது வெளிப்படுகிறது.

**5. 'என் மக்கள் அனைவர்க்கும் நலம் கிட்டும் எல்லாரும் நலமுடன் வாழ்வார்கள்' – என்ற இராமானுசரின் கூற்றுக்கு ஏற்ப தன்னமலற்ற பண்புகளைக் கொண்டவர்களாக நாம் வாழ வேண்டும் என்பதை நீங்கள் அறிந்த எடுத்துக்காட்டுகளுடன் விளக்குக.** *து *[PTA - 4]*

**முன்னுரை**

'என் மக்கள் அனைவருக்கும் நலம் கிட்டும். எல்லாரும் நலமுடன் வாழ்வார்கள்' என்ற இராமானுசரின் கூற்றுக்கு இணங்க பல மனிதர்கள் இங்கு வாழ்ந்து காட்டி உள்ளனர். அதில் யாம் அறிந்த மாமனிதர்களை பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

**காமராசர் :**

பெருந்தலைவர், கருப்பு காந்தி என்று எல்லோராலும் அன்புடன் அழைக்கப்படும் காமராசர் ஒரு தன்னலமற்ற தலைவர். ஏழை மாணவர்களின் பசியை போக்கி அனைவருக்கும் இலவச கல்வியை வழங்கினார். தமிழகத்தில் தொழில் புரட்சி ஏற்பட காரணமாக இருந்தவர் காமராசர். தனக்காகவும் தன் குடும்பத்தினருக்காகவும் எந்த ஒரு அரசாங்க சலுகைகளையும் பயன்படுத்திக் கொள்ளாதவர். ஒரு முறை காமராசரும், நேருவும் மகிழுந்தில் சென்ற போது சாலையில் ஓரமாக நின்ற மூதாட்டியை யார் என்று நேரு கேட்க 'என் தாய்தான்' என்று கூறியிருக்கிறார். இவ்வாறு, மக்களோடு மக்களாக வாழ்ந்தவர் 'மக்கள் தலைவர்' காமராசர். அவர் இறப்புக்குப் பின் அவரிடம் இருந்தது சில கதர் வேட்டி, சட்டைகள் மற்றும் 150 ரூபாய் பணம் மட்டுமே.

**ஏ.பி.ஜே. அப்துல் கலாம் :**

'எதிர்கால இந்தியா இளைஞர்கள் கையில்' என்றும் 'கனவு காணுங்கள் அந்த கனவை நினைவாக்க பாடுபடுங்கள்' என்றும் கூறினார் அப்துல் கலாம். நாம் அனைவரும் அறிந்த விஞ்ஞானி தன் கல்வியும், அறிவும் பணம் சம்பாதிக்கும் கருவி அல்ல, அதை தன் தாய்நாட்டின் முன்னேற்றத்திற்காக மட்டுமே பயன்படுத்துவேன் என்றும் உறுதியேற்றவர். நீங்கள் ஏன் திருமணம் செய்து கொள்ளவில்லை என்கிற கேள்வியை பலமுறை எதிர்கொண்டுள்ளார் கலாம்.

**அதற்கு அவரின் பதில் :** திருமணம் என் கனவுகள் மற்றும் இலட்சியத்தை சிதைத்துவிடும் என்றார். இவ்வாறு அணுசக்தி, ஏவுகணை திட்டங்களில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக்கொண்டு நாட்டின் விஞ்ஞான வளர்ச்சிக்காக அயராது பாடுபட்டார். ஒருமுறை ஏவுகணை சோதனையின் போது அதன் வெற்றிக்காக தன் இந்து, கிறிஸ்துவ நண்பர்களுடன் சேர்ந்து கூட்டு பிரார்த்தனை செய்தார். இதிலிருந்து, அவர் மதச்சார்பற்ற தலைவர் என்பது வெளிப்படுகிறது.

**அன்னை தெரசா :**

'அன்னை தெரசா' எனும் பெயரை 'அன்னை' என்னும் சொல் இல்லாமல் யாரும் சொல்வதில்லை. அந்தளவிற்கு அவர் நம் மனதில் வாழ்ந்து கொண்டே இருக்கிறார். தன் வாழ்க்கை முழுவதுமே மக்கள் பணிக்காக அர்ப்பணித்தவர். அதிலும் ஆதரவற்றவர்கள், நோயாளிகள், குழந்தைகள் என அனைவருக்காகவும் தொண்டு புரிந்து வந்தார்.

பொறுமையின் மறு உருவம் என்னும் தெரசாவிற்கு ஒருமுறை, ரொட்டி கடைக்காரர் ஒருவர் கொடுத்த பரிசும், அதை அன்னை தெரசா கையாண்ட விதமும் உலக மக்களின் நெஞ்சை உலுக்கியது. போரின் முனையில் சிக்கிய 37 குழந்தைகளை மீட்ட தெரசா, அவர்களுக்கு உணவு வேண்டி ரொட்டி கடையில் யாசகம் கேட்டு நின்றார். அப்பொழுது கடை உரிமையாளர் தெரசாவின் கையில் உமிழ்ந்தார். அதையும் பொறுத்த தெரசா, 'இது எனக்கு இருக்கட்டும், என் குழந்தைகளுக்கு உணவு கொடுங்கள்' என்று தன் பொறுமை குணம் மாறாது வேண்டி நின்றார்.

**முடிவுரை**

'என் மக்கள் அனைவர்க்கும் நலம் கிட்டும் எல்லாரும் நலமுடன் வாழ்வார்கள்' என்ற இராமானுசரின் கூற்றுக்கு ஏற்ப இதுபோன்ற தன்னமலற்ற பண்புகளைக் கொண்டவர்களாக பலர் நம் தாய்திருநாட்டில் உள்ளனர். அவர்களை போல் இருக்க இயலாது போனாலும் அனைவரிடமும் அன்பு செலுத்தவாவது கற்று கொள்ள வேண்டும்.

"அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு".

# 9. அன்பின் மொழி



## பலவுள் தெரிக

1. "பிரிந்தன புள்ளின் __கானில்__
பெரிதழுது இரங்கித் __தேம்ப__" பாடலடிகளில் அடிக்கோடிட்ட சொற்களின் பொருளைத் தெரிவு செய்க.
அ) கிளை, துளை ஆ) நிலம், வாட **இ) காடு, வாட** ஈ) காடு, நிலம் *செ-2
2. சுதந்திர இந்தியாவின் மகத்தான சாதனையும் சவாலுமாக ஜெயகாந்தன் கருதுவது
அ) அரசின் நலத்திட்டங்களைச் செயல்படுத்தல் *உ *[MAY - 22, PTA - 5]*
**ஆ) பெற்ற சுதந்திரத்தைப் பேணிக் காத்தல்**
இ) அறிவியல் முன்னேற்றம்
ஈ) வெளிநாட்டு முதலீடுகள்
3. பூக்கையைக் குவித்துப் பூவே புரிவொடு காக்க என்று _______ வேண்டினார். *செ-2 *[APR - 2023]*
**அ) கருணையன், எலிசபெத்துக்காக** ஆ) எலிசபெத், தமக்காக
இ) கருணையன், பூக்களுக்காக ஈ) எலிசபெத், பூமிக்காக
4. வாய்மையே மழைநீராகி - இத்தொடரில் வெளிப்படும் அணி *இ *[AUG - 22, PTA - 4, MDL – 19]*
அ) உவமை ஆ) தற்குறிப்பேற்றம் **இ) உருவகம்** ஈ) தீவகம்
5. கலையின் கணவனாகவும் சமுதாயத்தின் புதல்வனாகவும் இருந்து எழுதுகிறேன் - இக்கூற்றிலிருந்து நாம் புரிந்துகொள்வது : *உ *[SEP - 20, PTA - 2]*
அ) தம் வாழ்க்கையில் பெற்ற விளைவுகளைக் கலையாக்கினார்
**ஆ) சமூகப் பார்வையோடு கலைப்பணி புரியவே எழுதினார்**
இ) அறத்தைக் கூறுவதற்காக எழுதினார்
ஈ) அழகியலுடன் இலக்கியம் படைத்தார்

## கூடுதல் வினா

6. "இவள் தலையில் எழுதியதோ
கற்காலம்தான் எப்போதும் …" - இவ்வடிகளில் கற்காலம் என்பது *செ-1 *[PTA - 2]*
அ) தலைவிதி ஆ) பழைய காலம் இ) ஏழ்மை **ஈ) தலையில் கல் சுமப்பது**
7. கருணையன் என்பவர் யார்? *செ-2 *[PTA - 1]*
அ) முனிவன் ஆ) வீரமாமுனிவர் **இ) அருளப்பன்** ஈ) இராயப்பன்

## குறுவினா

**1. தீவக அணியின் வகைகள் யாவை?** *இ *[PTA - 1, 5]*
1. முதல் நிலைத் தீவகம் 2. இடைநிலைத் தீவகம் 3. கடைநிலைத் தீவகம்

**2. நான் எழுதுவதற்கு ஒரு தூண்டுதலும் அதற்குரிய காரணமும் உண்டு - இத்தொடரை இரு தொடர்களாக்குக.**
❋ நான் எழுதுவதற்கு ஒரு தூண்டுதல் உண்டு. *உ *[AUG - 2022]*
❋ நான் எழுதுவதற்குரிய காரணம் உண்டு.

**3. "காய்மணி யாகு முன்னர்க் காய்ந்தெனக் காய்ந்தேன்" - உவமை உணர்த்தும் கருத்து யாது?** *செ-1 *[PTA - 1]*
கருணையன் வளர்ந்து பெரிய மனிதனாவதற்கு முன்பாகவே அவனுடைய தாய் எலிசபெத் இறந்து போனதை நினைத்து, இளம்பயிர் முற்றி நெல்மணி ஆகும் முன் மழையில்லாமல் வாடிக் காய்வது போல அவன் வாடுவதை, மேற்கண்ட உவமை உணர்த்துகிறது.

**4. ‘அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை** *இ *[AUG -2022, PTA - 3]*

**பண்பும் பயனும் அது’ - இக்குறளில் பயின்று வந்துள்ள அணியின் இலக்கணம் யாது?**
**(அல்லது) நிரல் நிரை அணி என்றால் என்ன? சான்றுடன் விளக்குக.** *[SEP – 2020, PTA – 4]*

| | |
|---|---|
| **அணியின் பெயர்** | நிரல்நிறை அணி |
| **அணி பிரிப்பு** | நிரல் (வரிசை) + நிறை (நிறுத்தல்) |
| **அணி இலக்கணம்** | சொல்லையும் பொருளையும் வரிசையாக நிறுத்தி அவ்வரிசைப்படியே இணைத்துப் பொருள் கொள்வதே நிரல் நிறை அணி எனப்படும். |
| **சான்று** | “அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை<br>பண்பும் பயனும் அது.” |
| **பாடலின் விளக்கம்** | இல்வாழ்க்கை அன்பும் அறனும் உடையதாக விளங்குமானால், அதுவே அந்த வாழ்க்கையின் பண்பும் பயனும் ஆகும். |
| **அணிப் பொருத்தம்** | இக்குறளில் அன்பும் அறனும் என்ற சொற்களை வரிசையாக நிறுத்தி, பண்பும் பயனும் என்ற சொற்களை முறைப்படக் கூறியுள்ளதால் இது நிரல்நிறை அணியாகும். |

**5. ‘வாழ்வில் தலைக்கனம்’, ‘தலைக்கனமே வாழ்வு’ என்று நாகூர்ரூமி யாருடைய வாழ்வைக் குறித்துக் கூறுகிறார்?**

**வாழ்வில் தலைக்கனம் :** *செ-1



சில மனிதர்கள் வாழ்வில் செல்வம், புகழ், பதவி காரணமாக யாரையும் மதிப்பதில்லை. இவர்களை ‘**வாழ்வில் தலைக்கனம்**’ கொண்டவர்கள் என்கிறார் கவிஞர் நாகூர்ரூமி.

**தலைக்கனமே வாழ்வு :**



கட்டிட வேலையில் சித்தாளு தலையில் சுமைகளைச் சுமந்து செல்லும் வாழ்வை ‘**தலைக்கனமே வாழ்வு**’ என்கிறார் கவிஞர் நாகூர்ரூமி.

## கூடுதல் வினாக்கள்

**6. தேம்பாவணி – குறிப்பு வரைக.** *செ-2 *[AUG - 2022]*

- ✱ தேம்பா + அணி - வாடாத மாலை; தேன் + பா + அணி - தேன் போன்ற இனிய பாடல்களின் தொகுப்பு.
- ✱ கிறித்துவின் வளர்ப்புத் தந்தை சூசையப்பரை பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு பாடப்பட்ட நூல்.
- ✱ இப்பெருங்காப்பியம் 3 காண்டங்கள், 36 படலங்களை உள்ளடக்கி 3615 பாடல்களைக் கொண்டுள்ளது.

**7. ஜெயகாந்தனின், திரைப்படமான படைப்புகளை எழுதுக.** *உ *[SEP – 2021, AUG – 2022]*

- ✱ சில நேரங்களில் சில மனிதர்கள்
- ✱ ஒரு நடிகை நாடகம் பார்க்கிறாள்
- ✱ ஊருக்கு நூறுபேர்
- ✱ உன்னைப்போல் ஒருவன்
- ✱ யாருக்காக அழுதான்

## சிறுவினா

**1. ‘*சித்தாளின் மனச்சுமைகள்***

***செங்கற்கள் அறியாது*’ - இடஞ்சுட்டிப் பொருள் தருக.** *செ-1 *[APR – 2023, SEP - 2020]*
**(அல்லது) நாகூர்ரூமி வெளிப்படுத்தும் மனிதத்தை அவரது கவிதை வழியாகக் குறிப்பிடுக.** *[PTA - 6]*

| | |
|---|---|
| **இடம்** | **கவிஞர் நாகூர்ரூமி** எழுதிய **‘சித்தாளு’** கவிதையில் இவ்வரிகள் இடம் பெற்றுள்ளன. |
| **பொருள்** | சித்தாளு வேலை செய்யும் பெண்ணின் மனச்சுமைகளைச் செங்கற்களும் அறியாது. |
| **விளக்கம்** | ✱ அடுத்த வேளை உணவுக்காக, சித்தாள் வேலை செய்யும் பெண்ணுக்கு தன் தலையில் சுமக்கும் செங்கற்களின் சுமைகளைவிட அவளின் மனதில் சுமக்கும் வறுமை உள்ளிட்ட சுமைகள் ஏராளமானவை.<br>✱ இவ்வாறாக, சித்தாளின் மனச்சுமைகளை உயிரற்ற பொருள்களான செங்கற்கள் அறிவதில்லை.<br>✱ செத்தே போனாலும் சிறிதளவே சலனம் தான் ஏற்படுத்தும் என்று கூறுகிறார் கவிஞர். |

**2. ஜெயகாந்தன் தம் கதைமாந்தர்களின் சிறந்த கூறுகளைக் குறிப்பிடத் தவறுவதில்லை என்று அசோகமித்திரன் கூறுகிறார். இக்கூற்றை மெய்ப்பிக்கும் செயல் ஒன்றைத் 'தர்க்கத்திற்கு அப்பால்' கதை மாந்தர் வாயிலாக விளக்குக.**

➔ **கதை சுருக்கம்:** 'தர்க்கத்திற்கு அப்பால்' கதையில் வரும் கதாபாத்திரம் இரயில் பயணத்திற்குத் தேவையான பன்னிரண்டணாவை மட்டும் வைத்துக்கொண்டு மீதமுள்ள பணத்தைப் பிச்சைக்காரனுக்குப் போட்டுவிட்டார். அந்த தர்மம் எவ்வாறு அவரைக் காத்தது என்பதை மிக அழகாகக் கூறியுள்ளார் ஜெயகாந்தன்.

➔ **கதை மாந்தர் வாயிலாக மெய்ப்பிக்கும் சிறந்த கூறுகள் :** *உ *[PTA - 4, MDL - 19]*

* "வழக்கம்போல, 'தோல்வியே நிச்சயம்' என்ற மனப்பான்மையுடன் ஊருக்குப் போன நான், வழக்கத்துக்கு மாறாக அன்று தோற்றுப்போனேன். தோல்வி நிச்சயம் என்ற என் மனப்போக்கு தோற்றது." கதைமாந்தரின் வெற்றியைத் தோல்வியின் மூலம் வெளிப்படுத்தியுள்ளார் ஜெயகாந்தன்.
* "காசைத்தான் கடன் தரலாம், தருமத்தைத் தரமுடியுமா? தருமத்தை யாசித்துதான் பெறவேண்டும்" என்ற கூற்றில் கொடுத்த தருமத்தை திரும்ப பெறமுடியாமல், பயணம் தடைபட்டு தவிக்கும் கதைமாந்தரின் நிலையை ஜெயகாந்தன் மிக அழகாகக் காட்டியுள்ளார்.

இதன்மூலம் ஜெயகாந்தன் கதை மாந்தரின் மனப்போராட்டங்களைச் சித்தரிக்க தவறியதில்லை என கூறலாம்.

**3. எவையெல்லாம் அறியேன் என்று கருணையன் கூறுகிறார்?** *செ-2

* நான் உயிர் பிழைக்கும் வழி அறியேன்.
* அறிவினுக்குப் பொருந்தியவாறு உறுப்புகள் இயங்குதல் இல்லாத உடலின் தன்மையை அறியேன்.
* உடலுக்கு வேண்டிய உணவைத் தேடிக்கொண்டு வரும் வழிவகைகளை அறியேன்.
* காட்டில் செல்வதற்கான வழிகளையும் அறியேன் - என்று கருணையன் கூறுகிறார்.

**4. கவிஞர் தாம் கூறவிரும்பும் கருத்திற்கு ஏற்றவாறு தற்குறிப்பேற்ற அணி அமைவதை எடுத்துக்காட்டுக. (அல்லது) தற்குறிப்பேற்ற அணியைச் சான்றுடன் விவரி.** *இ *[SEP - 2021, PTA – 2]*

| | |
|---|---|
| **அணி இலக்கணம்** | இயல்பாய் நிகழும் நிகழ்ச்சியின் மீது கவிஞன் தன் குறிப்பை ஏற்றிக் கூறுவதே தற்குறிப்பேற்ற அணி ஆகும். |
| **சான்று** | *"போருழந் தெடுத்த ஆரெயில் நெடுங்கொடி<br>வாரல் என்பனபோல் மறித்துக்கை காட்ட"* |
| **பொருள்** | கோட்டை மதில்மேல் இருந்த கொடியானது 'வரவேண்டாம்' எனத் தடுப்பதுபோல கைகாட்டியது என்பது பொருள். |
| **அணிப் பொருத்தம்** | மதுரைக்கு கோவலனும் கண்ணகியும் சென்றபோது, மதிலின் மேலிருந்த கொடிகள் காற்றில் இயற்கையாக அசைந்தன. ஆனால், இளங்கோவடிகள், கோவலன் கொலை செய்யப்படுவான் என அக்கொடிகள் கையை அசைத்து, 'இம்மதுரைக்குள் வரவேண்டாம்' என்று தெரிவிப்பதுபோல அசைவதாகத் தம் குறிப்பைக் கொடியின் மீது ஏற்றிக் கூறுகிறார். இயல்பாக நிகழும் நிகழ்ச்சியின்மீது கவிஞன் தன் குறிப்பை ஏற்றிக் கூறுவதால், இது தற்குறிப்பேற்ற அணியாகும். |

## கூடுதல் வினாக்கள்

**5. எதற்காக எழுதுகிறேன்? என்று ஜெயகாந்தன் கூறிய காரணங்களைக் குறிப்பிடுக.** *உ *[PTA - 3]*

* நான் எழுதுவதற்கு ஒரு தூண்டுதலும் அதற்குரிய காரணமும் உண்டு.
* நான் எழுதுவது, வாழ்க்கையிலிருந்து நான் பெறும் கல்வியின் விளைவும், என் முயற்சியின் பயனுமாகும்.
* நமது அறியாமையால் அவஸ்தைகளுக்கு உள்ளாகி, பிறரையும் நமது அறியாமையால் அவஸ்தைக்கு உட்படுத்தாமல், சமூகப் பார்வையோடு கலைப்பணி புரியவே நான் எழுதுகிறேன்.

**6. தன்மையணி என்பதனை விளக்கி அதன் வகைகளைக் குறிப்பிடுக.** *இ *[PTA - 3]*

* **தன்மையணி விளக்கம்:** எவ்வகைப்பட்ட பொருளாக இருந்தாலும் இயற்கையில் அமைந்த அதன் உண்மையான இயல்புத் தன்மையினைக் கேட்பவர்களின் மனம் மகிழுமாறு உரிய சொற்களை அமைத்துப் பாடுவது தன்மையணியாகும். இதனைத் தன்மை நவிற்சி அணி என்றும் கூறுவர்.
* **வகைகள்:** பொருள் தன்மையணி, குணத்தன்மையணி, சாதித்தன்மையணி, தொழிற்தன்மையணி

**7. தீவக அணியை விளக்கி, அதன் வகைகளை எழுதுக.** *இ *[MAY – 2022, PTA - 6]*

* **தீவக அணி விளக்கம்:** செய்யுளின் ஓரிடத்தில் நின்ற ஒரு சொல் அச்செய்யுளின் பல இடங்களிலுள்ள சொற்களோடு சென்று பொருந்திப் பொருளை விளக்குவதால் இவ்வணி தீவக அணி எனப்படுகிறது.
* **வகைகள்:** 1) முதல் நிலைத் தீவகம் 2) இடைநிலைத் தீவகம் 3) கடைநிலைத் தீவகம்

**8. முன்னுரையில் முகம் காட்டும் ஜெயகாந்தன் - ஏன்?** *உ [PTA - 5]

- எழுத்தாளரின் படைப்பு நோக்கத்தையும், படைப்பின் தன்மையையும் வாழ்க்கைச் சிக்கல்கள் குறித்த கண்ணோட்டத்தையும் உணர்த்துவதுதான் முன்னுரை ஆகும்.
- தன்னுடைய படைப்புகளுக்குத் தானே முன்னுரைகள் எழுதிக்கொள்ளும் ஜெயகாந்தன், பின்னர் வரவிருக்கும் கேள்விகளுக்கும் பதில்களாக அவற்றை ஆக்கிவிடுவார்.
- எடுத்துக்காட்டாக 'பாரீசுக்குப் போ' என்ற புதினத்தின் முன்னுரையில் "ஒரு தேசத்தின் ஒரு நாகரிகத்தின் ஒரு காலத்தின் ஒரு வளர்ச்சியின் ஒரு வாழ்க்கையின் உரைகல் இலக்கியம்... ஓர் எழுத்தாளன் ஆத்ம சுக்தியோடு எழுதுகிறானே அது கேவலம் பிழைப்போ அல்லது ஒரு தொழிலோ அல்ல. அது ஒரு தவம். நீங்கள் கதை என்று நினைத்துக் கொண்டிருக்கிறீர்களே அது காலத்தின், ஒரு வாழ்க்கையின் சாசனம்" என்று குறிப்பிடுகிறார்.

**9. தீவக அணியைச் சான்றுடன் விளக்குக.** *இ [PTA - 1]

| | |
|---|---|
| அணி இலக்கணம் | செய்யுளின் ஓரிடத்தில் நின்ற ஒரு சொல் அச்செய்யுளின் பல இடங்களிலுள்ள சொற்களோடு சென்று பொருந்திப் பொருளை விளக்குவது தீவக அணி ஆகும். |
| சான்று | *"சேந்தன வேந்தன் திருநெடுங்கண், தெவ்வேந்தர்<br>ஏந்து தடந்தோள், இழிகுருதி - பாய்ந்து<br>திசைஅனைத்தும், வீரச் சிலைபொழிந்த அம்பும்<br>மிசை அனைத்தும் புள்குலமும் வீழ்ந்து."* |
| பாடலின் பொருள் | அரசனுடைய கண்கள் கோபத்தால் சிவந்தன. அதே அளவில் பகைமன்னர்களின் தோள்கள் சிவந்தன; குருதி பாய்ந்து திசைகள் சிவந்தன; வலிய வில்லால் எய்யப்பட்ட அம்புகள் சிவந்தன; குருதி மேலே வீழ்தலால் பறவைக் கூட்டங்கள் யாவும் சிவந்தன. |
| அணிப் பொருத்தம் | முதலில் நிற்கும் 'சேர்ந்தன' என்ற சொல் பாடலில் வருகின்ற கண்கள், தோள்கள், திசைகள், அம்புகள், பறவைகள் ஆகிய அனைத்தோடும் பொருந்தி 'சிவந்தன' என்ற பொருளை தருவதால் தீவக அணி எனப்படுகிறது. |

**10. தன்மையணி குறித்து எழுதுக.** *இ [MDL - 19]

| | |
|---|---|
| அணி இலக்கணம் | எவ்வகைப்பட்ட பொருளாக இருந்தாலும் இயற்கையில் அமைந்த அதன் உண்மையான இயல்புத் தன்மையினைக் கேட்பவர் மனம் மகிழுமாறு உரிய சொற்களை அமைத்துப் பாடுவது தன்மை அணி ஆகும். |
| சான்று | *"மெய்யிற் பொடியும் விரித்த கருங்குழலும்<br>கையில் தனிச்சிலம்பும் கண்ணீரும் - வையைக்கோன்<br>கண்டளவே தோற்றான், அக்காரிகைதன் சொற்செவியில்<br>உண்டளவே தோற்றான் உயிர்."* |
| பாடலின் பொருள் | உடம்பு முழுவதும் தூசியும், விரிந்த கருமையான தலைமுடியும், கையில் ஒற்றைச் சிலம்போடு வந்த தோற்றமும் அவளது கண்ணீரும் கண்ட அளவிலேயே வையை நதிபாயும் கூடல் நகரத்து அரசனான பாண்டியன் தோற்றான். அவளது சொல், தன் செவியில் கேட்டவுடன் உயிர் நீத்தான். |
| அணிப் பொருத்தம் | கண்ணகியின் துயர் நிறைந்த தோற்றத்தினை இயல்பாக உரிய சொற்களில் கூறியதால் இது தன்மை நவிற்சி அணி எனப்படும். |

**11. நிரல் நிரை அணி என்றால் என்ன? சான்றுடன் விளக்குக.** *இ [PTA – 4, SEP – 2020]

| | |
|---|---|
| அணி இலக்கணம் | சொல்லையும் பொருளையும் வரிசையாக நிறுத்தி அவ்வரிசைப்படியே இணைத்துப் பொருள் கொள்வதே நிரல் நிறை அணி எனப்படும். |
| சான்று | "அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை<br>பண்பும் பயனும் அது." |
| பாடலின் விளக்கம் | இல்வாழ்க்கை அன்பும் அறனும் உடையதாக விளங்குமானால், அந்த வாழ்க்கையின் பண்பும் பயனும் அதுவே. |
| அணிப் பொருத்தம் | இக்குறளில் அன்பும் அறனும் என்ற சொற்களை வரிசையாக நிறுத்தி, பண்பும் பயனும் என்ற சொற்களை முறைப்படக் கூறியுள்ளமையால் இது நிரல்நிறை அணியாகும். |

## நெடுவினா

**1. கருணையனின் தாய் மறைவுக்கு, வீரமாமுனிவர் பூக்கள் போன்ற உவமைகளாலும் உருவக மலர்களாலும் நிகழ்த்திய கவிதாஞ்சலியை விவரிக்க.** *செ-2 *[MAY – 2022, SEP – 2021, PTA – 3]*

| குறிப்புச்சட்டகம் |
|---|
| ❋ முன்னுரை<br>❋ உவமைகள்<br>❋ உருவகங்கள்<br>❋ கருணையன் மீது இயற்கை கொண்ட பரிவு<br>❋ முடிவுரை |

**முன்னுரை**

தாய் என்னும் தீபம் சுடர்விட்டு எரிவதால்தான் பாசம் எனும் ஒளி இந்த உலகில் இன்னமும் மின்னுகிறது. தாயை இழந்த கருணையனின் அவலச்சுவையைக் காட்டுகின்றார் வீரமாமுனிவர்.

**உவமைகள் :**

**❋ சவக்குழி – அழகிய மலர்ப்படுக்கை :**

கருணையன், தன் மலர் போன்ற கையைக் குவித்து, "பூமித்தாயே! என் அன்னையின் உடலை நீ அன்போடு காப்பாயாக" என்று வேண்டி, தன் அன்னையின் உடலை மண் இட்டு மூடி அடக்கம் செய்தான். அதன்மேல் மலர்களையும் கண்ணீரையும் ஒரு சேரப் பொழிந்தான்.

**❋ மனம் வாடுதல் - இளம் பயிர் வாடுதல் :**

இளம்பயிர் வளர்ந்து முதிர்ந்து நெல்மணிகளைக் காணும் முன்னே மழைத்துளி இல்லாமல் வாடிக் காய்ந்துவிட்டதைப்போல, கருணையன் வாடுவதாக வீரமாமுனிவர் கூறுகிறார்.

**❋ கருணையன் துயரம் - மரக்கிளையிலிருந்து பறிக்கபட்ட மலர், அம்பு துளைத்த புண் :**

மரக்கிளையிலிருந்து பறிக்கப்பட்ட மலரைப்போலக் கருணையனின் மனம் வருந்தியது. தீயையும் நஞ்சையும் முனையில் கொண்ட அம்பு துளைத்த புண்ணின் வலியைப்போல அவரின் துயரம் இருந்தது என வீரமாமுனிவர் கூறுகிறார்.

**❋ அன்னையின் பிரிவு – துணையைப் பிரிந்த பறவை :**

கருணையன் துணையைப் பிரிந்த பறவைபோல, தன் அன்னையைப் பிரிந்து வாடுகிறான். சரிந்த வழுக்கு நிலத்திலே தனியே விடப்பட்டு வழிதெரியாமல் அலைபவன்போல வாடுகிறான் என வீரமாமுனிவர் குறிப்பிடுகிறார்.

**உருவகங்கள் :**

**❋ தாயின் சொற்கள் - மழைநீர் :**

தாயின் வாயாலே மணிபோலக் கூறும் உண்மையான சொற்களையே மழைநீராக உட்கொண்டு வாழ்ந்ததாகக் கருணையன் கூறுகிறான்.

**❋ தாயின் அரவணைப்பு – மணிமாலை :**

தாயின் மார்பிலே ஒரு மணிமாலையென அசைந்து, அழகுற வாழ்ந்ததாக கருணையன் கூறுகிறான்.

**கருணையன் மீது இயற்கை கொண்ட பரிவு :**

கருணையனின் புலம்பலைக் கேட்டு, தேன்மலர்கள் பூத்த மரங்களில் உள்ள, மணம் வீசும் மலர்களும், மலர்ந்த சுனையிலுள்ள பறவைகளும், வண்டுகளும் அழுவன போன்று கூச்சலிட்டன.

**முடிவுரை**

கருணையனின் தாய் மறைவுக்கு, இயற்கையில் நிகழும் நிகழ்வுகளை உவமைகளாகவும் உருவகங்களாகவும் எடுத்துக்கூறி வீரமாமுனிவர் கவிதாஞ்சலி செலுத்தியுள்ளார். வீரமாமுனிவரின் சொல்லாற்றலால் கருணையனின் தவிப்பை உணரமுடிகிறது.

2. ஜெயகாந்தன் நினைவுச் சிறப்பிதழை, வார இதழ் ஒன்று வெளியிட இருக்கிறது. அதற்கான ஒரு சுவரொட்டியை வடிவமைத்து அளிக்க. *உ [AUG – 2022, PTA - 2]

**எழுத்துலகப் பிதாமகன்
ஜெயகாந்தனின் நினைவுச்
சிறப்பிதழ் வெளியீட்டு விழா**

**ஜெயகாந்தனின் பிறந்தநாளில்
கடலூர் மாநகரில் ஓர் இனிய விழா**

**தமிழை நேசிக்கும் அனைவரும் வருக...!
தமிழின்பம் பெறுக...!!**



**நாள் : 24.04.2022**
**நேரம் : காலை 10 மணி**
**இடம் : கண்ணதாசன் அரங்கம் - கடலூர்**

தாரகை மாத இதழ் ஜெயகாந்தன் நினைவுச் சிறப்பிதழ் வெளியீட்டு
**விழாவின் சிறப்பு நிகழ்வுகள்**
தலைமை : எழுத்தாளர் ஜெயமோகன்
வெளியிடுபவர் : எழுத்தாளர் எஸ். இராமகிருஷ்ணன்
முதல் பிரதியைப் பெற்றுக் கொள்பவர் : எழுத்தாளர் ரவி சுப்பிரமணியன்
ஜெயகாந்தன் நினைவுச் சிறுகதைப் போட்டியில் கலந்து கொண்டு வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசளிப்பவர் : எழுத்தாளர் நாஞ்சில் நாடன்
**சிறப்புப் பட்டிமன்றம்**
ஜெயகாந்தனின் புகழுக்குப் பெரிதும் காரணம் அவரின்
சிறுகதைகளே... நாவல்களே... திரைப்படங்களே...
நடுவர்: எழுத்தாளர் சு. வெங்கடேசன்
வாதிடுவோர்: புகழ்பெற்ற தமிழக எழுத்தாளர்கள்
நிகழ்வின் முடிவில்
ஜெயகாந்தன் எழுதி இயக்கிய
உன்னைப் போல் ஒருவன்
திரைப்படம் திரையிடப்படும்

அனைவரும் வருக...! ஓர் இனிய அனுபவத்தைப் பெறுக...!

**அழைப்பின் மகிழ்வில்
தாரகை மாத இதழ் விழாக்குழுவினர் – கடலூர்**

**3. அழகிரிசாமியின் 'ஒருவன் இருக்கிறான்' சிறுகதையில் மனிதத்தை வெளிப்படுத்தும் கதை மாந்தர் குறித்து எழுதுக.**
*து *[MAY - 2022,PTA – 3, MDL - 19]*

| குறிப்புச்சட்டகம் |
|---|
| ❋ முன்னுரை |
| ❋ குப்புசாமி வீரப்பனின் நட்பு |
| ❋ குப்புசாமி வைத்தியத்திற்காக சென்னை செல்லுதல் |
| ❋ வீரப்பனின் கடிதம் |
| ❋ ஆறுமுகத்தின் மனிதம் |
| ❋ பக்கத்து வீட்டுக்காரரிடம் வெளிப்பட்ட மனிதம் |
| ❋ முடிவுரை |

**முன்னுரை**

கு. அழகிரிசாமி எழுதிய 'ஒருவன் இருக்கிறான்' சிறுகதையில் மனிதத்தை வெளிப்படுத்தும் மாந்தர்கள் பற்றி இக்கட்டுரையில் விரிவாகக் காண்போம்.

**குப்புசாமி வீரப்பனின் நட்பு :**

- காஞ்சிபுரத்தில் **குப்புசாமியும் வீரப்பனும்** உயிர் நண்பர்களாக இருந்தனர். குப்புசாமிக்கு அம்மா, அப்பா இல்லை. தாய்மாமன் வீட்டில் தங்கி, ஒரு சைக்கிள் கடையில் கூலி வேலை பார்த்து வந்தான்.
- குப்புசாமி நோய் காரணமாக வேலை இழந்து, தாய்மாமன் வீட்டில் துன்பப்பட்டான். அவர்கள் எதிர் வீட்டில் இருக்கும் வீரப்பன் அவ்வப்போது அவனை அழைத்து சாப்பாடு போடுவான்.
- வீரப்பன் ஒன்றும் வசதியானவன் அல்லன். ஒரு சிப்பந்தியாக வேலை செய்பவன்தான். வருமானம் இல்லாத நாட்களிலும், கடன் வாங்கியாவது குப்புசாமிக்கு உதவி செய்து வந்தான்.

**குப்புசாமி வைத்தியத்திற்காக சென்னை செல்லுதல் :**

- குப்புசாமிக்கு நோயும் சரியாகவில்லை. வேலையும் இல்லை. தன் நோய்க்கு வைத்தியம் பார்ப்பதற்காக சென்னையில் உள்ள சித்தி வீட்டிற்கு வந்தான். இங்கேயும் யாரும் அவனை ஒரு பொருட்டாகவே கருதவில்லை. அவனை அரசாங்க மருத்துவமனையில் கடமைக்குச் சேர்த்துவிட்டனர்.
- இந்நிலையில் வீரப்பன், ஆறுமுகம் என்பவர் சென்னை செல்கிறார் என்பதறிந்து, மூன்று ரூபாய் கடன் வாங்கி, அதையும் ஒரு கடிதத்தையும் குப்புசாமியிடம் கொடுக்கச் சொன்னான்.

**வீரப்பனின் கடிதம் :**

- அக்கடிதத்தில், தன் உயிர் நண்பனை பிரிந்து மிகவும் வாடுவதாகவும், அவனை காணமுடியாமல் இருப்பதை எண்ணி வருந்துவதாகவும் எழுதியிருந்தான். தன் நண்பனுக்காக இறைவனை வேண்டிக்கொள்ளவதாக கூறினான். ஆறுமுகம் சென்னை வருவதை அறிந்து, கடனாக வாங்கிய மூன்று ரூபாய் பணத்தையும் இக்கடிதத்தையும் கொடுத்துள்ளேன் என எழுதியிருந்தான்.
- நட்புக்கு இலக்கணமான வீரப்பனின் உள்ளத்தையும் அதில் ஒளிந்திருக்கும் வெகுளித்தனமான மனிதத்தையும் நாம் உணரலாம்.

**ஆறுமுகத்தின் மனிதம் :**

- குப்புசாமியைப் பார்க்க வந்த ஆறுமுகம் வீரப்பனின் மூன்று ரூபாய் மற்றும் கடிதத்தை மட்டும் கொடுத்துச் செல்லாமல் தன்னுடைய குழந்தைகளுக்காக வாங்கிய இரண்டு சாத்துக்குடிப் பழங்களையும் ஒரு ரூபாய் பணத்தையும் சென்னையில் பக்கத்து வீட்டுக்காரரிடம் கொடுத்துச் செல்கிறான்.
- ஆறுமுகம் குப்புசாமியோடு பெரிய நட்பில் இல்லை என்றாலும் ஆறுமுகத்திடமிருந்து வெளிப்படும் மனிதம் பிறருக்காக கலங்கும் மனதை நமக்கு எடுத்தியம்புகிறது.

**பக்கத்து வீட்டுக்காரரிடம் வெளிப்பட்ட மனிதம் :**

- பெயர் சொல்லப்படாத இக்கதாபாத்திரம் கதையின் தொடக்கத்தில் மனைவியின் இரக்கக் குணத்திற்கு எதிரானவராகவும் கல்நெஞ்சுக்காரராகவும் சொல்லப்படுகிறது.
- ஆனால் கதையின் இறுதியில் வீரப்பன் மற்றும் ஆறுமுகம் குப்புசாமியின் மேல் வைத்திருந்த நட்பின் நுட்பத்தை உணர்ந்து மனம் மாறிக் குப்புசாமியை மருத்துவமனைக்குச் சென்று பார்க்க வேண்டும் என கூறுவது அவருக்குள்ளும் மனிதம் இருப்பதை வெளிப்படுத்துகிறது.

**முடிவுரை**

எல்லா மனிதர்களுக்குள்ளும் மனிதம் மறைந்திருக்கும். மற்றவர்களிடமிருந்து வெளிப்படும் மனிதத்தைக் கண்டு நம்முள் இருப்பதும் வெளிப்படும். இக்கதையைப் படிக்கும் ஒவ்வொருவருக்கும் குப்புசாமிக்கு உதவிட வேண்டும் என்ற எண்ணம் எழுவதைத் தவிர்க்க இயலாது.

## கூடுதல் வினா

**4. எழுத்தாளர் ஜெயகாந்தனின் 'இன்னுமொரு முகம்' குறித்தும் அவரிடம் 'தொடுத்த கேள்விகளுக்கு அவர் கொடுத்த பதில்களுமாக' ஜெயகாந்தன் பற்றி நீங்கள் அறிந்தவற்றை விளக்குக.** *உ *[PTA - 6]*

| குறிப்புச்சட்டகம் |
|---|
| ❋ முன்னுரை |
| ❋ ஜெயகாந்தனின் பன்முகத்தன்மை |
| ❋ ஜெயகாந்தனின் 'இன்னுமொரு முகம்' கவிதை |
| ❋ ஜெயகாந்தனின் அறிவார்ந்த எதிர்வினை |
| ❋ முடிவுரை |

**முன்னுரை**

அனைத்து துறைகளிலும் தனது முத்திரையைப் பதித்த ஜெயகாந்தன் அவர்களின் தனித்தன்மையைப் பற்றி விரிவாகக் காணலாம். கருத்தாழமும், சுவையும் கொண்ட படைப்புகளைத் மக்களிடம் கொண்டு சேர்க்குமாறு இவரது நடையும் போக்கும் தனித்தன்மை வாய்ந்தவை.

**ஜெயகாந்தனின் பன்முகத்தன்மை :**

- ❋ சமகால நிகழ்வுகளில், சமகால மொழியில், சமகால உணர்வுகளை அறிந்து தடம் பதித்தவர்.
- ❋ சிறுகதை, புதினம், திரைப்படம், முன்னுரை, பேட்டி என பல துறைகளில் தடம் பதித்துள்ளார்.
- ❋ சமூக அமைப்பின் முரண்பாடுகளை எழுத்திலே அப்பட்டமாகக் காட்டி, நேர்முக எதிர்முக விளைவுகளைப் பெற்றவர். உள்ளடக்க விரிவால் மனிதாபிமானத்தை வாசக நெஞ்சங்களில் விதைத்தவர்.

**ஜெயகாந்தனின் 'இன்னுமொரு முகம்' கவிதை :**

- ❋ ஜெயகாந்தன் சில கவிதைகளையும், திரைப்பாடல்களையும் படைத்திருக்கிறார். அவரது படைப்பாற்றலின் இன்னொரு பக்கம் அதுவாகும்.
- ❋ பட்டுக்கோட்டைக் கல்யாணசுந்தரம் பற்றிய அவரின் கவிதை,

*"எண்ணமும் எழுத்தும் உயர்ந்திருக்கும் - ஏழை*
*கண்ணீரும் பாடலில் கலந்திருக்கும்.*
*பண்ணொடு சந்தமும் பாய்ந்து வரும் - பழைய*
*மண்ணின் வாடையும் சேர்ந்துவரும்"*

- ❋ இப்பாடல் மூலம் பாமரனைப் பாடுவதிலும், எழுதுவதிலும் இருவருமே ஒரே கருத்துடையவர்கள் என்பதில் எவ்வித மாற்றுக் கருத்துமில்லை என்பது தெளிவாகிறது.

**ஜெயகாந்தனின் அறிவார்ந்த பதில்கள் :**

- ❋ **சிறுகதையில், தனித்தன்மை வாய்ந்த திறமை வெளிப்படுத்த கடைப்பிடிக்கும் நுணுக்கங்கள் யாவை?**
  "நுணுக்கமா? அப்படித் தனியாக நான் எதையும் கையாளுவதாக எண்ணிச் செய்வதில்லை. என் மனத்தால், புத்தியால், உணர்வால் நான் அறிந்து அனுபவப்படாத எதைப் பற்றியும் நான் எழுதினதில்லை. என்னைப் பெரிதும் பாதிப்பவை மனித வாழ்வின் பிரச்சனைகளே. என்னைப் பொறுத்தவரையில் எழுத்தாளனுக்கு அவனுடைய படைப்புகளுக்கு அடிப்படையாக அமைய வேண்டியது மனித வாழ்வின் பிரச்சனைகளே" என ஜெயகாந்தன் பதிலளித்தார்.
- ❋ **சுதந்திர இந்தியாவின் மகத்தான சாதனை மற்றும் மிகப் பெரிய சவால் எது?**
  "மகத்தான சாதனை மற்றும் மிகப் பெரிய சவால் - பெற்ற சுதந்திரத்தைப் பேணிக்காத்தது."
- ❋ **தேசம் செல்லும் பாதை மற்றும் எழுத்துலகின் போக்கு எப்படி இருக்கிறது?**
  "காலந்தோறும் மாற்றங்களைப் பார்க்கிறோம். நாமும் மாறிக்கொண்டே இருக்கிறோம்."

**முடிவுரை**

ஜெயகாந்தனின் சிந்தனைகள் சமூகத்தில் அவரைத் தனித்து அடையாளம் காட்டுகின்றன. பள்ளிக்கல்வி அளவே படித்திருந்த இவர் தமிழ் இலக்கிய உலகில் மிகப் பெரிய ஆளுமையாகப் பார்க்கப்படுகிறார். வாழ்க்கையை தம் வார்த்தைகளில் அழகுறப் படைத்துள்ளார்.